எங்கள்

முற்றம்

கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்

ஜனவரி 2026

விலை ரூ. 100/=

07.12.2025 மாலை யாழ். எங்கட புத்தகங்கள் இல்லத்தில் தூண்டி கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில், 'சாந்தி வரதராஜன்' அவர்களின் 'எல்லாம் இழந்த பின்னும்' சிறுகதைத் தொகுப்பின் நூல் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வின் பதிவுகள்...

14.12.2025 அன்று கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் அவர்களின் ஜீவந்தியின் 481 ஆவது வெளியீடான "நினைவழியா நூல்கள்" வெளியீடும் ஜீவநதியின் 273வது புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் ஆளுமை சிறப்பிதழ் வெளியீடும் நிகழ்வின் பதிவுகள்...

27.11.2025 அன்று சுழிபுரம் கே.ஏ.எஸ்.சத்தியமனையில் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் 36வது ஆண்டு நினைவு நிகழ்வு

20.12.2025 அன்று மட்டுவில் கமாலாசினி வித்தியாலய சுப்பையா அரங்கில் சரசாலை பொதுநூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்புவிழாவின் பதிவுகள்

ISSN NO : 2783-8889
Enkal Muttam
Magazine for Art Litature and Social science
இதழ் : 10 ஜனவரி 2026

எங்கள் முற்றம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

ஆசிரியர் : அழ. பகீரதன்

ஆடுதல், பாடுதல், சித்திரம் – கவி
யாதி யினைய கலைகளில் – உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் – அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் – சில
நாளினில் எய்தப் பெறுகுவார் – அவர்
காடு புதரில் வளரினும் – தெய்வக்
காவனம் என்றதைப் போற்றலாம்!
–பாரதி

ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளர்களின் கற்பனையே. ஆக்கங்களைச் சுருக்கவும், மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துக்கள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துக்கள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான மறுமலர்ச்சி மன்றம், மக்கள் கலை இலக்கியப் பேரவை என்பன பொறுப்பாகாது.

இதழ் வடிவமைப்பு: சிவ பரதன்

நிழற்படங்கள், அட்டை வடிவமைப்பு: எஸ். அனுஜன்

ஆலோசகர்கள் :

மறுமலர்ச்சி மன்ற நம்பிக்கைச் சபை உறுப்பினர்கள்

சு. சுந்தரசிவம் – தலைவர்
கோ. சுதாகரன்– செயலாளர்
அ. பகீரதன் – பொருளாளர்
சோ. தேவராஜா
ந. சிவசுப்பிரமணியம்
சு. யாதவன்
ச. தனுஜன்

அச்சுப் பதிவு :
ஜே.எஸ். பிறின்ற்றேஸ்
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு

வெளியீடு :

மக்கள் கலை இலக்கியப் பேரவை
இல 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்.
மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி, பண்டத்தரிப்பு.

Email : marumalarchy1972@gmail.com
T.P : +94 77 104 1945

'எங்கள் முற்றம்' 2026 ஆம் ஆண்டின் முதல்இதழாக பத்தாவது இதழ் உங்கள் முன் விரிகிறது.

திக்வா புயலின் கோரப் பிடியில் இருந்து மீளெழ நாடு முயன்றுவரும் இத்தருணத்தில் அதன் அதிர்வுகளைப் பிரதிபலிப்பதாக இந்த இதழ் அமைந்துள்ளது.

உறவுகளையும் நண்பர்களையும் பிரிந்த உள்ளங்களோடு துயரினைப் பகிர்வதோடு உயிர் நீத்த பொதுமக்களுக்கும் இதய பூர்வ அஞ்சலி செலுத்திநிற்கின்றோம்.

மீட்புப் பணியின் போது எதிர்பாராமல் மறைந்த கடற்படை வீரர்களுக்கும் சிரந்தாழ்த்தி இறுதி வணக்கம் செலுத்துகின்றோம்.

இந்த அனர்த்தத்தில் மக்களுக்கு நிவாரணங்களை அறிவித்து அவற்றை நெறிப்படுத்தும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களதும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களதும் அயராத உழைப்புக்கும் அரச ஊழியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவைக்கும் உதவி வழங்கும் நாடுகளுக்கும் படைவீரர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்னொரு அனர்த்தம் நேராது பாதுகாக்க வேண்டிய தூரநோக்கோடு மீள் கட்டுமானங்களை செய்வதோடு மண்சரிவுகளிலிருந்து பாதுகாக்கும் வகையில் மலையக மக்களுக்கான குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பினையும் ஏற்று அரசு தொடர்ந்து முன்னேக்கிச் செல்லவேண்டியதின் அவசியத்தினையும் வலியுறுத்துகின்றோம்.

வாசக நேயர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்தும் தைப்பொங்கல் வாழ்த்தும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த இதழில் அட்டையில் ஈழத்து நவீனகவிதையின் முன்னோடிகளில் ஒருவரான மஹாகவியின் 99வது பிறந்தநாள் நினைவாக அவரது நிழலுருவை அட்டைப்படமாக பொறித்துள்ளதோடு அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் அவரது நூற்றாண்டு விழா கொண்டாடப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றோம்.

ஆசிரியர்

உள்ளே....

தென்புலத்தார் தொழுதேற்றல்

- ஏ. ஜே. கனகரத்னாவும் ஒரு மகப்பேற்றுச் சம்பவமும் – இ. கிருஷ்ணகுமார் –17
- வீரகாவியம் ‘ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை – சோ.தேவராஜா – 26
- மஹாகவியின் கிராமம் – எம். ஏ. நு.:மான் – 20

கவிதைகள

- சூறைக் காற்றையும் மானிடம் வென்றது – கவிமேகம் காளமேகம் – 03
- ஒன்றுகூடி மீட்டெடுப்போம்– சத்தியமலர் இரவீந்திரன் –04
- காதலிக்கத் தெரியாதவன் – துவாகரன் – 16
- குறுங்கவிகள் – அழ. பகீரதன் – 16
- ஓம் அப்ப நீ மனிதன்தான் – திவ்வி – 19
- பிள்ளை எங்கே? – செண்பகன் –33
- குலசாமியடா நீ – சிவா முருகுப்பிள்ளை –33
- போதை இல்லாப் பூமி – இலட்சுமி புத்திரன் – 38
- போதை விசரி – குழந்தை இரா.இராஜேந்திரன் – 40
- காதலில்லாக் கலியாணம் – இதயராசன் – 40

சிறுகதைகள்

- அம்மா இனி என்ன செய்ய – சாதாரணன் – 25
- என் உண்மைக் காதல் – செல்லத்துரை ஜெயராசா –34

மொழியாக்கம்

- துயரப்படவேண்டாம் ஏற்பாடு செய்யுங்கள் – ஜோன் ஹிங் – 05

ஆய்வு

- இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம் சில குறிப்புகள் – கலாநிதி சு. குணேஸ்வரன் – 11

தொடர்

- வேதாளமும் முருங்கையும் – அசன் –30

இளையோர் இலக்கியம்

- அச்சம் இல்லை –சிறுவர் நாடகம் திவ்வியராஜன் – 39

மூத்தோர் படையல்

- மீண்டும் தொடங்கும் மிடுக்கு – மஹாகவி உருத்திரமூர்த்தி – 07

பயில்நிலம்

- கண்கள் ஏதோ – தர்மிகா உமாசுதசர்மா – 24

பதிவு

- திக்வா புயல் இறுதியில் மனிதமே வென்றது – சிவா முருகுப்பிள்ளை – 08

அட்டையில் :

மஹாகவி

(09.01.1927– 20.06.1971)

அவர்களின் 99ஆவது பிறந்த நாள் நினைவுகூரும் வகையில் நூற்றாண்டை நோக்கி இவ்விதழ் காணிக்கையாக்கப்படுகிறது.

திக்வா புயல் பாதிப்புகள்



சூறைக்காற்றையும் மானிடம் வென்றது

கவிமேகம் காளமேகம்

காற்று
கூற்றம் என வந்தது
பேரிடி பெருமழை பெரு வெள்ளம்
மலையோடு விழுந்தன அருவிகள்.
அவலக்குரலுக்கும் பொழுதின்றி
உயிரோடு புதைதந்தனர் மக்கள்–மண்ணுள்
உயிரோடு புதைந்தனர் மக்கள்.
பல நூறு ஆண்டுகள் நெடிதாக வாழ்ந்த மரங்களும்
வேர்கள் வெளித்தள்ள பிணமாகி மிதந்தன ஆற்றில்
அள்ளுண்ட மனிதர்கள்
அவலக்குரல் அடங்க அமிழ்ந்தே போயினர்.
வீடுகள் அமிழ்ந்தன, மிருகங்கள் அமிழ்ந்தன
சிறுக சிறுக சேமித்த பொருள்கள் எவையும் மிஞ்சவில்லை.
பெட்டகத்தில் பத்திரமாய் பூட்டி வைத்த புதுமண சேலைகள்
வேட்டிகள் நகைகள் மாலைகள் தோடுகள் எவற்றைச் சொல்ல?
சின்னம் சிறுசுகள் அணைத்து விளையாடிய விளையாட்டு பொம்மைகள்
புத்தகம் கொப்பிகள் பென்சில்கள் எல்லாம் அழிந்தன.
மீட்புப் பணியில் கிடைத்த பிணங்களில் ....ஓ...
கையில் பென்சிலோடு புதையுண்டு போன சிறுவன்.
குழந்தைகளை கட்டியணைத்துக் கிடந்த கர்ப்பிணித்தாய்...
இலங்கை தேசத்தில் டித்வா புயல் கிறுக்கிய காட்சிக் கொடுமைகள்.
எங்கள் இலங்கை தேசத்தின் இலட்சோப இலட்சம் மக்களின்
கனவுகள் புதையுண்டு போயின.
கனத்த இதயங்களோடு
ஆட்சியாளர் கூடிப்பேசினர்.
கண்கள் கலங்கிய தேசத்தலைவனின் ஆணைகள் பறந்தன.
முப்படைகளும் தீரமுடன் களத்தில் இறங்கின.
மக்களுக்கு எதிரான போருக்கல்ல... இது மக்களை காக்கும் போர்.
பல வீரர்கள் தங்கள் உயிரையும் இழந்தனர்.
“ஒரே தேசமாய் மீண்டெழுவோம்”
என்று சூழுரைத்தனர் மக்கள்.
சிங்களம், தமிழ், இஸ்லாம், புத்தம், இந்து...
எந்த வேறுபாடுகளும் மனிதரை தடுக்கவில்லை.
கைகள் நீண்டன, கால்கள் நீண்டன. ஈர நெஞ்சம் வழிநெடுக நின்றது.
மாத்தறை மனிதர் மலையகம் நோக்கி கூட்டாக நடந்தனர்.
காலி களுத்துறை அம்பாந்தோட்டை பலதிசையிருந்தும்
கண்டிக்கும் கம்பளைக்கும் கருவிகள் சுமந்து வலிதாய் நடந்தனர்.
உணவுகள் சேர்த்து வடக்கின் இளைஞர் துடுக்காய் விரைந்தனர்.
தேசம் முழுதும் வெள்ளம்–ஆயினும்
மலையாய் உயர்ந்தது மனிதம்.
பூமிப்பந்து ஒன்று.
அண்டை நாடுகள் வானிலும் கடலிலும் விரைந்து வந்தன.
தூரநாடுகளும் பறந்து வந்து துயர்கள் துடைத்தன
புலம்பெயர் உறவுகள் பழங்கதை துறந்து
பேரிடர் நீங்க நிதிகள் தந்தனர்.
மனிதம் உயர்ந்தது
கருணை விரிந்தது
மானிடம் வென்றது.
(சிறு குறிப்பு: சூறாவளிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வேன் –சிறைக்கு அனுப்புவேன் என்கிறான் ஒரு விசரன்)

கவிதை

ஒன்றுகூடி மீட்டெடுப்போம்

சத்தியமலர் இரவீந்திரன்

செங்கம்பளம் சூழ
சீர்பெறும் நாடென பெருமை பூத்து நிற்க,
சீர்கெட்ட காலநிலை
சிதைத்தெடுக்கும் என்றா நினைத்திருந்தோம்?

சமுத்திரத்தின் சிப்பிக்குள்,
முத்தாய் முகிழ்த்திருந்த
மலையகமே!
பச்சை மணி மரகதமே!
தேசத்தின் அடையாளமே!
ஏன் புரண்டு போனாய்?
இது ஒரு கல்லறைத் தாக்குதல்.
மேல் இருந்து வந்த மரணம்.
சத்தம் கேட்காமல் சாய்த்த தருணம்.
பழுது பார்க்க முடியாத இருளில்
ஒரே குழியாய் புதைந்தழிந்ததோ?
உயிருடன் இருந்த மனிதர்கள்
உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகள்
வயிற்றின் சிசுக்கள்...
அசைக்கமுடியா காலுடன்
நகர முடியா முதியோர்
எல்லாம் ஒரே மூச்சில்
மண்ணுக்கடியில்
புதைந்ததழிந்து போனதுவே!
காற்று,
ஒரு தாயின் மூச்சைப் போல இருந்தது;
அந்த இரவில் அது
கோபம்கொண்ட வாளாகி
வீடுகளின் நினைவுகளை
வெட்டி வீசியதேன்?

பிளந்த வீடு
கரைந்த சுவர்கள்
பல தலைமுறைகள் சுமந்த
ஏழ்மையின் கடைசி மூச்சுடன்
தாண்டழிந்து போனதுவோ?
நீரின் மேல்.

உயிரில்லாத பொம்மைகள்...
உயிருள்ள குழந்தைகள் மண்ணின் கீழே...
பாறையின் இடுக்கில்
புரண்டு கிடக்கும் கதைகள்,
முழங்காத கத்தல்கள், கதறல்கள்
நடக்காத கனவுகள்
அடங்கியிருக்கும் உணர்வு
யார் சொல்வர்?

அவர்கள் அழுதார்களா?
என்ன நினைத்தார்கள்?
மண் பெயர்ந்து கல்லுடன் விழுந்து
வடிவம் மாறிய மலைகள்
இன்றும் சிரிப்பதுபோல் நிற்கிறது;
அதன் அடியில் கிடப்பது
இறந்தவர்கள் அல்ல
நிறைவேறாத வாழ்க்கைகள்,
தொடங்க முடியாத நாளை,
கூச்சலிட முடியாத ஏக்கங்கள்.

நீரின் ஏற்றத்தில்
நாம் இழந்தது
செருப்புகளும், பொருட்களும் அல்ல
நம் வாழ்க்கையின் பாதைகளை.
வெள்ளம் ஏந்தியது
குடிசைகளின் கூரைகளை மட்டும் அல்ல
எத்தனை குழந்தைகளின்
புத்தக கனவுகளையும் தான் .

ஒன்றுகூடி மீட்டெடுப்போம்!
காலம் சுழன்றோடி
மீண்டெழுந்த கதை சொல்லட்டும்!

மொழியாக்கம்
கடிதம்

துயரப்பட வேண்டாம், ஏற்பாடு செய்யுங்கள்!

நூறு ஆண்டுகளுக்கு முன்பு, இதே நாளில் யூட்டா மாநில அரசால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட தொழிலாளர்களின் பாடகர் ஜோ ஹில் எழுதிய இரண்டு கடிதங்கள்.

தமிழில் : நெய்தலினி – பூங்குழலி

நூறு ஆண்டுக்கு முன்பு, இதே நாளில் யூனியன் அமைப்பாளரும், பாடலாசிரியருமான ஜோ ஹில்லுக்கு யூட்டா மாநில அரசு மரண தண்டனையை நிறைவேற்றியது. "தேர் இஸ் பவர் இன் எ யூனியன்", "கேசிஜோன்ஸ்–யூனியன்ஸ்கேப்" போன்றபாடல்களை வழங்கிய ஜோ ஹில்லை அன்று மௌனமாக்கியது யூட்டா மாநிலம்.

இப்படிக்கு,
Uploaded image
ஜோ ஹில்
துயரப்பட வேண்டாம், ஏற்பாடு செய்யுங்கள்!
இப்படிக்கு,
ஜோ ஹில்

ஜோயல் ஹாக்லண்ட் 1879 இல் ஸ்வீடிஷ் பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். தொழிலாளர் பேரணிகளிலும், மறியல் போராட்டங்களிலும், அவர் பிரதானமானவராகத் திகழ்ந்தார். அந்த போராட்டங்களில், உலக தொழிலாளர்களின் பாடல் தொகுப்பான "(Little Red Songbook) லிட்டில் ரெட் பாடல் புத்தகத்தில்" உள்ள பாடல்களை உரக்கப் பாடினார். 1914 ஆம் ஆண்டில், ஒரு சந்தேகத்திற்குரிய விசாரணைக்குப்பிறகு, ஒருமளிகைக்கடைக்காரரையும் அவரது மகனையும் கொலை செய்ததாக ஹில் குற்றம் சாட்டப்பட்டார். அவரை விடுவிக்கக் கோரி முன்னெடுக்கப்பட்ட வலுவான பிரச்சாரங்கள் தோல்வியடைந்தன. மூன்று துப்பாக்கி தோட்டாக்கள் ஹில்லின் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்தன. ஆயினும், அந்த தோட்டாக்கள் அவரது நிலையை தொழிலாளர் இயக்கத்தின் சின்னமாக உயர்த்தி உறுதிப்படுத்தின.

பின்வரும் கடிதங்கள்– ஹில் உட்டா(Utah) சிறையில் இருந்தபோது அனுப்பப்பட்டன. ஹேமார்க்கெட் புக்ஸ், வெளியிட்ட (newly released collection) அவரது கடித தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. அக்கடிதங்களில் அவர் தொழிற்சங்க பாடல்களை எழுதுவதற்கான தனது உந்துதலை விளக்குகிறார். பெண்தொழிலாளர்களுக்குமுன்னுரிமை அளிக்க தொழிலாளர் சங்கங்களை வலியுறுத்துகிறார், மேலும் அவரது இறுதி விருப்பங்களை சுருக்கமாக கோடிட்டுக் காட்டுகிறார்.

*****

நவம்பர் 29, 1914
பொறுப்பு ஆசிரியர் :

நீங்கள் பாடல் புத்தகத்தின் மறு பதிப்பை வெளியிடப் போகிறீர்கள் என்பதை "Sol" இல் பார்த்து அறிந்து கொண்டேன். நான் பாடல்களில் சில மாற்றங்களையும், திருத்தங்களையும் செய்துள்ளேன், அதை நான் இத்துடன் இணைக்கிறேன்.

தொழிலாளர் அமைப்பினுள் கேளிக்கைகளுக்கும், பாடல்களுக்கும் இடமில்லை என்று வாதிட்ட பல முக்கிய கிளர்ச்சியாளர்களைப் பற்றி நான் இப்போது நன்கு அறிவேன். தொழிலாளர் ஒற்றுமைக்கு பாடல்கள் மட்டுமே அடிப்படை காரணமாக அமைவதில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்; வர்க்கப் போராட்டம் என்பது மிகவும் தீவிரமான விஷயம் என்பதை நான் உணர்ந்துள்ளேன், ஆனாலும் நான் என்னுடைய முட்டாள்தனமான புரட்சிகர பாடல்களை மேலும், மேலும் உருவாக்க எண்ணுகிறேன்.

ஒரு துண்டுப் பிரசுரம், எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அது ஒருமுறைக்கு மேல் வாசிக்கப்படுவதில்லை, ஆனால் ஒரு பாடல் மக்கள் மனதுக்குள் நுழைந்து, பதிந்து விடுகிறது, அதனால் அது மீண்டும் மீண்டும் பாடப்படுகிறது; ஒரு பாடலில் எளிமையான, பொது அறிவு உண்மைகளை இணைத்து, நகைச்சுவை எனும் உடை அணிவித்து, வறட்சியான பகுதிகளை நீக்கி, பாமர மொழியில் இயற்ற தெரிந்த ஒருவனால், பல தொழிலாளர்களின் மனதுக்குள் நுழைய முடியும். பொருளாதார அறிவியல் பேசும் துண்டு பிரசுரங்களையோ, தலையங்களையோ படிக்கும் அளவுக்கு கல்வி கற்காதவர்களையும், படிக்க நேரம் இல்லாதவர்களையும், படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத அலட்சியமான தொழிலாளர்களையும் இது போன்ற பாடல்கள் சென்றடையும். அவர்களுக்குள் மாற்றத்தை நோக்கிய ஒரு வர்க்க பார்வையை ஏற்படுத்தும்.

பழைய உறுப்பினர்களை தக்க வைத்துக் கொள்ளவும், வர்க்கப் போராட்டத்தில் ஆர்வம் உள்ள புது உறுப்பினர்களை கவர்ந்திழுக்கவும் ஒரு விஷயம் அவசியம், அது தான் பொழுதுபோக்கு. ஸ்வீடனின் கிளர்ச்சியாளர்கள் அந்த உண்மையை உணர்ந்துள்ளனர், அவர்கள் ஒவ்வொரு வாரமும்

இம்முறையிலான சங்க கூட்டங்களை கூட்டுவதை தங்களின் வழக்கமாக கொண்டுள்ளனர். அதன் காரணமாக உலகில் உள்ள வேறு எந்த நாட்டையும் விட பெண் தொழிலாளர்களை அதிக அளவில் சங்கத்தில் இணைப்பதில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். துரதிர்ஷ்டவசமாக ஐக்கிய இராச்சியதில், குறிப்பாக மேற்கு பகுதிகளில் பெண் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அதன் விளைவாகவே நாம் இங்கு வினோதமான ஒரு கால் விலங்கை போன்ற தொரு தொழிற்சங்கத்தை உருவாக்கியுள்ளோம். நமது நடனங்களிலும், கேளிக்கைகளிலும் ஆணுக்கான அதிகாரமும், பங்களிப்பும் அதிகமாக உள்ளது. இது நமது தொன்மையான இயற்கைக்கு மாறானது. பெண்களின் சம பங்களிப்பின்றி உயிர்ப்புள்ள அமைப்பை உருவாக்க இயலாது.

ஆண், பெண் தொழிலாளர்களுக்கு இடையே சமூக உணர்வுடன் கூடிய ஒரு வகையான நல்ல நட்புறவினை ஏற்படுத்துவதே இதன் யோசனை. இது அவர்களுக்கு எதிர்காலத்தில் அமையப் போகும் நமது சமத்துவம் நிறைந்த சமுதாயத்தைப் போன்றதொரு உணர்வை கொடுக்கும். அந்த உணர்வு வர்க்கப் போராட்டத்தை நோக்கிய அவர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதோடு, இப்போதுள்ள பழமையான ஊழல் முறையை அகற்றுவதில் அவர்களுடைய பங்களிப்பை அதிகரிக்கும். உதாரணமாக, பெண் தொழிலாளர்கள் மத்தியில் வலுவான அமைப்பைக் கட்டியெழுப்புவதற்காக எங்கள் பெண் அமைப்பாளர்களான குர்லி ஃப்ளைனைப் பயன்படுத்துவது மிகவும் நல்ல யோசனையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆண் தொழிலாளர்களை விட பெண் தொழிலாளர்களே அதிகமாக சுரண்டப்படுகிறார்கள். போர்க்குணத்திலும், புரட்சிகர மனப்பான்மையிலும் ஆண்களை விட பெண்கள் எந்த வகையிலும் குறைந்தவர்கள் இல்லை என்பதை சான்றுகளுடன் எடுத்துக் கூற ஜான் புல் தயாராக உள்ளார்.

நமது ஸ்வீடிஷ் நாட்டின் சக ஊழியர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, சங்க நடவடிக்கைகளில் வரட்சியற்ற மக்கள் கலையை பயன்படுத்த வேண்டும். பொழுதுபோக்கிற்கு இடமளிக்கும் சமூக உணர்வுடன் கூடிய பாடல்களும், படங்களும் இளைய சமூகத்தின் மனதில் ஈர்ப்பை உருவாக்கும். பாலின வேறுபாடின்றி இளைய தலைமுறையை நமது யூனியனை நோக்கி ஈர்ப்பதற்கு கலை நமக்கு பெரிதும் பயன்படும்.

மாற்றத்தை விரும்பும் உங்களின்,

ஜோ ஹில்

முகவரி: ஜோஸ். ஹில்ஸ்ட்ரோம், கோ. ஜெயில், சால்ட் லேக் சிட்டி, உட்டா.

****

நவம்பர் 18, 1915
டபிள்யூ. டி. ஹேவுட்
சிகாகோ, இல்லினாய்ஸ்

சென்று வருகிறேன் பில்: நான் ஒரு உண்மையான கிளர்ச்சியாளரைப் போல இறக்கிறேன். துக்கத்தில் உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள் – ஏற்பாடு செய்யுங்கள்! இங்கிருந்து வயோமிங் நூறு மைல் தொலைவில் உள்ளது. எனது உடலை மாநில எல்லைக்கு கொண்டு சென்று அடக்கம் செய்ய ஏற்பாடு செய்ய முடியுமா? நான் உட்டாவில் இறந்து கிடக்க விரும்பவில்லை.

–ஜோ ஹில்

கவிதை

மரண வியாபாரிகளின் ஆட்சிகள்

எம். பாலாஜி

காவல் நிலையம் போனால் விசாரணை கொலைகள்.
அரசியல் கூட்டத்திற்கு போனால் மிதிப்பட்டு மரணம்.
காஜாவில் வாழும் மக்களை விரட்ட ட்ரோன்
குண்டுகளின் படுகொலைகள்!

மூலைமுடுக்கெல்லாம் சுடுபட்டு சாகிறார்கள்.
இதற்கெல்லாம் மேலே ஆணவ கொலைகள்.
சரி வுடுங்கடா எங்களை நிம்மதியாக என்று AI க்கு
போனால் சாவதற்கு வழி காட்டுகிறது!

கொலைகள் செய்வதற்கு சட்டங்கள்
அவர்களை தேர்ந்தேடுக்க தேர்தல்கள்
தேர்தல்தலகளை நடத்த மோசடி கமிஷன்
அதை பார்த்து சும்மா இருக்க நீதிமன்றங்கள்!

இதற்கு பெயர் சட்டத்தின் ஆட்சியாம்
மக்கள் என்ன தங்கள் மூளைகளை
கழற்றி வைத்து சும்மா விட்டு விடுவார்கள் என்று
பகல் கனவு காணாதே!

காத்திருந்த புலிகள் என காட்ட வருவார்கள்
அதைப் பார்த்திட நீ உயிரோடு இருக்க
நான் வேண்டி கொள்கிறேன்!

மூத்தோர்
படையல்

மீண்டும் தொடங்கும் மிடுக்கு

மஹாகவி உருத்திரமூர்த்தி

மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
ஏர் ஏறாது காளை இழுக்காது எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைவிப்பான் என்னூரான்
ஆழத்து நீருக்ககழ்வான் அவன் நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான் ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்தது பார் நன்னெல்லு
தங்கநகைகள் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும் காதினிக்கப்
பாடிக் கவலை பறக்கச் செய்கின்றதும் போல்
முற்றி, மனிதன் முயற்சிக்கு இறை கொடுக்கும்
பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து கூத்தாடும்
அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத
எந்தச் சொல்லுண்டாம் எமக்கு? அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான் ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான் கிறுகிறுத்துப் போகின்றான்.
வாடும் வயலுக்கு வார்க்கா முகில்க் கதிர்கள்
சூடும் சிறுபயிர்மேல் 'சோ' வென்று நள்ளிரவிற்
கொட்டும் உடன் கூடும் கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத் திசையும் நடுங்கி முழங்கி எழும்
ஆட்டத்து மங்கையர்போல் அங்கு மொய்த்து நின்ற பயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று........பின்னர் அது
வற்றியதும் ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி, அதோ பார் பழையபடி கிண்டுகிறான்
சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்
ஈண்டு முதலில் இருந்து முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு.



நன்றி: மஹாகவி கவிதைகள்

பதிவு

தித்வா புயல்: இறுதியில் மனிதமே வென்றது

சிவா முருகுப்பிள்ளை

தரைகள் துண்டிக்கப்பட்டன... மின்சார இணைப்பை அறுத்தன... தொலைத் தொடர்பு பேச மறுத்தன... ஆனால் மனிதம் மட்டும் எழுந்து முன் நிற்கின்றது இறுக்கமாக பிணைத்து நிற்கின்றது.

அதுதான் இந்த தித்வா இயற்கை அனர்த்தத்தை வென்றும் நிற்கின்றது.

நீர் வழிந்தோட வாய்க்காலாய் வழியை விட்டோம் நாம். அதற்கு எங்களை ஏன் இழுத்துச் சென்றாய்...? கூடவே ஈரலிப்பாக இருந்த இளகிய மண்ணையும் இழுத்துச் சென்றாய். அதற்குள் எம்மை புதைத்தும் விட்டாய்.

ஆனாலும் நாம் நம்பிக்கை இழக்கவில்லை... மனிதம் மனிதனை வெல்லச் செய்தது இயற்கை சீற்றத்திற்கு எதிராக.

அது நாடுகளை கடந்து இன மொழி மதங்களை கடந்து தனது வெற்றியை நிலைநாட்டியும் உள்ளது.

அது இந்தோனீசியா இல் ஆரம்பித்து இலங்கை என்றாக நம்பிக்கைதான் கூட்டு முயற்சிதான் பரஸ்பர ஒத்துழைப்பு கைகொடுத்தல்தான் எம்மை எழுந்து வரவும் செய்கின்றது.

எரிமலைகளும் சுனாமிகளும் மழைவெள்ளமும் புயலும் என்றாக கொரனா போல் தாக்கினாலும் மனிதத்தை மட்டும் அதனால் சாகடிக்க முடியவில்லை

மாறாக மக்களை ஐக்கியப்படுத்தியுள்ளது.

சந்தோசங்கள் செய்ய முடியாத ஐக்கியத்தை ஒற்றுமையை நம்பிக்கையை இந்த பேரழிவு ஏற்படுத்தி இருக்கின்றது.

அதுதான் வளர்ச்சியடைந்த உயிரினமான மனிதனின் சிறப்பியல்பு ஆகும்.

தான் காப்பாற்றப்படாவிட்டாலும் தன்னுடன் வாழ்ந்த செல்லப் பிராணியையும் கால் நடைகளையும் முதலில் காப்பாற்றும் ஜீவகாருண்யம் இங்கு வென்று விட்டது.

துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுத்து விட்டு துடுப்புகளை கையில் ஏந்தி வாகனங்கள் ஓடும் தெருக்களில்... காடுகளில்.... மேடுகளில் பாய்தோடும் வெள்ளத்தில்... நீரில் படகோட்டி காப்பாற்றப்பட்டிருக்கின்றனர் மக்கள்.

தரை இறங்கி காப்பாற்ற முயலுகையில் தரையில் நின்ற மக்களை தள்ளி அங்காலை தரை இறக்க முற்பட்டு பல உயிர்களை காப்பாற்ற தன்

உயிரையும் மாய்த்துவிட்டான் இளம் படைத்துறை வீரன். அவன் குடும்பம் தவித்தாலும் மக்கள் அவனைக் கொண்டாடுகின்றனர்.

நித்திரை இன்றி தேவைகளை கூறுங்கள். எம்மிடம் இல்லை என்று கை விரிக்காது எல்லாவற்றையும் செய்கின்றோம் என்று நம்பிக்கை வழங்கி அதனை செயற்படுத்தியும் வருகின்றது அரசு... அரசுத் தலைவர்...

தவறுகள் அனர்த்தங்கள் ஆபத்துகள் என்று அங்கலாய்புகள் இருந்தாலும் அவற்றை வாதப் பிரதிவாதம் செய்யாது காரியத்தில் கண்ணாக இருக்கவும் பழகிவிட்டது அரசு.

இளைஞர் படை நாம் இருக்கின்றோம் என்று இயந்திரங்கள் செய்வதை பல கரங்களாக இணைந்து பாதையை தடுக்கும் தேவையற்ற பாறைகளை... மரங்களை... அகற்றவும் தொடங்கிவிட்டது.

இங்கும் சமூகமாக செயற்படும் மனிதமே வென்றது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்றாக என் கோப்பையில் உள்ள சோற்றை அடுத்த வீட்டிற்கும் கொடுத்து உண்ணும் படையல்களும் அங்காங்கே நடைபெறுகின்றன.

அடுப்படியிற்கு பெண்கள் இருக்க வைத்த அதே ஆண் சமூகம் தான் அண்டாகளில் சமயல் செய்து தமது பெண் இனத்திற்கும் இந்த அவலத்தில் சோறும் ஊட்டுகின்றது.

அடுப்பு எரியும் வீட்டில் கொள்ளி புடுங்கி வீட்டை எரிப்பது போன்ற அகோரப் பார்வைகள் இந்த மனிதத்திற்கு முன்னால் தோற்றுத்தான் விட்டது.

பூமித்தாயே இயற்கையே சூரிய பகவானே மழையே காற்றே உயிரினங்கள் இயல்பாக வாழ்வதற்கு நீங்கள் இன்றி நாம் இல்லை என்பது எம்மால் உணரப்படாமல் நாம் செய்த தவறுகள் சிலவற்றை பொறுத்துக் கொள்வாயா...?

நாம் விட்ட தவறுகள் வெள்ளமாய் புயலாய் எமக்கு உணர்தியது. உன் கோபம் போதும் அம்மா... உங்கள் பிள்ளைகள் நாங்கள். உன் அரவணைப்பு இன்றி நாம் ஏது? உன் அரவணைப்புத்தான் எமக்கு தேவை. சீற்றம் அல்ல.

உன்பாட்டில் உயரத்தில் இருந்து தாழ்விற்கும் பாய்தலும், முளைத்தலும், தளைத்தலும், வளர்தலும், காய்த்தலும் என்றாக உன் இயல்புகளை நாம் தாறு மாறாக்கியது குற்றந்தான் அதற்கு இந்த அளவு தண்டனையா...?

அது இலங்கை என்றாலும் இந்தோனீசியா என்றாலும் சுமத்திரா என்றாலும் எங்கும் உன் அமைதியை வேண்டி நிற்கின்றோம்.

மகாநாடுகள் கூடி பேசித் தீர்க்க முடியாத பிரச்சினையை மனங்களினால் நாம் தீர்க்க முயலுகின்றோம்.

இங்கு யாரும் பெரியவன் சிறியவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று இல்லை. உன் சீற்றத்திலும் இதற்கு பாடம் இருக்கின்றது. அதை நாம் உணர்வோம்

காப்பாற்றப்பட வேண்டியது உயிரினங்கள். இதற்குள் உயர்ந்து நிற்பது மனிதம்.

வீடுகள் நீரில் மூழ்கினாலும் மக்களிடம் இருந்த நம்பிக்கை இன்னும் மூழ்கவில்லை

மாறாக அது புதிய விடியலை நோக்கி நகர்ந்து கொண்டடிருக்கின்றது.

உலகவரைபடத்தில் கண்ணீர் துளியாக தோன்றும் நாடு இன்று தண்ணீர் துளியாக தோன்றினாலும் இனி இந்திய பெருகடலில் முத்தாக எழுந்து வரும். எழுந்து வர வேண்டும்.

பசுமையான பச்சைக் காடுகள் திரும்பும் திசையெல்லாம் வெள்ளக்காடாக சரிந்த மண் மேடாக காட்சியளித்தன.

தனித்தனியாக ஓடிய ஆறுகள் இணைந்து கொண்டன. மீட்பு பணியாளர்கள் செல்லும் முன்பு சிலர் புதைந்து கொண்டனர். இதில் பலர் உள்ளூர் மக்களாலும் மீட்புப் படையினராலும் காப்பாறறப்பட்டனர்.

புதைந்தவர்களை நாம் விதைத்தவர்களாக கண்ணீரவிட்டு அதில் இருந்து மிண்டும் விருட்சமாக எழுந்து வருவோம் என்று மக்கள் ஆர்ப்பரிக்கின்றனர்

பாலங்கள் உடைந்து பாதைகள் தகர்க்கப் பட்டாலும் மனங்களால் எம்மிடையே பாலம் அமைத்து வீதி போட்டு கரம் கோர்த்து பயணிக்கும் நம்பிக்கையை மட்டும் தகர்க்கவில்லை.

தேசமாக எழுந்து நிற்போம்.

கண்டங்கள் தாண்டி சமுத்திரங்கள் கடந்து புலம் பெயர் தேசத்திற்கு கணத்திற்கு கணம் வந்த காணவில்லை....இழந்துவிட்டோம்....புதைக்கப்பட்டோம் என்ற செய்திகள் தூக்கத்தை கெடுத்தாலம் நாம் இங்கு செயற்படுகின்றோம். உங்கள் அவலத்திற்கு உறுதுணையாக நிற்கின்றோம் என்றும் உறவுகளாக நாம் புலம் பெயர் தேசத்தில்.

நாம் வாழும் தேசத்து அரசுகளிடம் உதவிகளை செய்யுங்கள் என்றவாறான எம் குரலை எழுப்புகின்றோம்.

இலங்கையில் நின்று ஆடிய(தால்) தித்வா புயல் எமது உறவுகளை தமிழ்நாட்டில் தப்பவும் வைத்துவிட்டது.

தனக்கு வேண்டி கோரத் தாண்டவத்தை நாம் இலங்கையில் முடித்துவிட்டோம் தமிழகத்தில் எமக்கு இனி வேலையில்லை என்றும் கடந்துவிட்டது.

இறுதியில் மனிதமே வென்றது. இயற்கை எம்முடன் இயல்பாகி இணைந்தும் விட்டது.

("தித்வா" (Ditwah) என்பது சமீபத்தில் வங்கக்கடலில் உருவான ஒரு சூறாவளிப் புயலுக்குச் சூட்டப்பட்ட பெயராகும்.

இந்தப் பெயரின் விவரங்கள்:

அர்த்தம்: "தித்வா" என்ற அரபுச் சொல்லுக்கு "தீவு" (*Island*) அல்லது "நீர்ப்பரப்பு" (*Lagoon*) என்று பொருள்.

பரிந்துரைத்த நாடு: இந்தப் பெயரை ஏமன் நாடு பரிந்துரைத்துள்ளது.)

இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம் சில குறிப்புகள்

கலாநிதி சு. குணேஸ்வரன்

19.07.2025, 20.07.2025 தினங்களில் மறுமலர்ச்சி மன்றத்தில் நடந்த கலாநிதி ந. இரவீந்திரனின் 18 நூல்கள் 15 ஆய்வாளர்கள் கலந்துகொண்ட ஆய்வரங்கில் சமரப்பிக்கப்பட்ட கட்டுரை

திணைக் கோட்பாட்டை வெறும் இலக்கிய இலக்கண விவகாரமாக மட்டுப்படுத்திவிடாமல் சமூக இலக்கியச்செல்நெறியோடுஅதனைப் பொருத்திப் பார்ப்பது அவசியமென பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதுபோல சாதிய மேலாதிக்கத்தினாலும் பேரினவாதத் தாலும்உலகமேலாதிக்கசக்திகளாலும் ஒடுக்கப்படுகின்ற இனங்கள்– தேசங் களின் விடுதலைக்கு ஒரு புதிய பரிமாணத்தை இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம் என்ற நூலில் கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் முன்வைத்துள்ளார். அந்நூல் குறித்த சில குறிப்புகளை இக்கட்டுரையில் நோக்குவோம்.



பல்வேறு வர்க்கங்களை ஒன்றுதிரட்டியவாறு சாதி தேசம் எனும் முழுச் சமூக சக்திகளது நலன்களை வெற்றிகொள்ளும் அதேவேளை உழைக்கும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கிப் பாட்டாளி வர்க்கச் சிந்தனை வழிகாட்டலுடன் சமூக மாற்றத்துக்கு அனுசரணையாக அமையும் வகையில் சாதி தேசிய இன விடுதலைகளை வழிநடாத்திச் செல்வது விடுதலைத் திணைஅரசியலாகும். இதனை இந்நூலில் எட்டு இயல்களில் எடுத்துக்காட்டியுள்ளார்.

இதன் முதலாவது இயலாக அமைவது இன்றைய உலக நிலவரமும் இலங்கை அரசியலும் என்ற பகுதியாகும். யாழ்ப்பாண வாழ்க்கை முறையானது இலங்கையைப் பொறுத்த வரையில் குடியேற்ற காலம் முதல் கட்டமைக்கப்பட்டதாக அமைந்துள்ளது. சிங்கப்பூர் பென்சனியர், மணியோடர் பொருளாதாரம், அதற்குப் பின்னர் டொலர்மீதான நாட்டம் என அரச உத்தியோக நாட்டமும் செயற்பாட்டு வேகமும் வெளித்தோற்றமாக இருந்தாலும் அடிப்படை மனப் பாங்கில் சாதிய வாழ்வுமுறை நீடிக்க வேண்டும் என்ற பழமைவாதக் கொள்கையும் மனப்பாங்கும் கூடவே இருந்து வந்துள்ளன.

இலங்கை ஆட்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான இடதுசாரிக் கூட்டு அரசாங்கம், ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, பின்னர் இளைஞர் இயக்கங்களின் எழுச்சி, இந்தியா அவர்களைக் கையாண்ட விதம் ஆகியவற்றை இந்தப் பிரிவில் விரிவாக எழுதியுள்ளார்.

சோவியத் யூனியன் உடைவுடன் BRICS அமைப்பு அமெரிக்காவின் ஒற்றை உலக ஆதிக்கத்திற்குச் சவாலாகியுள்ளமையை மாறிவரக்கூடிய உலக சமநிலைகளையும் பிரித்தானியா இலங்கையைக் கையாண்ட விதம், இந்தியா மலையக மக்களுக்கு ஊடாக இலங்கையைக் கையாள்வதற்கு எடுத்த முயற்சிகள் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையிலான கூட்டரசாங்க ஆட்சியின்போது ஏகாதிபத்திய உடைமைகள் பலவறை தேசிய உடைமையாக்கியமை, பொதுச் சேவைகளை அரசுமையாக்கியமை, தேசியக் கல்வியில் புதிய பாதையை அறிமுகப்படுத்தியமை,

சுயசார்புப் பொருளாதாரத்தை முன்னெடுத்தமை ஆகியவை காரணமாக முற்போக்குப் பாத்திரத்தை வகித்ததாகப் பாராட்டப்பட்டது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இதன் பயன்கள் மக்களிடம் குறைந்த அளவிலேயே எட்டியதால் 1977இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க பெரும் வெற்றியீட்டியது. அதனால் 80இல் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஜே.ஆர் அரசு ஆரவாரத்துடன் ஏற்றுக்கொண்டது.

ஜே.ஆர் அரசின் அமெரிக்க நாட்டத்தில் அதிருப்தி கொண்ட இந்திராகாந்தி, ஜே.ஆர் ஜெயவர்த்தனவுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் நோக்கத்துடன் தமிழீழ அமைப்புகளுக்கு இந்தியாவில் பயிற்சிக் களங்களை ஏற்படுத்திக் கொடுத்தார். இவ்வாறான தவறான இராஜதந்திரக் கையாளுகைகளினால் ஐ.தே.க அரசு இன யுத்தம் ஒன்று வலுப்படுவதற்கு இடமேற்படுத்தியது. இதனால் வர்க்க அரசியல் சார்ந்து இயங்கி வந்த இலங்கை வரலாற்றை இனத்துவ சக்திகளிடையிலான மோதலோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் மாற்றுத் தடத்திற்கும் ஆட்படுத்திக்கொண்டது. இவ்வாறாக 70களின் முடிவுவரை நவீன அரசியல் வர்க்க சக்திகளிடையான மோதலையே பிரதானப்படுத்தியிருந்தது.

தொடர்ந்து வருகின்ற மூன்று இயல்களிலும் தேசிய இன முரண்பாடுகள், மத அடிபடை வாதங்கள், சாதியம் ஆகியவற்றைப் பற்றி எழுதுகிறார். இவை சார்ந்த அடையாள மேலாண்மை நாட்டங்களின் போது அருகில் உள்ள அல்லது எதிர்நிலையில் உள்ள சக்திகளோடு ஒன்றுபடுவதற்கு இருந்த வாய்ப்புகள் மறுக்கப்பட்டு தனிமைப்பட்ட வரலாற்று அனுபவங்கள் கூறப்படுகின்றன. தமிழ் சிங்கள முஸ்லிம் மலையக உறவுநிலைகளும் அவற்றில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வகையில் தேசிய இன முரண்பாடுகள் வலுத்தமை பற்றிய இரண்டாவது இயலில் தமிழ் இடதுசாரிகள் ஆரம்பத்தில் தம்மை இலங்கைத் தேசத்துக்குரியவர்கள் என்பதாவே புரிந்து கொண்டு வாழ்ந்தனர். சிங்கள தமிழ் முஸ்லிம் மலையக மற்றும் சிறுபான்மையின மக்கள் மத்தியிலிருந்து பலரும் மார்க்சிய வழிகாட்டலுடன் ஒன்றுபட்டுப் போவதற்கான இலட்சிய உணர்வுடன் இடதுசாரிக் கட்சிகளில் இணைந்திருந்தனர். இன முரண் யுத்தமாகக் கூர்மைப்பட்ட தொடக்க நிலையிலே இலங்கைத் தேசியத்துக்குள் தமக்கான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட வேண்டிய தமிழினத் தேசியம் உள்ளது என்பதை உணர்ந்து கொண்டனர்.

உலக நிலவரத்தை மீட்டுப்பார்ப்பது என்ற அம்சத்தில் சோவியத் யூனியனின் தலைமையிலான பல தேசங்கள் இணைந்து சோசலிச முகாமில் வலியதொரு சக்தியாக மிளிர்ந்தமை ஆகியன 70களில் எமது நாட்டு கொம்யூனிஸ்டுகளை உத்வேகப்படுத்தின. இந்நிலையில் உள்நாட்டில் முதலாளித்துவத்திற்கு எதிராக அவர்கள் போராடிய அதேவேளை இன்னும் அதிகமாகவே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்களங்களையும் விரிவுபடுத்தினர்.

சோவியத் இராணுவம் ஆப்கானிஸ்தானில் வீழ்ச்சியைத் தழுவியதைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோசலிசத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க ஆளுமை பெற்றிருக்காத நிலையிலே முதலாளித்துவப் பாதையை வரித்துக் கொண்டன. அமெரிக்க மேலாதிக்கம் உலகமயமாதலில் மாற்றம் ஒன்றே மாறாதது என்று கூறிக்கொண்டு தனது பாணிக்குரியதாக உலகை வடிவமைக்க முயன்றது.

ஒடுக்கப்படுகின்ற இனங்களுக்கு இடையில் ஆரம்பத்தில் புரிந்துணர்வு இருந்தாலும் அவை காலப்போக்கில் சிதைக்கப்பட்டிருக்கின்றன. 70களில் மூவின மக்களும் ஊடாடி வாழ்ந்தமையை சுபைர் இளங்கீரனின் நாவல்கள் பதிவுசெய்துள்ளமையையும் ஆசிரியர் உதாரணங் காட்டுகிறார். அதுமட்டுமன்றி அரசியல் சமூக ரீதியில் அளுத்கம, அம்பாறை முஸ்லிம்கள் மீதான கலவரத்தின் பின்னர் சிங்கள மக்கள் அவற்றுக்கு எதிரான ஆரோக்கியமான கருத்தாடலை முன்வைத்தமை, கண்டிக்கலவரம் தொடர்ந்து பரவ விடாது தடுத்தமை, வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது அயலவரது உதவிகளை சிலாகித்துப் பேசியமை முதலான சிலவற்றை ஆசிரியர் பொருத்தம் கருதி உதாரணங் காட்டுகிறார். ஆனால், இலங்கையில் இனங்களுக்கு இடையில் பகைமையை மூட்டித் தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்தும் செயற்பாட்டைப் பேரினவாதம் செய்தது. முத்தரப்பிலும் (சுதந்திரக் கட்சி, ஐ.தே.க. பொதுஜன ஐக்கிய முன்னணி) இருந்த அதிகாரக் கும்பல் தமது ஆதாயத்தின் பொருட்டு இன நல்லிணக்க வாய்ப்பை நச்சு வட்டமாக்கிச் சீரழித்தன. குறைந்த பட்சம் ஒடுக்கப்படுகின்ற இந்தத் தேசிய இனங்களுக்குள் புரிந்துணர்வும் ஒன்றுபடுவதற்குரிய வாய்ப்பும் தொடர்ந்தும் வளர்த்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மத அடிப்படைவாதங்கள் என்ற பிரிவில் நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பு அரசைக் கடவுளின் பிரதிநிதித்துவமிக்க சக்தியாகச் சித்திரித்தது. மூலதன அபகரிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்தங்கிய நாடுகளில் மக்களின் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் நீடிக்கவே செய்தன. நிலத்தோடு பிணைக்கப்பட்ட கடவுளுக்குப் பிரதியீடாக மூலதனத்தோடு பேரப் பேச்சுக்கு உட்பட ஏற்ற கடவுளையுடையதாக மதங்கள் தம்மைப் புனரமைத்து இருப்பைத் தக்க வைத்துள்ளன. ஆனால் சோவியத் யூனியன் வீழ்ச்சியைத் தழுவிய போதும் மக்களின் அடிப்படைப்

பிரச்சினைகள் தீர்க்கப் பட்டிருந்தபடியால் அங்கு மதத்திற்கு எந்த வடிவினையும் வழங்கவேண்டிய தேவை இருக்கவில்லை. தலிபான் உள்ளிட்ட முஸ்லிம் அமைப்புக்கள் இஸ்லாமிய அரசுகளை நடைமுறைப்படுத்த முற்படபோது இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இனங்காட்டியது. வர்க்கப் போர்க்களமும் உலக அரங்கில் பலவீனப்பட்டபோது இனிப் பண்பாட்டு மோதல்களே உலக அரங்குக்குரிய நிகழ்ச்சி நிரலாக மாற்றம் பெற்றது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தில் பிளவுபட்ட மார்க்கப் பிரிவினரிடையேயான மோதல்கள் இவற்றால் அரபுலகிலும் பாகிஸ்தானிலும் ஷியா– சன்னி முஸ்லிம் பிரிவினரின் மோதல்கள் நடைபெற்ற வகையினையும் காட்டுகிறார்.

அவசியப்படுகின்றபோது எங்களைக் கொன் றொழித்தேனும் உலக முதலாளித்துவச் சுரண்டலைப் பேணவேண்டும் என்பதனை மேலாதிக்க சக்திகளின் விருப்புக்கு உதவும் கைங்கரியத்தையே உண்மையில் அடிப்படைவாதிகள் செயற்படுத்துகின்றனர்.

ஒரு பக்கம் உலக முதலாளித்துவம் தன்னை நிலைநிறுத்தும் முயற்சியாக அடிப்படை வாதத்துக்கு எதிரான பண்பாட்டுத் தாக்குதலையும் பயங்கரவாத ஒழிப்பு யுத்த முன்னெடுப்பையும் செயற்படுத்தியபடி மறுபக்கம் அவரவர் புரிதலுக்குரிய சரியான இஸ்லாத்தை நிலை நிறுத்தும் பண்பாட்டு மோதலும் பயங்கரவாத முன்னெடுப்புகளுமாக அண்மைக்கால உலக இயக்கமாக அமைந்திருக்கிறது.

அமெரிக்க மேலாதிக்கம் இஸ்லாமிய எதிர்ப்பை உலகளவாக்கியபோதும் மறுபுறத்தில் இந்தியா–பாபர் மசூதி இடிப்பு, புலிகளினால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, பௌத்த பேரின மேலாதிக்கத்தால் ஏற்படுகின்ற காரியங்கள் ஆகியவற்றை பௌத்தம் மக்களின் மதமும் பேரினவாதமும் என்ற பகுதியில் எடுத்துக் காட்டுகிறார்.

முப்பது வருட யுத்தத்தில் மூன்று இனங்களும் பாதிக்கப்பட்டு உள்ளன. மற்றைய இனத்தின் மீதான பாதிப்புகளை ஒவ்வோர் இனமும் நிகழ்த்தியும் உள்ளன. தத்தமது தரப்பின் தவறுகளைச் சுய விமர்சனத்துக்கு உள்ளாக்காமல் மற்றவர் மீதான தவறுகளையே தொடர்ந்து பேசுவோமாயின் பகை மறுப்பும் நல்லிணக்கமும் எவ்வாறு சாத்தியமாக இயலும்? என்ற வினாவையும் எழுப்புகிறார்.

சாதியம் என்ற பகுப்பில் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலைப் போராட்டத்தில் சிங்களத் தேசியம் ஒருங்கிணைந்த சக்தியாக ஒன்றுபட்டு இயங்க இயலாமை பௌத்த சிங்கள மக்களிடையேயான தடையாக இருந்தது. ஆதிக்க சாதிப் பிரிவினர் தம்மைக் கடவுளின் பிரதிநிதிகளாகச் சித்திரித்து ஏனைய சாதிப்பிரிவுகளின் தாழ்ந்துவரும் புனித மட்டப் படிநிலைகளை வரையறுத்தன.

சாதி என்பதற்கு ரொமிலா தாப்பரின் கருத்தை மேற்கோளாகக் கொண்டு "சமமற்ற உரிமைகளுடன் திருமண விதிகள், உணவுமுறை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் விலக்குகள் கடைப்பிடிக்கப்படுவதும் தமது குடியிருப்புப் பகுதிக்குள் பிறர் இடம்பெறவாய்ப்பளிக்காத தடைகளுடனும் பிரிக்கப்பட்டு பிறப்பின் அடிப்படையில் படிநிலை வரிசைப்படுத்தப்பட்ட குழுக்களே சாதிகள்" எனக் குறிப்பிடுகின்றார்.

பௌத்த சமூகங்களிலும் படிநிலைகளில் ஏற்றத் தாழ்வு இருந்துள்ளது. சிங்களச் சமூகத்தில் ஆதிக்க சக்தியினரான முதலாளித்துவ உருவாக்கத்துடன் எழுச்சி "கரவா" சாதியினருக்கு அரசியல் ஆதிக்க முன்னுரிமை வழங்கிவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வும் குறிப்பிடப்படுகின்றன. இவற்றை குமார் ஜயவர்த்தனா, சம்ஸ் ஆகியோரின் கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டு காட்டுகிறார். இதற்கூடாக சிங்கள தேசம் ஒரே சக்தியாக அணி திரண்டு இருக்கவில்லை. மாறிமாறி அதிகாரத்திற்கு வந்த பெரு முதலாளி வர்க்கம் ஐ.தே.க , சுதந்திரக் கட்சி என்பவற்றில் பல்வேறு சாதிப்பிரிவுகளின் முதலாளித்துவப் பிரிவினர் தமது நலன்களை வெற்றி கொண்டபோது புறக்கணிக்கப்பட்ட "கராவ" தேசிய நலன் ஜே.வி.பி தலைமையில் ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுக்கும் அணியாக பகை முரண்பாட்டைக் கொண்டிருந்தது.

இந்நிலையிலேயே தத்தமது வர்க்க நலன்களை வெற்றி கொள்ள முனையும் அச்சக்திகள் ஒவ்வொன்றும் ஏனைய தேசிய இனங்களைக் கையாள்வதில் ஒரே பண்பைக் கொண்டிருக்கவில்லை. அனைத்துத் தளங்களிலும் ஆதிக்கத்தை இறுக்கமாக வலுப்படுத்தியிருக்கும் "கொவிகம" சாதியினரது அதிகாரங்களில் சமபங்கெடுக்கும் ஆற்றலுடனேயே "கராவ" சிங்கள தேசிய எழுச்சி அமைந்தது. இது பற்றியும் இப்பிரிவில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

சாதிவாதம், மதவாதம், இனவாதம் என்பன மக்களை ஏய்த்துப் பிழைக்கும் சக்திகளின் புகலிடம் என்ற தொடக்கத்துடன் அடையாள அரசியல் என்ற பகுதி ஆரம்பிக்கின்றது. அடையாள அரசியல் குறித்த தெளிவைப் பெறுவதும் இவை தொடர்பில் மார்க்சிய வழிகாட்டல் எத்தகையது என இனங்காண்பதும் அவசியமானது எனக் குறிப்பிடுகிறார்.

தனது அணிக்குரிய நலன் வென்றெடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டதே அடையாள அரசியலாகும். தத்தமது அடையாள மீட்புக்கும் மேலாண்மைக்கும் முற்படுத்தலாக அரசியல் இயக்கம் தொடரும் பட்சத்தில் மக்கள் விடுதலை எட்டப்படாமற் போவதுடன் இருப்பதையும் இழப்பதற்கான நிலைக்கு மாறக்கூடும்.

மார்க்சியம் அனைத்துவகை ஒடுக்குமு றைகளையும் தகர்த்து சுரண்டலற்ற சமூகத்தைப் படைக்கும் சிந்தனைமுறை என்பதாகப் புரிந்து

கொள்வது அவசியம். இவ்விடத்தில் மார்க்சிய கருத்தியல், பின்நவீனத்துவக் கருத்தியல் ஆகியவற்றின் முரண்பாடுகள் பற்றியும் குறிப்பிடுகிறார்.

70களில் இடதுசாரிக் கட்சிகளின் பங்கேற்புடன் கூட்டரசாங்கம் கொண்டுவந்த முதலாம் குடியரசு யாப்பின் முற்போக்குக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது ஏகாதிபத்திய சார்பைத் தமிழ்த் தேசியத் தலைமை முன்னிறுத்தியது. பின்னர் ஐ.தே.க அரசாங்கம் மாவட்ட சபையைத் தந்தபோது அதனை ஏற்று இணக்க அரசியலை முன்னெடுக்கத் தலைப்பட்டது முதல் தற்போது வரை தொடர்வதையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழக் கனவோடு எதிர்ப்பு அரசியலை முன்னெடுப்பவர்களும் பேரினவாதிகளோடு இணக்க அரசியலை முன்னெடுப்பவர்களும் இன்றைய அரசியல் செல்நெறியைப் புரிந்து கொள்ளவில்லை. எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து மக்களது வாழ்வாதார நலன்களுக்கு எதனையும் செய்யாத தமிழ்த் தேசியர்களை மக்கள் ஆதரிப்பது ஏமாளிகள் என்பதால் அல்ல. பேரினவாதத்தை எவ்வகையிலும் மன்னிக்க இயலாது என்பதனால் ஆகும். அடிப்படையில் எதிர்ப்பு இணக்க அரசியல் இரண்டையும் மக்கள் நிராகரிக்கும் மனப்பாங்குடனேயே உள்ளனர். எனவே, விடுதலையையும் வாழ்வாதார விருத்தியையும் வெற்றி கொள்ள வகை செய்வதாக மக்கள் அரசியல் அமைய வேண்டும் என்ற கருத்தை முதன்மையாக இந்நூலில் வலியுறுத்தியிருக்கிறார்.

தொடர்ந்து வருகின்ற திணை அரசியல், உலகப் புரட்சி செய்தக்க அல்ல செய்தலின் கேடுகள் ஆகிய இயல்கள் அடையாள அரசியலுக்கான வடிவம் பற்றியும் ஏற்கனவே இயங்கி வருகின்ற மேலாதிக்க திணை அரசியல் பற்றியும் பேசுகின்றன.

சாதி, இனம், மதம், நிறபேதம், தேசம், பாலினம் என்பவற்றில் தமது அடையாளம் சாராத பிறர் தமது அக்கறைக்கு அப்பாற்பட்டவர் அல்லது எதிரி எனும் நிலைப்பாட்டுடன் இவற்றில் ஏதாயினும் ஒன்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும அடையாள அரசியல் தனது அணிக்குரிய நலனை வென்றெடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கும். வர்க்க அணிதிரட்டல், சாதி, மதம், இனத்தேசியம் எனும் அடையாளத்துக்குரியதான நலன்களைப் பேணும் வகையில் அடையாள அரசியலுக்கான அணிச்சேர்க்கை என்பதாக சுதந்திரத்திற்கு முன்னும் பின்னருமான இயங்குநிலை இருந்திருக்கின்றது.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழீழத் தேசத்தில் பேரினவாதத்தால் ஆக்கிரமிப்புகளும் ஒடுக்குமுறைகளும் நிகழ்ந்தன என்றும் தமிழின அடையாள அரசியல் இதுவரையான அனுபவங்களில் இருந்து விடுதலைக்கான திசைமார்க்கத்தில் அரசியலை முன்னெடுக்கவில்லை என்று குறிப்பிடுகிறார்.

கூட்டமைப்பினர் தமிழ்த்தேசிய அடையாள அரசியலை முன்னெடுப்பதை விடவும் சிங்களத் தேசியத்தினுள்ளே செயலாற்றும் வர்க்கப் போராட்டத்தைக் கவனத்தில் எடுத்து சிங்களத் தேசிய நலனுக்கு விரோதமானதும் ஏகாதிபத்திய நலன் பேணுவதுமாகிய மேலாதிக்கவாத ஐ.தே. கவுடன் மிகுந்த ஆர்வமேலீட்டுடன் ஐக்கியப்பட்டுக் கொள்கின்றனர். தமிழ்த் தேசியத்தின் மேலாதிக்கத் திணை அரசியல் போக்கினின்றும் வேறுபட்ட வகையில் ஜே.வி.பியின் திணை அரசியல் குணாம்சம் செயற்படுகிறது. பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டு விட்டால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என ஜே.வி.பியும் எண்ணுகிறது. இதனையே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடுவதன் வாயிலாகவே பொருளாதார விருத்தியை எட்ட ஏற்றதாக ஆட்சியைக் கைப்பற்ற இயலும் என்ற புரிதல்கூட இன்னமும் இடதுசாரிகளுக்கும் கைவரவில்லை.

ஜே.வி.பி தனது வலுவானஅடித்தளமாகிய "கராவ" சாதியினர் தலைமையில் அரசியல் அதிகாரம், உயர்கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் புறக்கணிப்பைச் சந்தித்தவர்களது எழுச்சியின் ஊடாகத் தொடர்ந்தும் போராடியவாறு இருந்தாலும் அது ஒருபோதும் தன்னைச் சாதி அடித்தளம் சார்ந்த அமைப்பாக வெளிப்படுத்திக் கொண்டதில்லை. இந்நிலையில் மேலாதிக்க சாதியான "கொவிகம" வின் உழைக்கும் வர்க்கம் உட்பட ஐக்கியப்படத்தக்க அனைத்து சக்திகளையும் ஒன்றுபடுத்திப் போராட ஜே.வி.பி முற்படுகின்றது.

எனவே, ஆதிக்க சாதி, பேரினவாதம், ஏகாதிபத்தியம் என்பன சுரண்டும் முழுச் சக்திகளாக அமைந்துள்ளன. திணை மேலாதிக்கத்தால் ஒடுக்கப் பட்டு சுரண்டப்படுகின்ற இன்றைய வாழ்முறையைத் தகர்த்து விடுதலைக்கென ஒடுக்கப்பட்ட சாதி தேச சக்திகள் போராடுகின்றபோது ஒடுக்கும் சாதி தேசத்தினுள் செயற்பட்டவாறுள்ள வர்க்க போராட்டத்தைமனங்கொண்டுஅவற்றிலுள்ளவிடுதலை நாடும் தரப்போடு ஐக்கியபட்டபடி போராடிச் சமூக மாற்றத்தை வெற்றிகொள்ளும் மார்க்கம் விடுதலைத் திணை அரசியல் என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

உலகப் புரட்சி செய்தக்க அல்ல செய்தலின் கேடுகள் என்ற பிரிவில் இரண்டாம் உலக யுத்தமானது குடியேற்றவாத ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் தொடர்ந்தும் ஏகாதிபத்திய அபகரிப்புக்கு கட்டுப்பட்டிருந்த நிலையிலே சுதந்திரம் அர்த்தமுள்ளதாக அமையவேண்டும் என்ற விருப்பத்தை வலுப்படுத்தின. அதற்குள்ளும் பேரினவாத ஒடுக்குமுறை புறக்கணிப்பு ஆகியவற்றில் இருந்து விடுபடுவதற்கு ஏற்ற சுயாட்சி அமைப்பு வடிவங்கள் கண்டறியப்படவும் வேண்டும்.

மேலாதிக்க சக்திகள் தமது சுரண்டலைத் தொடர்வதற்கு நாட்டிற்குள் இனமோதல்கள் இருப்பது அவசியம் எனக் கருதி இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து இருக்கிறார்கள். இந்நிலையிலே சிங்கள இனவாதத்திற்கு எதிராக உருப்படியான ஒரு சிறுகல்லைத்தானும் வீசுவதற்கு சிங்கள இடதுசாரிகள் தயாரில்லாமல் இருப்பது சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு விட்டுக் கொடுக்கும் அம்சமாகே இருக்கமுடியும்.

அறுபதாம் ஆண்டுகளின் முடிவுவரை தமிழ்த்தேசியம் சிங்களப் பேரினவாத ஐ.தே.க அரசுடன் இணக்க அரசியலை மேற்கொண்டு வந்தது. நாற்பதாம் ஆண்டுகளில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் எழுச்சி முதல், அறுபதுகளின் பிற்கூறில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வரை சாதியத் தகர்ப்புத் தேசியம் முன்னெடுத்த போராட்டங்கள் சமூகப் பாய்ச்சலுக்கு உரிய பிரதான செல்நெறியாக இங்கு வளர்ந்தபடி இருந்தன. எழுபதுகளில் தமிழ்த் தேசியம் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கத் தொடங்கிய பின்னர் பேரினவாத ஒடுக்குமுறை ஒடுக்கப்பட்ட சாதிகளையும் கொன்றொழிக்கும் நிலைவரை வளர ஆரம்பித்தபோது தமிழின இரட்டைத் தேசிய மோதல் மௌனித்துப் போக வேண்டியதாயிற்று என்கிறார். இங்கு இரட்டைத் தேசிய மோதல்கள் என்பதன் ஊடாக சிங்கள கொவிகம–கராவ மோதல் 80களின் இறுதியில் பின்னடைவுக்குள்ளானதைக் குறிப்பிடுகிறார்.

இப்பகுதியில் தமிழ் இடதுசாரிகளின் பங்கு, சாதியத் தகர்ப்புத் தேசியம் முன்னெடுத்த போராட்டங்கள், தமிழ்த் தேசியம் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கத் தொடங்கியமை, பேரினவாத ஆட்சி முறை முதலானவை பேசப்படுகின்றன. இந்நிலையில் மாக்சியர்கள் திணை அரசியல் வடிவத்தையே பிரயோகிக்க வேண்டும் என்பதனை இக்கட்டுரைத் தொகுதி குறித்துக் காட்டுகிறது. தொடர்ந்து வருகின்ற இறுதி இரண்டு இயல்களும் திணை அரசியலுக்கு பாதகமாகவுள்ள அம்சங்கள் பற்றி ஆராய்ந்து மார்க்சிய வழிகாட்டுதலுடன் விடுதலைத் திணை அரசியலை எவ்வாறு வெற்றிகொள்ள முடியும் என்பதனை விளக்குகின்றன.

தக்கன பிழைக்கும் என்ற இறுதிப்பகுதியில் பொருளியல் தீர்க்கதரிசனமும் மானுடம் பேணுதலில் கரிசனமும் என்ற விடயத்தைப் பேசியுள்ளார். இன்றைய முலாளித்துவ சமூக வாழ்முறை இலாபத்தைக் கருத்தாகக் கொண்டது. மனிதாபிமான பிரபஞ்ச ஆத்மார்த்த நலன்கள் எதையும் கருத்திற்கொள்ளாது அவற்றையும் மூலதனமாக்கவும் முதலாளித்துவம் தயங்குவதில்லை. இவ்வகையில் இதயமற்ற ஆன்மாவற்ற மூலதன உலகில் நாம் வாழ்கிறோம் என்கிறார்.

தொடர்ந்து மார்க்சியம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனைகளைக் குறித்துக் காட்டியவர் வரலாற்று

ஆதிக்க சாதி, பேரினவாதம், ஏகாதிபத்தியம் என்பன சுரண்டும் முழுச் சக்திகளாக அமைந்துள்ளன. திணை மேலாதிக்கத்தால் ஒடுக்கப்பட்டு சுரண்டப்படுகின்ற இன்றைய வாழ்முறையைத் தகர்த்து விடுதலைக்கென ஒடுக்கப்பட்ட சாதி தேச சக்திகள் போராடுகின்றபோது ஒடுக்கும் சாதி தேசத்தினுள் செயற்பட்டவாறுள்ள வர்க்க போராட்டத்தை மனங்கொண்டு அவற்றிலுள்ள விடுதலை நாடும் தரப்போடு ஐக்கியபட்டபடி போராடிச் சமூக மாற்றத்தை வெற்றிகொள்ளும் மார்க்கம் விடுதலைத் திணை அரசியல்.

மாற்றப் போக்கின் பண்பை உரிய வேகத்தில் கிரகித்துக் கண்டறிந்து நடைமுறையில் ஏற்புடைய மாற்றங்கள் பிரயோகம் பெறாமல் போனதில் உலகின் முதலாவது சோசலிசத் தாயகம் தகர்ந்து போக நேர்ந்தது. மக்கள் சீனம் மிகுந்த தடுமாற்றங்களோடு சோசலிச முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டியதாகி உள்ளது.

மூலதன வாய்ப்பைப் பெற்று ஒடுக்கும் தேசங்களாக மேலை நாடுகள் உருப்பெற்று ஏனையவற்றை ஒடுக்கப்பட்ட தேசங்களாகக் கட்டமைத்ததைப்போல விவசாய வாய்ப்பைப் பெற்று முன்னேறிய இனமரபுக் குழுக்கள் ஆதிக்க சாதிகளாகி ஏனைய இனமரபுக் குழுக்களைத் தொண்டூழியம் செய்து உழைக்கும் சாதிகளாக ஒடுக்குமுறைக்கு ஆட்படுத்திய வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமக்குரியதாக இயக்கம் பெறத் தொடங்கியிருந்தது. மருதத்திணை மேலாதிக்கத்தின் வாயிலாக ஏனைய திணைகளை ஆக்கிரமித்து ஒடுக்கியதிலிருந்து வரலாறு தொடங்கப்பட்டது. இதனை வட இந்தியா, தமிழகம் வட இலங்கை ஆகிய புவியியற் பிரதேசங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கிறார்.

தலித்தியவாதிகள் முன்னெடுக்கும் சாதி அரசியல் இனவாதிகளின் தேசியவாத அரசியல் ஆகியவற்றிற்கு மாறாக இப்பிரச்சினையை மார்க்சியர்கள் கையாளும்போது திணை அரசியல் எனும் புதிய பரிமாணம் ஒன்றை எட்ட வேண்டியுள்ளது.

விடுதலைத் திணை அரசியல் என்பதனூடாக எதிரிச்சாதி என எதையேனும் அழித்தொழிப்பது என்றில்லாமல் அனைத்துச் சாதிகள் மத்தியிலும் உள்ள சமூக மாற்றத்தை வேண்டி நிற்கின்ற வர்க்கப் பிரிவினரோடு ஐக்கியப்பட்டு ஏற்றத்தாழ்வுச் சமூக முறையைத் தொடர்ந்தும் பேண முற்படுகின்ற சக்திகளுக்கு எதிராகப் போராடுவதாகவே அமையும். இன்று திரைகடலோடித் திரவியம் தேடியதால் பொருளாதாரத் தீர்க்க தரிசனத்தில் முன்னணியில் இருக்கிறோம். எனவே அடையாள அரசியலுக்குப் பதிலாக விடுதலைத் திணை அரசியலை முன்னெடுத்து மானுடம் பேணுதலே தேவையானது என்பதனை இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப்போராட்டம் என்ற நூல் முதன்மையாக வலியுறுத்த முனைகிறது.

நன்றி ஜீவநதி

கவிதை

காதலிக்கத் தெரியாதவன்

துவாகரன்



காதலிக்கத் தெரியாதவன் நான்
காரிருள் நேரத்தில் மஞ்சள் விளக்கின் கீழமர்ந்து
நண்பர்களோடு மகிழ்ந்து உண்ணத் தெரியாதவன் நான்
காதல் குறுஞ்செய்திகள் பகிர்ந்து தோழிகளோடு
அரட்டை அடிக்கத் தெரியாதவன் நான்
நவநாகரிக உலகில் நெரிசலில் நகர்ந்து
பாஷன் உடைகள் கொள்வனவு செய்யத்தெரியாதவன் நான்
புதியகால பாடல்கள் இரைய விட்டு
இருட்டில் வண்ணவிளக்கில் ஜொலித்து ஆடத்தெரியாதவன்
மன்னித்துவிடு நண்பா இவையனைத்தும் என் குறைகளெனில்
என்னை வெறுத்துவிடாதே
உன்னோடு சிரித்து உணவுண்ணும் நேரத்தில்
பசியோடு ஓர் உலகமே கந்தலாகி நிற்கிது.
உங்களோடு காதல் கொஞ்சிய வசனங்கள் பேசும்நேரம்
மக்கள் படை சேர்த்துநான் விடுதலை கோஷங்கள் எழுதியிருப்பேன்
நீங்கள் புதிய ஆடைகள் கொள்வனவு செய்யும் நேரம்
கந்தல் ஆடையோடு உழைத்த என் தோழர்களோடு
ஒருமூலையில் கொடியேந்தி நான் நின்றிருப்பேன்
புதிய பாடல்கள் இரையவிட்டு நீங்கள் ஆடிய நேரம்
இரைச்சலில் என் விடுதலைப் பேச்சுக்கள் கேட்டிருக்க வாய்ப்பில்லை
அதனால் நான் கொஞ்சத் தூரம் தள்ளி நின்றிருப்பேன்.
ஏனென்றால்,
உங்கள் எல்லோரையும்விட மண்ணையும் மக்களையும்
காதலிக்கத் தெரிந்தவன் நான்.

குறுங்கவிகள்

அழ. பகீரதன்

பேரனர்த்தம் நிகழினும்...

ஈனம்
தோய்ந்த எண்ணம்
தேசம் காக்காக் கனவொடு
புலத்தவர் வண்ணம்
தீராப் பகையில்
கலகத்தில் மாண்டதற்கு
பேறாய்த்தான்
இயற்கை மேவுமென்ற
இறுமாந்த மனத்தொடு
குறுகிய சிந்தையில்
கிறுக்கிடக் கண்டு
மண்ணுளோர் மனங்கள்
வாடுவது அறியார்!
இயற்கை இடர்தனில்
இயன்றார் இழிந்தார்
வளத்தார் நொய்ந்தார்
செய்தார் செத்தார்
பார்த்தோ தாக்கும்
நூறுமுறை பேரனர்த்தம்
நிகழினும் விடாப்பிடியாய்
நாறுண்டே போவாரோ?

கண் திறப்பரோ?

எழுபத்தாறு ஆண்டுகள்
மாய்ந்து மாய்ந்து
காத்த இனவாதம்
ஆண்டு ஒன்றில்
வேரொடு பிடுங்கி
எறிய முயலில்
விடுவாரோ?
சாந்த புத்தரென
மாந்தர் நினைப்பரேல்
ஏய்த்து
ஆண்டே பழகியவர்
விட்டே அகல்வரோ?
தோயத்
தீட்டிய கத்தியொடு
வந்தவர் புரிவர்
கொதியெனத் தூண்டத்
தொல் தமிழர்
பூசித்த புத்தர்
கண் திறப்பரோ?

ஏ. ஜே. கனகரத்னாவும் ஒரு மகப்பேற்றுச் சம்பவமும்

தென்புலத்தார் தொழுதேற்றல்

இ. கிருஷ்ணகுமார்

இலக்கிய விமர்சனம், மொழிபெயர்ப்புத் திறமை, ஆங்கிலப் புலமை எனப் பல்வேறு ஆற்றல்கள், ஆளுமைகள் ஏ. ஜே கனகரத்தினாவிடம் இருந்த போதும் அவரிடமிருந்த மனித நேயப் பண்புகள் வித்தியாசமானவையாகவும், அப்பழுக்கற்றவையாகவும் மிக இயல்பானதாகவும் அப்பாவித்தனமானவையாகவும் இருந்தன. அப்படியான அனுபவங்கள் அவர் காலமாகி விட்ட போதும்கூட மீண்டும் மீண்டும் அவரை நினைக்க வைக்கின்றன. இப்படியான குணாம்சங்களும் ஏ. ஜே. இடம் உண்டா எனப் பலருக்கு எண்ணத் தோன்றும்.

நைஷ்டிக பிரம்மச்சாரியான ஏ. ஜே க்கும் மகப்பேற்றிக்கும் என்ன தொடர்பு என ஒருவர் எண்ணக் கூடும். ஏ. ஜே ஒரு பிரம்மச்சாரியாக இருந்தாலும் குடும்ப அமைப்பில் ஈடுபாடும் பற்றும் கொண்டவர். குழந்தைகளை அன்பாகவும் பெண்களைப் பண்பாகவும் மதிக்கத் தெரிந்தவர். எங்கள் குடும்பத்துடன் 1987 ஆம் ஆண்டுத் தொடக்கம் வாழ்ந்து வந்தவர். ஒரு குடும்பத் தலைவனாகத் தன்னைத்தானே நியமித்துக்கொண்டவர். எங்களுக்குத் தந்தையாகவும் எனது பிள்ளைகளுக்கு ஒரு பேரன் போலவும் வாழ்ந்து வந்தவர்.

எங்களுக்கு ஐந்து பிள்ளைகள். முதல் மூவரும் ஆண்கள். கடைசியாகப் பிறந்த பெண்கள் இரட்டையர்கள். மூத்த மகனைத்தவிர எல்லோருமே ஏ. ஜே. எங்களுடன் வந்து சேர்ந்த பின்பு பிறந்தவர்கள். எல்லோருமே ஏ. ஜே யால் வளர்க்கப்பட்டவர்கள். இங்கு நான் குறிப்பிடவிருப்பது எங்கள் மூன்றாவது மகன் ஆரூரன் பிறப்பு நிகழ்வு பற்றியதே.

அப்போது நாங்கள் 51, சங்கிலியன் வீதியில் குடியிருந்தோம். அதுதான் குகமூர்த்தியின் வீடு. நான் சொற்ப காலம் பிரான்சிலிருந்துவிட்டு 1986 இல் தான் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தேன். எங்களுக்கு இருக்க வீடில்லாதபடியால் நண்பர் குகமூர்த்தி தனது வீட்டில் குடியமர்த்தினார். அவர் கொழும்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்து வந்தார். வார இறுதியில் வருவார். ஏ.ஜே யும் தனியாக ஸ்னைப்பர் தாக்குதல் மற்றும் எறிகணை வீச்சு நடக்கும் கோட்டைக்கு அருகாமையில் இருந்தபடியால் அவரையும் அந்த வீட்டில் எங்களுடன் இணைத்துக் கொண்டோம்.

இந்த வீடு அந்த நாட்களில் ஒரு முக்கியமான அரசியல் சமூகச் செயற்பாட்டு மையமாக இருந்தது எனவும் கூறலாம். பல அரசியல் இயக்கங்கள் செயற்பட்டுக்கொண்டிருந்த காலம் அது. குகமூர்த்திக்கு எல்லா இயக்கங்களிலும் நண்பர்கள் இருந்தார்கள். இந்த வீடும். அவர்கள் வந்து போகும் இடம். இதை விட ஏ.ஜே. யும் வேறு அங்கிருந்தார். அவருடைய இலக்கிய, அரசியல், பத்திரிகைத் துறை நண்பர்களும் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். Saturday Review வின் முக்கியமான ஆசிரியர் தலையங்கங்கள் இங்குதான் எழுதப்பட்டன. ஏ.ஜே யுடனான பல வெளிநாட்டு பத்திரிகையாளர்களின் சந்திப்புகளும் இங்குதான் இடம்பெற்றன. வீடு எப்போதுமே கலகல என்றிருக்கும். இதைவிட அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் உருவாகிய பெண்கள் அமைப்பான 'பெண்கள் ஆய்வு வட்டம்' செயற்பட்டது இந்த வீட்டில் தான். 'சொல்லாத சேதிகள்' கவிதைகள், தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டதும் இங்கேதான்.

எனது மூத்த மகன் சேந்தன் 1981 இல் நான் பிரான்சில் கால் பதித்த போது இங்கு பிறந்தவன். இரண்டாவது மகன் பிரணவன் பிரான்சால் வந்த மறு வருடம் 1987 இல் பிறந்தான். இந்திய அமைதிப் படை அப்போதுதான் தரையிறங்கியது. போர் தொடங்கிவிட்டது. தொடர்ச்சியான ஊரடங்கு . இந்திய அமைதிப்படையின் மூர்க்கமான "புலி எதிர்ப்புப் போர்" நடை பெற்றுக்கொண்டிருந்தது. இரவு நேரங்களில் மிகக்கடுமையாக ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. தெருவில் இரவில் இறங்கவே முடியாத காலம். 'முதலில் சூடு ஏனையவை விடிந்த பின்' என்ற நிலை.

இப்படியான சிக்கலான ஒரு காலகட்டத்தில்தான் எனது மனைவி மீண்டும் மூன்றாவது தடவையாகக் கருவுற்றாள். 1988 நவம்பர் மாத கடைசியில் குழந்தை பிறக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இரவில் போக்குவரத்து நடைபெறுவது சாத்தியமாகாதபடியால் பேறு காலத்தில் இரவு நாட்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வந்து தங்கியிருக்குமாறு கர்ப்பிணிகள் அறிவுறுத்தப்பட்டார்கள். மனைவிக்கு நீண்ட நாட்கள் இரவில் வைத்தியசாலையில் தங்க

விருப்பமில்லை. இரவில் எதுவும் நடக்காதுதானே என்ற குருட்டு நம்பிக்கையில் இருந்து விட்டார்.

ஏ.ஜேக்கு இதுவெல்லாம் புதிய அனுபவம். என்ன இது! இரண்டாவது குழந்தைக்கு இன்னும் ஒரு வயது கூட ஆகவில்லை. அதற்கிடையில் அடுத்தக் குழந்தை பெற நிறை மாத கர்ப்பிணியாக வந்து நிற்கிறாரே இந்தப் படித்த மேதாவிப் பெண் என உள்ளுக்குள் சிரித்தபடி எல்லாவற்றையும் அவதானித்தபடி இருந்தார்.

"இரவு போய் ஆஸ்பத்திரியில் நிற்கலாந்தானே. ஏன் விஷப்பரீட்சை சோமேஸ்" என்று நான் கூற "அது ஒன்றும் இரவில் நடக்காது. என்னால் ஆஸ்பத்திரியில் போய்ச் சும்மா நிற்கமுடியாது" என்று கூறிவிட்டாள். பயந்தது போலவே நிகழ்ந்தது. 26 ஆம் திகதி இரவு பதினோரு மணி இருக்கும். சோமேஸ் என்னை எழுப்பி "அப்பா சரியான வயிற்றுக்குத்தாக இருக்கிறது. ஷேவ் எடுக்கிற ப்ளேட் ஒன்று இருக்கிதா?" என்று கேட்டாள். "ஏன்" என்று கேட்டேன். "குழந்தை பிறக்கும் போல இருக்கிறது. அது தான் தொப்புள் கோடி வெட்ட பிளேட் வேணும்" என்றாள். எனக்குத் தலை கிறுகிறுத்தது. இவள் என்ன பெண். "ப்ளேட் கொண்டு வா, பிள்ளை பெறப்போகிறேன்" என்று சொல்பவளிடம் இனி பேசி என்ன வரப் போகிறது? எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீட்டில் நான், சோமேஸ், எங்கள் இரண்டு குழந்தைகள், ஏ. ஜே அத்துடன் அன்றுதான் கொழும்பில் இருந்து வந்து இறங்கிய நண்பன் குகமூர்த்தியும் இருந்தார். குகமூர்த்தியை எழுப்பி விஷயத்தை சொன்னேன். இதற்கிடையில் ஏ.ஜே யும் எழும்பிவிட்டார். எனக்கு அயல் அவ்வளவு பரிச்சியமில்லை. "கணேசசுந்தரத்தின் மகள் நர்சிங் ஹோமிற்கு வேலைக்குப் போய் வாறவ. உதவிக்குக் கேட்டுப்பார்ப்போம் வாரும். ரோட்டை கடக்க வேண்டும். இந்தியன் ஆமி பதுங்கி இருப்பாங்கள். ஒரு அரிக்கன் லாம்பை கையில் பிடித்தபடி போவோம். வருவது வரட்டும்." எனப் புறப்பட்டுவிட்டார். அதுதான் குகமூர்த்தி!.

கணேசசுந்தரத்தின் மகள் சிறிய பெண். பதினேழு அல்லது பதினெட்டு வயதுதானிருக்கும். தந்தையையும் கூட்டிக்கொண்டு ப்ளேடு, மற்றும் சில பொருட்களுடன் துணிந்து புறப்பட்டுவிட்டார். நல்லவேளை ஆமியின் கண்ணில் படவில்லை. வந்து சேர்ந்தோம். அன்று குக மூர்த்தி இல்லாது போயிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்க என்னால் முடியவில்லை. அந்த நேரம் கையில் அரிக்கன் லாந்தர் உடன் புறப்பட்டுச் செல்லும் தைரியம் சாதாரணமானதல்ல. ஊரடங்கை மீறி நடப்பவர்களைச் சுட்டுவிட்டுக் காலையில் போட்டு எரிப்பது இந்திய ராணுவத்தின் வழமை.

ஏ.ஜேக்கு இதையெல்லாம் பார்க்க திகைப்பாக இருந்தது. "சோமேஸ் என்ன மடத்தனமான வேலை இது. ஆஸ்பத்திரிக்கு போயிருக்கலாம்தானே" எனச் சோமேசை கடிந்து கொண்டு இருந்தார். "உதவிக்குச் செட்டிகுளம் அம்மம்மாவையும் கூப்பிடுவோம்" என்று சோமேஸ் சொல்ல அவவையும் கூப்பிட்டோம். உடனே வந்து விட்டா. செட்டிகுளம் அம்மம்மா பதினோரு பிள்ளைகள் பெற்றவ. வயதானவர் அனுபவம் நிறைந்தவர். இப்போதுதான் மனதில் சிறு நம்பிக்கை வந்தது. அறைக்குள் சோமேஸ், செட்டிகுளம் அம்மம்மா, அதோடு அந்த நேர்ஸ் சிறுமி. நாங்கள் எல்லோரும் வெளியில் நின்றோம். சோமேஸ் பிரசவ வலியால் துடித்துகொண்டிருந்தா.

அறைக்கு வெளியே நான் பதற்றத்துடன் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால் ஏ.ஜே. மிகுந்த பதற்றத்துடன் நடந்துகொண்டிருந்தார். அவரது வாய் "யேசுவே, யேசுவே" என ஒரு தரமும் பின் "ஜீசஸ் ஜீசஸ்" என மறு தடவையும் முணுமுணுத்தபடி இருந்தது. சோமேஸ் வலியில் துடிக்கத் துடிக்க ஏ.ஜேயின் "ஜீசஸ் ஜீசஸ்" என்ற குரல் சற்று ஆழமாக முணுமுணுக்கும். மிகுந்த உணர்ச்சி வசப்பட்டுபோயிருந்தார். தாய்க்கோ பிள்ளைக்கோ எதுமே நடந்து விடக்கூடாது என்ற தவிப்பு அவரது ஒவ்வொரு முணுமுணுப்பிலும் இருந்தது. ஆனால் மிகப் பயந்து போயிருந்தார்.

ஏ.ஜே. சிறு வயதிலே தனது தாயை இழந்தவர். அதுவும் ஒரு பிரசவத்தின் போது நிகழ்ந்தது என ஏ.ஜே. கூறியதாக ஞாபகம். உறுதியாகத் தெரியவில்லை. ஒருவாறாகச் சோமேசின் பிரசவ வலி நின்ற சிறிது

நேரத்தின் பின் "கூவா கூவா" என்ற சத்தம் கேட்டது. எல்லோரும் அமைதியாக இருந்தோம். சிறிது நேரத்தின் பின் செட்டிகுளம் அம்மம்மாவின் குரல் கேட்டது. "இதுவும் ஆண் குழந்தைதான். தாயும் பிள்ளையும் சுகம்". இப்பொழுதுதான் எல்லோர் முகத்திலும் ஒரு மலர்ச்சி தெரிந்தது. ஏ.ஜே என்னிடம் "இதோட போதும் கிருஷ். ஸ்டாப் திஸ் ப்ளீஸ்" என்றார். "ஓம் சேர் ஓம் சேர்" என்றேன். காலம் உருண்டது. 1993 இல் எங்களுக்கு ஒன்றல்ல இரட்டை பெண் குழந்தைகள் பிறந்தன. இதை என்னவென்பது!

ஏ.ஜே காலமாகி பதினாங்கு வருடம் கழிந்து விட்டது. ஏ. ஜே. என்னுடன் குகமூர்த்தியின் வீட்டு விறாந்தையில் பதற்றத்துடன் நடந்து "ஜீசஸ் ஜீசஸ்" என்று முணுமுணுத்தது இன்றும் அடிக்கடி நினைவில் வந்து கொண்டே இருக்கிறது.

ஏ.ஜே.பொதுவாகக்கோவிலுக்குப்போவதில்லை. புது வருடத்தன்று மட்டும் ஆசிர்வாதப்பர் கோவிலுக்குக் கூட்டிச்செல்லுமாறு கேட்பார். அவ்வளவுதான். கடவுளிடம் எதையும் கேட்டு வழிபட்டதை நான் காணவில்லை. அப்படியானவர் இப்படி மனமுருகி இறைவனை வேண்டியது. மனதை உருக்கியது...

ஆம். செங்காவலர் யேசுநாதர் வேறு யாருமல்ல.

கவிதை

ஓம்.. அப்ப நீ மனிதன்தான்

திவ்வி

ஒருலகம் ஒரு மக்கள்
ஒரு வயிறு ஒரு பசி
ஓர் இரத்தம் ஓர் உணர்வு.
ஒருவருக்கு ஒரு வாழ்வு.
நீ என்றும் நான் என்றும் அவை என்றும் இவை என்றும்
இழிவென்றும் உயர்வென்றும் எனதென்றும் உனதென்றும்
ஏனென்றும் புரியாமல்... ஆளுக்காள்
அள்ளுண்டும் தள்ளுண்டும் அடியுண்டும் மிதியுண்டும்
பிளவுண்டும் பிரிவுண்டும் சிதறுண்டும் போவீரோ...
எங்கையோ புலன் வைத்தீர்...
உம்மைத்தான்... கேட்கின்றேன்.
ஒரு புழுவுக்கும் உயிருண்டு
சிறு புல்லுக்கும் உயிருண்டு
உன் கால் மிதித்த
புழுவொன்று பிளவுண்டால்
உயிர் இரண்டு.
மடையா
நீ சிதறுண்டு போனால் எது மிஞ்சும்?
கருங் கல்லுக்குள் ஈரம் உண்டு – உன்
இதயத்துள் என்ன உண்டு?
என்ன யோசிக்கிறாய்?
இருள் உண்டு இடர் செய்யும் திறன் உண்டு
வேறு என்ன உண்டு?
மனிதம் உண்டென்று சொல்கிறாயா?
ஓம் நல்லது.
அப்ப நீ மனிதன்தான்.

மஹாகவியின் கிராமம்

எம். ஏ. நு:.மான்

மஹாகவியின் பெரும்பாலான கவிதைகள் யாழ்ப்பாணக் கிராமிய வாழ்வைக் கருப்பொருளாகக் கொண்டவை. கிராமியத்தை மஹாகவிபோல் தமிழ்க் கவிதையில் கொண்டுவந்த பிறிதொரு கவிஞன் இல்லை எனலாம். இந்த வகையில் இவருக்கு அண்மையில் நிற்கக்கூடியவர் நீலாவணன் ஒருவர் தான். ஆனால், கிராமியத்தைப் பொறுத்தவரை அளவிலும் தன்மையிலும் மஹாகவி அவரை மிஞ்சி நிற்கிறார். மஹாகவியின் முக்கியமான பெரும்பாலான கவிதைகளில் யாழ்ப்பாணக் கிராமப்புற வாழ்க்கையே சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் மஹாகவியின் கிராமியச் சித்திரிப்பில் கால அடிப்படையில் இருவேறுபட்ட நிலைகளைக் காணமுடிகிறது. அவரது ஆரம்பகாலக் கவிதைகளில் கிராமம் ஓர் இலட்சியபூமியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதையும், அவரது பிற்காலப்படைப்புகளில் கிராமம் அதன் சகல முரண்பாடுகளுடனும் சித்தரிக்கப்பட்டுள்ளதையும் காண்கிறோம். ஆரம்பகாலத்தில் அவரிடம் காணப்பட்ட கற்பனாவாதமும் (Romanticism) பிற்காலத்தில் அவரிடம் வலுப்பெற்ற யதார்த்தவாதமும் (Realism) இந்த வேறுபாட்டுக்குக் காரணம் என்று கூறத் தோன்றுகின்றது.

மஹாகவியின் ஆரம்பக்காலக் கவிதைகளில் நகரமும் கிராமமும் எதிர்நிலைகளாகக் கட்டமைக்கப் பட்டுள்ளன. நகரம் மனித வாழ்வுக்கு உகந்ததன்று. பொய் நாகரிகம் மிகுந்தது. மனித மனத்தை மரத்துப்போகச் செய்வது. பதிலாக கிராமம் மனோரம்மியமானது. மனித மனத்துக்கு உயர்வைத் தருவது. அதுவே மனிதன் முட்டொழிந்து வாழத் தக்க இன்பபுரி. இந்தக் கண்ணோட்டம் 18, 19ம் நூற்றாண்டு மேலைத்தேயக் கற்பனாவாதக் கவிதை மரபின் வழிவருவது எனலாம். கைத்தொழிற் புரட்சியின் விளைவான நகர்ப்புற நாகரிக வளர்ச்சி கிராமத்தின் அமைதியிலும் இயற்கை எழிலிலும் மேலைக் கவிஞர்களுக்கு ஓர் ஈர்ப்பை ஏற்படுத்திய காலம் அது. வில்லியம் பிளேக், வில்லியம் வேர்ட்ஸ்வேத், கோல்றிஜ் லோட் பைரன், ஷெல்லி, ஜோன் கீற்ஸ் போன்றவர்களை ஆங்கிலக் கவிதை மரபில் றொமன்ரிக் கவிஞர்கள் (Romantic Poets) என அழைப்பர். இவர்கள் இயற்கை எழிலுக்குத் தங்கள் கவிதைகளில் அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்கள். இயற்கை எழில், மாசுறாத கிராமத்துடன் இணைத்தே நோக்கப்பட்டது.

காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் நகர மய மாக்கலுக்கு உட்பட்ட ஆசிய நாடுகள் பலவற்றிலும் கடந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் நாம் இந்தக் குரலைக் கேட்கிறோம். இந்தியச் சூழலில் போலியான கைத்தொழில் நாகரீகத்திலிருந்து விடுபட்டு இயற்கையோடியைந்த வாழ்வை நோக்கி கிராமத்துக்குத் திரும்புமாறு மகாத்மாக் காந்தி அழைப்பு விடுத்தமையும், இது தொடர்பாக நாம் நினைவுகூரத்தக்கது. ஐரோப்பிய கற்பனாவாதக் கவிதையின் செல்வாக்கு கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இந்தியக் கவிதையில் பெருமளவு காணப்பட்டது. குமாரன் ஆசான், உள்ளூர், வள்ளத்தோல் முதலிய கவிஞர்கள் மூலம் இது மலையாளக் கவிதையில் அதன் உச்சநிலை அடைந்தது என்பர். பாரதி மூலமே இது தமிழுக்கு அறிமுகமாயிற்று. ஆயினும் பாரதிதாசனும் அவரது வாரிசுகளுமே இதைத் தமிழில் பெருமளவு முன்னெடுத்துச் சென்றனர். எனினும், இவர்கள் றொமன்டிஸத்தின் ஓர் அம்சமான இயற்கை அழகில் மனம் பறிகொடுத்தலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் எனலாம். பாரதிதாசனின் அழகின் சிரிப்பு இதற்கு உதாரணம். 1950,60 கள் வரை தமிழ்நாட்டில் இருந்து வெளிவந்த பாரதிதாசன் பரம்பரையினரின் கவிதைத் தொகுதிகளில் இயற்கை என்ற தலைப்பில் ஒரு தனிப்பகுதி தப்பாமல் இடம்பெற்றிருக்கக் காணலாம். சங்க இலக்கிய மரபில் நாம் காண்பதுபோல் இயற்கை கவிப்பொருளின் பின்னணியாக இல்லாமல்

இயற்கையே கவிப்பொருளாகிய தன்மையை இவர்களிடம் காணலாம்.

மஹாகவி தன் ஆரம்ப காலத்தில் இந்தக் கற்பனாவாதக் கவிதை மரபின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தார். எனினும், பாரதிதாசன் மரபினர்போல் இயற்கையை இயற்கையாக அன்றி, அதை கிராமியப் பண்பாட்டின் ஒர் பிரிக்கமுடியாத அம்சமாகவே நோக்கியுள்ளார். இயற்கையோடியைந்த வாழ்வு கிராமத்திலேயே, கிராமியப் பண்பாட்டிலேயே கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை அவரது ஆரம்பாலக் கவிதைகள் சில காட்டுகின்றன. இந்த வகையில் கிராமம், யாழ்ப்பாணம் செல்வேன், செல்லாக்காசு ஆகிய அவரது மூன்று கவிதைகள் முக்கியமானவை.

கிராமம் 1950களின் ஆரம்பத்தில் அவர் எழுதிய கவிதை, கிராம மக்களின் உயர்ந்த பண்பாடு பற்றிய பின்வரும் படிமத்துடன் அது தொடங்குகின்றது.

நாள்முழுதும் பாடுபடுவார்கள்;– ஓயார்;
நன்று புரிவார் இரங்குவார்கள்;
ஆள் புதியன் ஆனாலும்
ஆதரிப்பர், போய் உதவுவார்கள் – ஊரார்கள்.

பின்னர் கவிதை கிராமத்தின் இயற்கை வனப்பை நோக்கிச் செல்கிறது. அதன் நெல் வயல், மாந்தோப்பு, ஆட்டிடையனின் இசை, வேப்பமர நிழல், பூமலியும் பொய்கை, குயில்பாட்டு இவற்றையெல்லாம் அனுபவிக்கும் போது "நீமடிந்ததென்றிருந்த நின் கவிதை உணர்வு தலைதூக்கும் பா ஆக்கும்" என்று பாடுகிறார் கவிஞர்.

கடைசியாகக் கவிதை இவ்வாறு முடிகிறது.

நல்லவர்களுக் கிதுதான் நாடு – பொய்
நாகரிகத்துக் கப்பால் ஒடு!
முல்லை நாடு பக்கத்தில்
மூன்றறைகளோடு சிறு வீடு போதும் எடு எடு!

இங்கு நகரம் பொய்நாகரிகம் என்றும் கிராமம் நல்லவர்களுக்குரிய நாடு என்றும் கட்டமைக்கப் படுவதைக் காணலாம். இந்த கிராமநகர முரண் யாழ்ப்பாணம் செல்வேன் கவிதையில் இன்னும் கூர்மையாக வெளிப்படுகிறது. இதுவும் 50களின் ஆரம்பத்தில் அவர் எழுதிய கவிதை. இது பத்திரிகையில் பிரசுரமானபோது, ஒரு ஆங்கிலக் கவிதையின் கருத்தைத் தழுவியது என்ற குறிப்பையும் மஹாகவி கொடுத்திருக்கிறார். வள்ளி தகுப்பில் இது இடம்பெற்றபோது அந்தக் குறிப்பு காணப்படவில்லை. கவிதையைப் படிப்போருக்கு இது எந்த வகையில் ஆங்கிலக் கவிதையின் தழுவல் என்ற வியப்பு ஏற்படும். அவ்வளவு தற்புதுமையானதாக உள்ளது மஹாகவியின் கவிதை. பரபரப்பான கொழும்பில் வேலை செய்யும்



ஒரு நடுத்தர வர்க்கத்தவன் சித்திரை விடுமுறையில் யாழ்ப்பாணம் செல்ல ஆயத்தமாகும் உணர்வு நிலையைக் கவிதை வெளிப்படுத்துகின்றது. நகர நாகரிகத்தின் முட்டில் இருந்து விட்டு விடுதலையாகும் உணர்வு நிலையே கவிதையின் மையம், இது கவிஞரின் உணர்வுநிலையாகவும் இருக்கலாம். கவிதை தற்கூற்றாகவே அமைகின்றது.

யாழ்ப்பாணக் கிராமத்தில் தன் வீட்டுச் சுற்றாடலின் இயற்கை வனப்புடன் ஆரம்பமாகிறது கவிதை.

இந்நாள் எல்லாம் எங்கள் வீட்டுப்
பொன்னொச்சிச் செடி பூத்துச் சொரியும்!
முல்லையும் அருகே மல்லிகைக் கொடியும்
கொல்லெனச் சிரித்துக் கொண்டிருக்குங்கள்
அல்லவோ? வயல்கள் எல்லாம் பச்சை
நெல் நிறைந்திருக்கும் என் நாட்டில்! பாட்டுப்
பாடாத உழவன் பாடுவான் துலாக்கள்
ஆடாது நிற்கும் அன்றோ இன்றே!

கிராமத்தின் இயற்கை வனப்பில் இருந்து அதன் உணவுப் பண்பாட்டுக்கு நகர்கிறது. மனம் கொழும்பின் ஹோட்டல் தரும் முட்டை ரொட்டிக்குச் சலித்துப் போன மனம் கிராமத்தில் தாய் அன்புடன் ஊட்டிய கூழையும், பழஞ்சோற்றையும் எண்ணி வாயூறுகின்றது.

கூழ்ப்பானையின் முன் கூடிக் குந்தி
இருந்து இலைகோலி இடுப்பில் இட்டு ஊட்டிய
கரம் தெரிந்து ஊற்றும் அவ்விருந்து
அருந்திலனேல்
பட்டினி போக்கா பழம்,பால்,இவ்வூர்



ஓட்டலின் முட்டை ரொட்டிகள்!
அன்னை பழஞ்சோற்றுண்டி கிழங்கொடு
பிசைந்து
வழங்கலை நினைத்தால் வாயூறாதோ?

இந்த வாயூறலே பயணத்தைத் துரிதப்படுத்து கின்றது.

"கடவுளே! உடனே உடுத்துக் கொண்டு
அடுத்த ரயிலைப் பிடித்துக்கொள்கிறேன்"

என்கிறார் கவிஞர்.

அந்தப் பெற்ற பொன்னாட்டைப் பிரிந்து
இனிமேலே
சற்றும் இக்கொழும்பில் தங்கேன்! இங்கே.

என்று தனக்குத் தானே உறுதி கூறிக்கொள்கிறார். அடுத்த வரிகளில் மன, உடல் ரீதியில் முட்டை ஏற்படுத்தும் செயற்கையான நகர நாகரிகம் படிமமாக்கப்படுகின்றது.

முலை இளம் முளைகள் முனைந்தெழுவதனை
கலை குறைத்து அணியும் கன்னியர் காட்டவும்
தலை இழந்தே நாம் தடந்தோள் ஒளிக்கும்
சட்டைகள் கைகள் முட்ட இட்டும்
பட்டிகள் கழுத்தை வெட்ட விட்டும்
கொட்டிடும் வியர்வையில் குமைவதா?

என்ற கேள்வி இந்தப் படிமத்தின் ஊடாக மனதில் மேல் எழுகின்றது. அதற்குரிய பதிலோடு கவிதை இவ்வாறு முடிகிறது. "இவற்றை விட்டெறிந்து எண்சாணி வேட்டி கட்டி முட்டொழியலாம் அம் மூதூர் செல்வேன்."

நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையே உள்ள உணவு, உடைப் பண்பாட்டு வேறுபாட்டைக் குவிமையப்படுத்தி எளிமையான கிராமப் பண்பாடே உள, உடல் இறுக்கத்தைத் தளர்த்தி ஒரு விடுதலை உணர்வைத் தருகிறது என்ற ஒரு படிமத்தை இக்கவிதை நமக்குத் தருகின்றது. வாலிப வயதில் கிராமத்தைவிட்டு கொழும்புக்குத் தொழில் நிமித்தம் சென்ற இளம் மஹாகவியின் உண்மையான மன உணர்வையும் இக்கவிதை வெளிப்படுத்துகின்றது எனலாம்.

மூன்றாவது கவிதை 'செல்லாக்காசு' சற்றுப் பிந்தி 1960களின் ஆரம்பத்தில் எழுதப்பட்டது என்று நினைக்கின்றேன். இதுவும் நகரம், கிராமம் என்ற எதிர்முரண்பற்றிய கவிதைதான். இக்கவிதையும் தன்கூற்றாகவே அமைகின்றது. பணத்தை மையமாகக் கொண்ட, ஒரே வட்டத்தில் சுற்றிச் சுழல்கிற, சாரமற்ற நகர வாழ்க்கைக்கு நீண்டகாலமாகப் பழக்கப்பட்ட ஒருவன், பிரதிபலன் எதிர்பாராத கிராம மக்களின் பரிவுக்கு ஆளாகி உயிர்தளிர்ப்புற்ற நிலையை கவிதை சித்தரிக்கின்றது.

பஸ் பயணத்துடன் கவிதை தொடங்குகின்றது. கவிசொல்லியான நகரத்தவன் பஸ்ஸில் பயணம் செய்கிறான். திட்டமான குறியிடம் நோக்கியதன்று அவன் பயணம். சாரமற்ற நகரவாழ்வில் இருந்து தற்காலிகமாகவேனும் விடுபடுவதே அவன் நோக்கமாகத் தெரிகிறது.

"வண்டி செல்கிறது எந்த வழியிலோ! பல
வாரமாய்ச் சூட்டினில் மாடுபோல். செயல்
மண்டிய நகரிலே வளைய வந்ததால்,
மானிட மனமுமோ மரத்துப் போனது!
நொண்டிய அதனை அந் நோயின் நீக்கிடும்
நோக்கமொன்றால் சில தூரம் தாண்டினேன்"

என்று தொடங்குகின்றது கவிதை. சூட்டினில்மாடு, மரத்துப்போய்நொண்டும் மனம் என்பன நகரத்தின் வரட்சியைக் காட்டும் சொற் குறியீடுகளாக உள்ளன. அவனுடைய பயணம் ஒரு ஆறுதல் தேடும் பயணம்தான் என்பது தொடக்கத்திலேயே தெரிவிக்கப்படுகின்றது.

கண்டது வழியிலே எழில் இறங்கினேன்;
காலடிப் பாதையில் கால் நடந்தன.

எனத் தொடரும் அடுத்தவரிகளில் அவன் எதிர் பாராமலே அவனது நோய்க்கு மருந்து கிடைத்து விட்டது தெரிகிறது. அடுத்துவரும் வரிகளில் அவன் எதிர்கொள்ள நேர்ந்த அனுபவங்கள் விரித்துரைக்கப்படுகின்றன.

"புல்லில் என் பாதங்கள் பட உண்டாகிய
போதையை சொல்லினில் போட்டுக் காட்டுதல்
அல்ல என நினைவு"

என்று தொடர்கிறான். சிலவேளை அது அவன் சொல்லுக்கு அடங்காததாக இருக்கக் கூடும். வெம்பகல் எரித்த வேளையில் அவன் அங்கு போய்ச் சேர்கிறான். அது தொலைவில் உள்ள பின்தங்கிய கிராமம். மாலையானதும் ஒரு கல்லில் அமர்கிறான். "காற்று எனை அணைத்து இன்பக் களைப்புண்டாக்கிற்று" என்கிறான். அந்தக் களைப்பில் அவனுக்கு பொழுது போனதே தெரியவில்லை. இனிப் போகலாம் என்று எழும்பியபோது "அதோ செல்கிறதாம் இவ்வூர்க் கடைசி வண்டியும்" எனத் தெரியவருகிறது. அடுத்து வரும் இரண்டு செய்யுள்கள் முன்பின் அறிமுகமில்லாத அவனைக் கிராமத்துக் குடிசைவாசிகள் எவ்வாறு உபசரித்தார்கள் என்பதைப் படம் பிடிக்கின்றன.

போய் ஒரு படலையில் தட்டினேன். அது
பொக்கெனத் திறந்தது. பொழுதைத் தூங்க ஓர்
பாய் கிடைத்து. கிள்ளும் பசிக்கு வீட்டவர்
பச்சை அன்பொடு காய்ந்தபாணி கிடைத்தது.

என்ற வரிகள் தரும் கருத்தா இல்லாமலே காரியம் நடப்பதான இந்தச் சித்திரம், கிராமத்துப் பண்பாட்டில் இந்த உபசரணை சுயேச்சையான, இயல்பான நிகழ்வு என்ற உணர்வைத் தருகிறது. அன்றுதான் அவன் நிம்மதியான ஆழ்ந்த துயில் கொண்டான் போலும்

வாய் இருந்தது அங்கே நுளம்புக்கு ஆயினும்
வந்தது மரணத்தின் துளியைப்போல் துயில்
என்று கூறுகிறான
காய்கிற கதிர்களின் சவுக்குப்படும் வரை
தூங்குகிறான்.

விடிந்ததும்தான் வீட்டவர் அவனை அன்புடன் விசாரிக்கின்றனர். "ஏங்கிடுவார் அன்றோ தேடி நும் மவர்?" என ஆதங்கப்படுகின்றனர். இப்பொழுதுண்டு ஒரு வண்டி பட்டணம் என வழிப்படுத்துகின்றனர். அந்த வீட்டவரின் அன்பு அதேகணம் மறக்கற்பாலதன்று என்று அவன் நினைக்கின்றான். எல்லாவற்றையும் பணத்தினாலேயே அளவிடும் அவனது பட்டணத்து மனம் அவர்களது பயன்கருதா அன்பையும் அவ்வாறே அளவிட முயல்கிறது. பலர்க்கும் நாம் நீட்டும் தாள் ஒன்றை" அவன் அவர்களுக்கும் நீட்டுகிறான். அதற்கு, அவர்களுடைய எதிர்வினை அவனுக்கு வாழ்வின் மறுபக்கத்தை, நகரத்தவன் காணாத பிறிதொரு பக்கத்தை உணர்த்துகின்றது. கவிதை பின்வருமாறு முடிகின்றது.

அப்பொழு தலர்ந்த இன் முகத்தின் மென்மலர்
அப்படிக் குவிந்திருள் அடைந்ததேன்! துயர்
கப்பியதேன் ஒளி விழிகள் மீதிலே!
காசையோ அவற்றின் சந்நிதிமுன் வீசினேன்!
குப்புற வீழந்தன நிலத்தில் என்விழி
கூறுதற் கின்றி என் உதடு மூடின.
எப்படியோ பின்னர் நகர் திரும்பினேன்.
எனினும் என் உளத்திலே உயிர் தளிர்த்தது.



இந்த மூன்று கவிதைகளும் கிராமம் பற்றிய மஹாகவியின் ஆரம்பகாலக் கண்ணோட்டத்தைத் தெளிவுபடுத்துகின்றன. இங்கு கிராமம் முரண்பாடுகளும் மோதல்களும் அற்ற மனிதனின் உயிர் தளிர்க்கச் செய்யும் இலட்சிய பூமியாகவே படிமம் கொள்கிறது. கிராமம் பற்றிய மஹாகவியின் இந்த இலட்சியப் படிமம் 1960களில் அவர் எழுதிய தேரும் திங்களும் போன்ற சிறு கவிதைகளிலும் சடங்கு. கண்மணியாள் காதை, சாதாரண மனிதனது சரித்திரம், கோடை, புதிய தொரு வீடு போன்ற பெரிய படைப்புகளிலும் காணப்படவில்லை. இவையெல்லாம் கிராம வாழ்வையே மையமாகக்கொண்ட படைப்புகள். இவற்றில் சித்திரிக்கப்படும் கிராமம் இலட்சிய பூமியல்ல. இங்கும் முரண்பாடுகளும் மோதல்களும் உண்டு. பொய்மைகளும் போலித்தனங்களும் உண்டு. இங்கு அன்பும் அரவணைப்பும் மட்டுமன்றி வன்முறையும். ஒடுக்குமுறையும் படுகொலைகளும் உண்டு. நீதியை மறுதலிக்கும் கூறுகளும் நீதிக்கான போராட்டங்களும் உண்டு. இந்தக் கிராமம் யதார்த்தமானது. மஹாகவி காட்டும் இந்த யதார்த்தமான கிராமத்தின் இயல்புகள் விரிவான ஆய்வுக்குரியன.

நன்றி : ஓலை கொழும்பு தமிழ்ச்சங்கம்

கண்கள் ஏதோ?

தர்மிகா உமாசுதசர்மா

அது ஒரு நாள் மாலைப் பொழுது. வேகமாக வண்டியொன்று நான்கு கால்களில் வந்தது.

கவிதாவின் வீட்டின் முன்பாக நின்றது. அதிலிருந்து ஒருவர் இறங்கி கவிதாவின் வீட்டினுள் சென்றார்.

சில நாட்களுக்கு முன்பு...

காலியில் இருந்த அழகிய மாடிவீடுகளுள் இதுவும் ஒன்று. கீழ் வீட்டில் தான் இருந்துகொண்டு மேல் வீட்டை வாடகைக்குவிட எண்ணியிருந்தாள் கவிதா. அவளின் எண்ணம் போல ஒருத்தி, அன்றொரு நாள் வந்திருந்தாள். அவள் பெயர் கீதா. "பக்கத்துல இருக்கிற யுனிவசிட்டிலதான் படிக்கிறன்" என்றாள். இரண்டு நாட்களில் வந்து அறையொன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டாள். வந்த முதல் நாளே அவளுக்கு வித்தியாசமான ஒருவித உணர்வு அங்கு தோன்றியது. தன்னுடன் யாரோ பேச முயற்சிப்பது போலவும் அவளுக்கு உறுத்திக் கொண்டிருந்தது. ஆனாலும் அவள் புது இடம் என்று அதை பெரிதாக எண்ணவில்லை. அவள் படித்ததோ சைக்கோலொஜி: மற்றவர்களின் முகத்தை வைத்தே அவர்களுடைய எண்ணங்களை கண்டு பிடிப்பதில் கை தேர்ந்தவள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டின் பின்புறத்தின் ஜன்னல் கதவைத் திறந்தாள் அவள். அங்கு எதிர்பாராத ஒன்றைப் பார்த்தாள். அவள் உடனே கீழ் வீட்டில் இருந்த கவிதாவிடம் சென்று இதைப் பற்றி விசாரித்தாள். ஆனால் கவிதாவோ மௌனபாஷை தெரிந்தவளாக தன்னைக் காட்டிக்கொண்டாள். கீதாவின் மனதில் மீண்டும் மீண்டும் இது தொடர்பான விடயங்களே ஓடிக் கொண்டிருந்தமையால் கவிதாவை விடுவதாயில்லை. கவிதா திருதிருவென முளித்தாள்; செய்வதறியாது தவித்தாள். கடைசியில் சொல்லத் தொடங்கனாள்.

"பின்பக்கத்தில் இருந்த அந்த வீட்டின் வாசலில் உள்ள தூணில் ஒரு இரத்த கறையுடன் கை ரேகையைப் பார்த்தாயே!"

"அதனை எல்லாரும் பேயுண்ட எண்டு சொல்லுவினம்."

"அந்த வீட்டையே பேய் வீடு எண்டுதான் சொல்லுவினம்."

"ஆனால் உண்மையில் யாருடையது எண்டு யாருக்கும் தெரியாது. அங்க யாருமேல போறேல. நீயும் போகாத" என்றாள்.

கவிதா அப்படிச் சொல்லியும் கூட கீதா கியுரியோசிட்டி மூலம் அந்த வீட்டுக்குப் போனாள்.

அவள் அங்கு பார்த்தா போட்டோப்ரேம்;
அதிலிருந்த கண்கள்;
மனதில் இருந்த எண்ணங்கள்;
தொடர்ச்சி...

சிறுகதை

அம்மா இனியென்ன செய்ய!

சாதாரணன்

'இப்ப இந்த வாடகை வீட்டுக்கு வந்து மூன்று நாள் முடிஞ்சுபோச்சு. மேல் மாடி வீடு. அவரும் கான்சர் வருத்தத்திலை என்னை விட்டுப்போய் அஞ்சு வருஷமாச்சு.

மகளும் மகனும் என்னோடை இருக்கினை. அவை இருந்தாலும் எனக்கு மனுசன் இருக்குமாப் போலை வருமோ! என்ன செய்யுறது! என்ன செல்லப்பிள்ளையாய்ச் சீவிச்சன்.

மகளுக்கும் வெளிநாட்டு மாப்பிளையைப் பாத்துக் கல்யாணம் செய்து வைச்சன். அவளும் விசா வராமல் அந்தரப்படுறாள். ஏஜென்சியைப் பிடிச்செண்டாலும் அலுவல் பாத்துப் போகலாமெண்டு நகை நட்டை வித்து அம்பது லச்சம் காசு கட்டினம். ஒரு கிழமையிலை போகலாமெண்டு சொன்ன ஏஜென்சி இப்ப ஒரு வருஷமாய் இண்டைக்கு நாளைக்கு எண்டு இழுத்தடிக்கிறான். பிள்ளைக்கும் இப்ப முப்பத்தெட்டு வயசாச்சுது. பிள்ளைக்கு நான் ஒரு வேலையும் சொல்லுறேல்லை. அவள் பாவம்!

மேன் நிர்மலன் வேலைக்கு வெள்ளண்ணவே விடிய முந்தி போய் விடுவான். அவன் வர இரவு ஆறு ஏழு மணியாகும். கீழை முப்பது படிக்கட்டு இறங்கி வெளிக்கேற்றைப் பூட்டவேணும்.

இரவு புட்டுக்கு உருளைக்கிழங்கும், முட்டையும் வேண்டவேணும். காலமை கடைக்கு போன்னான். வேண்ட மறந்து போனன். நிர்மலனைக் காணேல்லை. அவன் வந்தால் கடைக்கு விடலாம். ஆ... கேற் திறந்து சத்தம் கேக்கிது...'

"தம்பி... உப்படியே போய் உதிலை கடேலை பத்து முட்டையும் ஒரு கிலோ உருளைக்கிழங்கும் வேண்டியா மோனே!"

"முதல்லையேபோனிலைசொல்லியிருக்கலாமே! மனிசர் ஆத்துபதைச்சு அலைஞ்சுவாறன். திரும்பிப் போறதெண்டால் எரிச்சலாய்க்கிடக்கு"

'என்ன செய்யுறது. அவனும் ஆருக்கோ முழு நாளும் அடிச்சுக் குடுக்கிறான். முழுநேரமும் நின்ற படியும் நடந்த படியுந்தான் வேலையாம். வீட்டுக்கு வந்து அவன் ஆற வழியில்லை.

மகன் சாமான் கடையிலை வேண்டிக் கொண்டந்ததும் புட்டும் கறியும் பொரியலும் செய்து மகனும் மகளும் சாப்பிட்டு விட்டினம். மகள் கௌரி ரீவி பாக்கிறாள். மகன் போன் பாக்கிறான்.

முந்தியிருந்த வீட்டிலை இரண்டு நாயளை வளர்த்தனான். இந்த வீட்டுக்கு வந்த பிறகு நாயளை கீழைதான் வைச்சிருக்கிறன். அதுகளும் பசியிலை ஊளையிடுதுகள். மத்தியானம் சமைச்சதைக் கொண்டே நாயளுக்கு வைச்சுப்போட்டு வருவம்! வாயில்லாச் சீவன்கள்.

நான் சமைச்சுக் களைச்சாலும் மகனையோ, மகளையோ கேக்கப்படாது. மகனும் களைச்சுப் போனான்.

இரண்டு கையிலையும் சாப்பாட்டு கோப்பையளோடை படியிலை மெதுமெதுவாய் இறங்கினன். படிப்படியாய் இறங்கிக் கடைசிப்படியிலை இறங்கேக்கை காலை மாறி கீழ்ப்படியிலை வைச்சுவிட்டன்.

பிடரி குப்பற விழுந்து போனன். கோப்பையள் ஒவ்வொரு பக்கத்திலை. மத்தியானச் சோறும் கறியளும் எல்லாப்பக்கமும் சிந்தப் பரவிக்கிடக்கிது.

ஆ... கால் எடுத்து வைக்க முடியேல்ல. எழும்ப முயற்சித்தாலும் முடியேல்ல.

"ஐயோ! ஐயோ!" எண்டு கத்தினன். அசைய முடியுதில்லை.

மகள் கௌரி ஓடி வந்தாள். அவளால் என்னைத் தூக்கிப் பிரட்ட முடியேல்ல.

மகன் நிர்மலனும் வந்து விட்டான். இரண்டு பேரும் சேர்ந்து தூக்கி என்னை நிமிர்த்தவும்... நான் "ஐயோ! ஐயோ!" எண்டு குளறுறன்.

நாயளும் ஊளையிட்டுக் கத்திக்கொண்டு ஓடி வருகினம் எனக்குப் பக்கத்திலை.'

"அம்மாவுக்கு துடை எலும்பு வெடிச்சு முழங்கால் சிரட்டையும் பிரண்டு போச்சுது. பிளேற் வைக்க வேணும்" எண்டு டொக்டர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலை சொல்லுறார்.

மகள் கௌரி தன்ரை பாட்டிலை அழுது கொண்டு இருக்கிறாள்.

"அம்மா இனியென்ன செய்ய!"

கௌரியின் அழுகைக் குரல் யாருக்கும் கேட்காது.

தென்புலத்தார்
தொழுதேற்றல்
நூல்நயம்
05

வீரகாவியம்

("ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள்" என்ற தலைப்பில் நினைவில் வாழும் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை)

சோ. தேவராஜா

'மகனின் கையெழுத்தில் சித்தன்கேணிச்சந்தியிலும் யாழ் வைத்தியசாலைச் சந்தி மதிலிலும் பின்வரும் சுவரொட்டிகள் எழுதி ஒட்டப்பட்டிருந்தன.

'ஆற்றல் மிகு கரங்களிலே ஆயுதங்கள் ஏந்துவதே

மாற்றத்துக்கான வழி மாற்று வழி ஏதுமில்லை' என்றும்

(அக்காலத்தில் கவிஞர் கணேசவேல் அவர்களின் புகழ்பெற்ற கவிதை வரிகள் இவை)

'தமிழ்குலமே, வீட்டிற்கு ஒருமகனை வீரமுடன் தாராயோ'(பக்கம்–145)

'தோழர் தான் தேச ஒற்றுமையின் மூலம் மக்களுக்கான விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம் என வாழ மகனோ இனங்கள் பிரிந்து போராடி உரிமை பெற நினைப்பது 'வீட்டினுள் எவ்வளவு பெரியமுரண்' என வ.சு வருந்தினார்.(பக்கம்–145)

சுந்தரம் கொலை செய்யப்பட்டபின்னர், விக்ரோறியாவில் சிறந்த மாணவர்களாக விளங்கிய கண்ணன் என்ற வடலியடைப்பு சோதீஸ்வரனும், சுரேஷ் என்ற சுரேந்திரன் சுந்தரலிங்கமும் வீட்டிலிருந்து காணாமல் போயினர். 'புதியபாதை' என்ற பத்திரிகையின் இடதுசாரிப் போக்கிற்கு இவர்களும் கே.ஏ.சு. வுடன் சந்ததியார், சுந்தரத்தின் பேர்களைச் சொல்லி அறிமுகமாகிக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தின் பல பாடசாலைகளில் குறிப்பாக விக்ரோறியாக் கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இராசர் அரசியல் வகுப்புக்கள் எடுத்ததாகவும் பல மாணவ மாணவிகள் படகில் இந்தியா சென்றதாகவும் சிலர் கடலில் இறந்ததாகவும் வ.சு. குறிப்பிடுகின்றார்.(பக்கம்–146)

" எந்தன் மகன் மாத்திரமா? எத்தனையோ ஆயிரம்பேர் சொந்த பந்தங்கள் துடிக்கச் சொர்க்கம் போயினரோ?"

என்று தன் துன்பத்தைக் கவிதையில் வ.சு. வடித்தார்.

1983– செப்ரெம்பர் 23 மட்டக்களப்புச் சிறையுடைப்பில் 150 கைதிகள் தப்பி ஓடியது பற்றியும் இதில் ஈடுபட்ட இயக்கங்களின் ஒற்றுமை பற்றியும் வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்ட அரசியல் கைதிகளின் தொடர்ச்சியாக மட்டக்களப்பு கைதிகளின் உயிர்மீட்பு நடவடிக்கையாக இது அமைந்ததென விபரிக்கின்றார்.

மக்களின் விடுதலைக்காகப் போராடுவதற்காகப் புறப்பட்ட இயக்கங்களே ஒடுக்கு முறையாளர்களாகின்றனர். இயக்கங்களிடையே ஒற்றுமையைக் கோரி நின்ற மக்களுக்கு ஒடுக்குமுறையையே பரிசாக வழங்குகின்றனர். அனைத்து இயக்கங்களும் மற்ற இயக்கத்தினர் மேலான படுகொலைகளை ஏவிவிட்டதன் மூலம் தமது பாசிச முகத்தினை வெளிப்படுத்துகின்றனர். இந்தியாவால் வகுத்துக் கொடுத்து ஒப்பேற்றப்பட்ட அநுராதபுர நகரச் சிங்கள பொதுமக்கள் படுகொலையை அடுத்து இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 ஜூலை 26 ல் கைச்சாத்திடப்படுகிறது. சில மாதங்களில் இராசன் விடுதலையாகிறான்.(பக்கம்–153)

1981 ல் மாவட்ட சபைக்கான தேர்தலுக்கான பிரச்சாரக் கூட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி, இருவர் மரணமடைந்தனர். அதைத்தொடர்ந்து 1981– மே– 31–ம் திகதி இரவு அரச வன்முறையில் யாழ்– சந்தை, வணிக நிறுவனங்கள், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், யாழ்ப்பாணப் பொது நூலகம் ஆகியன முற்றாக எரியூட்டப்பட்டன. (பக்கம்–135) பொதுநூலகம் எரிக்கப்பட்டதுட்பட இந்நிகழ்வுகள் யூன் 01 ம் திகதி என்பதே சரியானதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

' நமது ஊர் விக்ரோரியாக் கல்லூரி உட்பட பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, வழக்கம்பரை, பறாளாய் முருகன் ஆலயம், திருவடிநிலை, மாதகல், சங்கானை இதற்குள் அகப்பட்ட சகல கிராமங்களையும் உள்ளடக்கி 11–12–1984 தொடக்கம் 72 மணித்தியால ஊரடங்குச் சட்டம் போடப்பட்டு தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டது. (பக்கம் –158) ஆனால் 64 மணிநேர ஊரடங்கு என்பதே சரியானது.

'இராஜசுந்தரம் மாஸ்ரர் ஆமி சுழிபுரத்தைச் சுற்றி வளைக்கப்போகிறார்கள். நீ இங்கு நிற்காதே என

இராசனுக்குச் சொல்லி இருக்கிறார். அது மட்டுமல்ல. அடுத்த நாள் எங்கள் வீட்டிற்கும் வந்து இந்தச் செய்தியைச் சொல்லிச் சென்றார்.' (பக்கம்–159)

'லவன்' என்ற ஒரு மருத்துவக் கல்லூரி மாணவன் கைது செய்யப்பட்ட போது கொடுத்த வாக்குமூலத்தில் தனக்கு மீரான் மாஸ்டர் என்பவருடன் தொடர்பு இருந்ததாகவும், அவரே மாஓவின் இராணுவப்படைப்புகள் நூலை மொழிமாற்றம் செய்வதாவும் குறிப்பிட்டிருந்தார்.(பக்கம்–159)

'புளொட் அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன் வந்துநிற்பதை அறிந்து தான் இத்தேடுதல் என்றும் மக்கள் கதைத்தனர்' (பக்கம்–159)

'அன்று தான் குணதிலகம் பாஸ்கரன் பல்கலைக்கழக மாணவர்களைப் பாதுகாக்கும் பணியில் ஓடியவர் மூட்டுச்சந்தைக்கு அருகில் சூடுபட்டு மரணமடைந்தார். (பக்கம்–160) இவ்வூரடங்கு சமயத்தில் பறாளை ஆலயமுன்றலில் கந்தையா ஐங்கரன் சூடுபட்டு சிறைப்பிடிக்கப்பட்டு வைத்தியமின்றி மரணமடைந்தார். ஓடம் காளி அம்மன் கோயில் சுற்றாடலில் வைத்துத் திருநாவுக்கரசு ஜெகதீஸ்வரன், கதிரைமலை நந்தீசன் சூடுபட்டு இறந்தனர். அன்று எமதூரில் 21 பேர்களுக்கு மேல் உயிர் நீத்தனர்' (பக்கம்–160)

'அடுத்த நாள் அதிகாலையில் சங்கானையில் வாகனத்தில் வைத்து பொன்னாலை ஞானகணேஷ் என்ற பாபு சுடப்பட்டு இறந்தார் என அறிந்து என்னை மீறி அழுதேன். இச்சம்பவத்தில் சுன்னாகம் வசந்தன் காயமடைந்தார். பாலமோட்டைசிவம், சின்னமென்டிஸ், சுழிபுரம் கோபு மயிரிழையில் உயிர் தப்பினர் என கீர்த்தி அன்று சாயந்தரம் சொன்னார். (பக்கம்–161)

"அண்ணாவைப்பற்றி ஒருத்தருக்கும் ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் பாவித்த வெள்ளை நிற காரைப் பறாளாய் வெளியில் வைத்து ஆமி கொண்டுபோனதாம்." என்று பபியும் கீர்த்தியும் அழுதனர். (பக்கம்–161)

'5–ம் நாள் சாயந்தரம், "பறாளாய் வெளியில் யாரையோ ஆமி சுட்டு இரத்தம் கிடக்குது' என்ற செய்தி கேட்டு பபியும் கீர்த்தியும் அங்கே போயினர். காலை போய் மாலை வரும் போது கையில் இரத்தம் தோய்ந்து காய்ந்து போன அறகம்புல் கொண்டு வந்து இது அண்ணாவின் இரத்தம்" என்று அழுது வீட்டின் தாழ்வாரத்தில் செருகிப் பத்திரப்படுத்தினர். (பக்கம்–162)

'முதன்முதலாகத் தோழர் அழுதார். "எங்கே என் குழந்தை. என்ன நடந்தது. அவன் இறந்திருக்கமாட்டான்" எனத் தோழர் சொன்னார்.(பக்கம்–162)

தோழர் வழமையாக இரவுச்செய்தி வானொலியில் போடுவார். செய்தியில் "தமிழீழ விடுதலைக்கழக மீரான்மாஸ்ரர் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சத்தியராஜன் கைதானார்" எனச் சொன்னது.(பக்கம்–162)

எனக்கு என் மகன் உயிரோடு இருக்கிறான் என்பதே ஓரளவு ஆறுதல் தந்தது. ஆனால் அவருக்குக் கிடைக்கும் தண்டனை பயத்தையே தந்தது. எனக்கு முதன்முதலில் விநோதங்களைக் காட்டிய என் குழந்தை பட்ட வேதனைகள் எவ்வளவோ? எனத்தாய் மனம் பதைபதைத்தது' என வ.சு, தன் வலியை வெளிப்படுத்துகிறார். (பக்கம் 162)

இராஜனுடன் பல இளைஞர்கள் குருநகர் இராணுவமுகாம், கோட்டை இராணுவ முகாம், பலாலி இராணுவ முகாம் பின்னர் பூசா, வெலிக்கடை என்ற சிறைக்கூடங்களின் சிறைவாழ்வு (பக் 162).

1985 பெப்ரவரி மாதக் கடைசியில் ஓய்வுநிலை அதிபர் வை. இராசசுந்தரம் மூலம் குருநகர் இராணுவ முகாமில் கைதுசெய்யப்பட்ட பல இளைஞர்களுடன் இராசனையும் வைத்திருப்பதாக அறிந்தனர்.

கைதிகளைப் பார்க்கச் செல்பவர்கள் யாழ் அரச அதிபரிடம் பெயர், முகவரி, அடையாள அட்டை விபரங்களைக் கொடுத்து அனுமதிக் கடிதம் பெறவேண்டும். அக் கடிதம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. அரச அதிபரின் வாகனத்தை புளொட் தலைவர் பாவிப்பதற்காக இராஜன் கடத்தியதாகத் தகவல் இருந்தது. எனினும் நீண்ட முயற்சியின்பின் அரச அதிபரின் கடிதம் கிடைத்தது.

1984 டிசம்பர் ஊரடங்கில் பறாளாய் வெளியில் இராணுவம் சுற்றிவளைத்தபோது வாகனத்தைவிட்டு இறங்கி ஓட, இராஜனைக் காப்பாற்ற ஒற்றையாய் நின்று தனிச் சமர் புரிந்து மரணமானார் ஜெயமனோகரன் சரவணமுத்து. அவரை நண்பர்கள் 'தோழர் ரங்கன்' எனவும் செல்லமாக 'ஆடு' எனவும் அழைப்பார்களாம். மாதகலைச் சேர்ந்தவர். அன்றே இறந்து போக வேண்டிய இராசனை மேலும் 15 வருடங்கள் வாழ வைத்த அந்த ஜெயமனோகரன் குழந்தையை இன்றும் நினைத்தபடியே... ' என வ.சு. பதிவுசெய்கிறார். (பக் 164)

"இராசனை வ.சு. தனியாக முகாம் சென்று பார்க்க நினைத்தபோது, கே. ஏ. சு. பபியையும் அழைத்துச் செல்லும்படி வற்புறுத்தினார். "அவர் இந்த உலகத்தை தைரியத்துடன் எதிர்நோக்கி வாழ முற்படவேண்டும். அதற்கான சந்தர்ப்பம் இது. அவள் புத்திசாலி. தைரியசாலி. அவள் உமக்குப் பாதுகாப்பாக இருப்பாள். கூட்டிச் செல்லுங்கள்" என்றுவிட்டார்' (பக். 165)

குருநகர் இராணுவம் கைதிகளை

வீடமைப்பு இலாகாவின் குடியேற்ற தொடர்மாடிக் கட்டித்தில் வைத்திருந்தனர். வார இறுதியில் மட்டுமே கைதிகளைப் பார்க்க முடியும். இருவருக்கு மட்டும் அனுமதி.

'இராசனை இரு ராணுவ வீரர்கள் ஆயுத சகிதம் அழைத்துவந்தனர். இராசனது கைகள் விலங்கிடப்பட்டிருந்தன. கண்களுக்குக் கீழே ஏதோ... ஒரு வட்ட வடிவில் சூட்டுக் காயங்கள் அரைகுறை ஆறாத வடுக்களாகத் தெரிந்தன. அதைப்பற்றி ஒன்றையும் நான் கேட்கவில்லை. அழகான, கம்பீரமான என் குழந்தை கோலம் கெட்டு, ஆளுமை இழந்து, வெளிறி அந்நியன் போல நின்றான். அந்தக் கணம் இன்றுவரை என் கண்ணில் இருந்து அகலவில்லை. பெரும் ஓலம் என்னுள் அடங்கி நெஞ்சை இறுக்கியது. தாரையாய் கொட்டிய மூவரின் கண்ணீருக்குத் தடையேது. ஏதும் பேசவில்லை' (பக்–166)

'ஆயிரமாயிரம் கேள்விகள் மூவருள்ளும் அடங்கி அமிழ்ந்தன. அப்பாவையும் தம்பியையும் கவனமாக இருக்கச் சொன்னார். தவழத் தெரியாத காலத்தில் பல நாட்கள் "இராசன் உனக்குத் துணையாக இருப்பார்" எனத் தோழர் என்னை விட்டுச் சென்றிருக்கிறார். எனக்குக் காவலனாக இருந்த என் மூத்த செல்வம் ஓயாது பேசிப் பாடி முழங்கும் என் தீரனை மௌனமாய், கையில் விலங்குடன் பார்த்த காட்சி– அவன் விடுதலையாகியும் மறையாது என் கண்களில் நின்று நிலைத்தது. (பக் 166) என வ. சு. தாயாகிய தனது துயரைப் பகிர்கின்றார்.

இப்படி நான்கு ஐந்து தடவைகள் சென்று பார்த்தனர். 3 மாதத்தின்பின் கைதிகளை யாழ். கோட்டைக்கு மாற்றினர்.

"யாழ் பஸ் நிலையத்திலிருந்து சுற்று வழிப் பாதையாக மணிக்கூட்டுக் கோபுரம், றிம்மர் மண்டபந் தாண்டி 2–ம் குறுக்குத் தெருவூடாகக் கோட்டை இராணுவ முகாமைச் சென்றடைய இரண்டு மணித்தியாலம். எங்கும் இராணுவம். பொது சனமோ, பிற வாகனமோ எதுவுமில்லை. மயான அமைதி. (பக். 169)

'நிச்சாம சாதிய எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகத் தோழர்கள் தருமு, பழனி, நடேசன் எனச் சிலர் சிறையிருந்த காலத்தில் தோழர்களைப் பார்க்க கோட்டைக்குச் சென்றிருக்கிறேன்' (பக். 169) என்று தன் பழைய நினைவை வ. சு. பகிர்கின்றார்.

தன் மகளுடன் கோட்டை முகாமுக்குச் சென்று வருவதில் உள்ளூர அவருக்குப் பயமிருந்தது. ' இராணுவத்தினர் ஏதாவது சீண்டல்கள் செய்வார்களோ என்ற பீதிதான். ஆனால் ஒரு நாளாவது ஒருவரும் எந்தவிதமான இடைஞ்சலும் செய்யவில்லை. அவர்கள் ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகளாக இருந்தார்கள் போலும்.' (பக்– 169) என தன் வர்க்க கணிப்பை வெளிப்படுத்துகிறார்.

'முதல் தடவை இராஜனைக் கோட்டையில் பார்த்த நாள் மறக்க முடியாத ஒன்று. இராணுவ மேயர் முஸ்லீம் இனத்தவர். ஏற்கனவே வீட்டுக்குச் சுற்றிவளைப்பில் வந்தவர். எங்கள் மூவரையும் அதிகாரிகள் அறையினுள் அழைத்துச்சென்று 'அம்மா கதிரையில் இருங்கோ' என்றார். அவர் அலுமாரியைத் திறந்து ஒரு பொதியில் இருந்து கைத்துப்பாக்கியையும், சன்னங்களையும் எடுத்தார். ஐயோ...! என் பிள்ளையை என் கண்முன்னே சுடப் போகிறாரோ என்று பயந்து எழுந்துவிட்டேன். ஏனென்றால் இராஜரின் நண்பரான கேதீஸ்வரன் என்பவர் யாழ் நாகவிகாரையைச் சிலர் கொழுத்தி அழித்தபோது தடுத்தார். பின் கைது செய்த இளைஞர்களுடன் சேர்த்து அவரையும் இராணுவம் கொலை செய்தது. இக்கதையை இராசரே எனக்குச் சொன்னவர்.'

'அம்மா, இந்த துவக்கு எங்களிடம் கூட இல்லை. ரஷ்யா நாட்டு 1984–ம் ஆண்டுத் தயாரிப்பான பிஸ்டல். இதை உங்கள் மகன் வைத்திருந்தார். இந்த உடை குண்டு துளைக்காத அங்கி. இவற்றுடன்தான் உங்கள் மகன் பிடிபட்டார். நான் உங்கள் வீட்டிற்கு உங்கள் மகனைத் தேடி வந்திருக்கிறேன். ஞாபகம் இருக்குதா' எனக் கேட்டார்.

மகள் பபி கேவிக் கேவி அழுதபடி நின்றாள். அவளைப் பார்த்து "நீங்களும் புளட்டா? சிவப்பும் கறுப்பும் சட்டை போட்டிருக்கிறீர்கள்" என்றார். "உள்ளே வரும்போது ஏதாவது கரைச்சல் இருந்ததா" என்றும் கேட்டார். (பக் 171)

"மகனுக்கு வீட்டில் சமைத்த சாப்பாடு கொடுக்க அனுமதி கேட்டபோது "தாராளமாகக் கொண்டுவாருங்கள்" என்றார். (பக்–171)

"சிறையில் தமிழ் அரசியல் கைதிகளின் நலன்களைப் பேண சகல இயக்கங்களின் போராளிகளும் இணைந்து செயற்பட்டனர்.ஈ.பி ஆர். எல் எவ் இயக்கத்தைச் சேர்ந்த சுபத்திரன் (றொபேட்), குமார் (திருகோணமலை), குமார் (மலையகம்), ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த குரு, செட்டி, காரைநகர் சோதி, புளொட் இயக்கத்தைச் சேர்ந்த மாறன், செல்லக்கிளி மாஸ்டர், ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த அன்புநாதன், தங்கவடிவேல் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ரவி, முரளி ஆகியோர் (பக். 173)

'முதல்நாள் கொடுத்த சுடுதண்ணிப் போத்தலை இராஜர் எடுத்து வந்திருந்தார். அதனைத் தரும்போது தங்கையின் கையை அழுத்தி "சுடுதண்ணிப் போத்தில் கவனம், கவனம்" என்றிருக்கிறார். கோட்டை வாசல் தாண்டியதும் பபி சொன்னாள். "Flask இனுள் ஏதோ இருக்க வேணும். திறந்தால்தான்

தெரியும்" என்றாள். (பக்–174)

‘தோழர் வீட்டிற்கு வர விபரம் சொன்னோம். சுடுதண்ணீர்ப் போத்தலை வாங்கிப் பார்த்தவர் பிளாஸ்ரிக்கினால் ஆன அடிப்பாகத்தைக் கழட்டினார். ‘அம்பிசிலின்’ குளிசை அளவு குற்றியான சிறுதுண்டு கீழே விழுந்தது. எடுத்து மெதுவாக விரிக்க அது ஒரு சிகரெட் ஈயப் பேப்பர். அது அவர் தோழர்களுக்கான கடிதம். இரகசியச் சொல்லாடலுடன் எழுதப்பட்டிருந்தது. அதை இராசருக்குப் பழம் கொண்டுவரும் நண்பர் மூலம் உரியவர்களிடம் சேர்ப்பித்திருந்தோம். (பக். 175)

"இராணுவத்தினால் வீசப்படும் சிகரெட் ஈயப்பேப்பரையும் பேனைக் கூர்களையும் சேர்த்து அதன் மைகளை ஒன்றினுள் செலுத்தி உபயோகித்ததாகப் பின்னர் 1988ல் இராசன் சொன்னார். (பக 175)

‘சிறைக் கைதிகளுக்குக் கடதாசியோ, பேனாவோ வைத்திருக்க அனுமதிக்க மாட்டார்கள். இருந்தும், எப்படி எழுதி எமக்கு எப்படிக் கிடைத்தது என்பது ஒரு பெரிய கதை. இராணுவத்தினர் தாங்கள் பாவித்த சிகரெட் பெட்டிகளை வெளியே வீசினால் அவற்றில் உள்ளே இருக்கிற ‘ஈயரிஸ்யு’ போன்ற சிறு கடதாசியைப் பொறுக்கி எடுப்பார்களாம். (பக். 185)

‘பேனாவும் அப்படித்தான். மேற்படி இராணுவத்தினர் எழுதி முடித்த குமிழ்முனைப் பேனாக்களைக் குப்பைக்குள் வீசினால், அதற்குள் இருக்கும் உள்தண்டுகளைப் பொறுக்கிக் கொண்டுவந்து, மைகளைச் சேர்த்து ஒன்றாக்கி ஒளித்து வைத்துப் பாவிப்பார்களாம்." (பக் 185).

இராணுவ நடமாட்டத்தை போராளிகள் துல்லியமாகக் கவனித்து இராணுவத்தைக் கோட்டைக்குள் முடக்க ஆரம்பித்தனர். இராணுவம் கடல்மார்க்கமாகவும் வான் மார்க்கமாகவும் பயணங்களை ஆரம்பித்தனர். புன்முறுவல் செய்யும் சில சிப்பாய்கள் கூட பாராமுகமாக நடந்தனர். (பக்–175)

‘அடுத்த தடவை கோட்டை முகாமுக்குச் சென்ற போது "கைதிகளின் பாதுகாப்பிற்காகப் பலாலிக்கு மாற்றிவிட்டோம்" என்றனர். (பக்–175)

‘1948–ம் ஆண்டில் இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட முதல் இராணுவத் தளமாகும். கடற்படை, விமானப்படை அருகிலிருப்பதால் மிகப்பெரிய இராணுவத் தளமாக மாறியது. (பக்–177) மகனைத் தேடி பலாலி முகாமுக்கு வள்ளியம்மை தனது மகளுடன் பலதடவை குறுக்குமறுக்காகப் பல மைல் தூரம் பாரம் தூக்கியபடி தனித்துப் பயணம் செய்துவந்திருக்கின்றார். இதனால் புலிகள் இவர்கள்மீதே சந்தேகம் கொண்டு விசாரித்தும் வெருட்டியும் தெரிந்த புலி உறுப்பினர் இவர்களுக்கும் உதவியதையும் பதிவிட்டுள்ளார்.

‘விரதக் காலத்தில் படிக்கத் தேவார, திருவாசக, திருப்புகழ் புத்தகங்களும் கொடுக்க அனுமதியுண்டு. முதல் நாள் கொடுத்த பிளாஸ்ரிக்குடன் ஒரு புத்தகமும் எம்மிடம் திருப்பித் தரப்படும். அந்தப் புத்தகத்தின் முன் பக்கத்தில் 5–ம் பக்கம் பார்க்கவும் என்று எழுதப்பட்டிருக்கும். இப்படியே ஒவ்வொரு பக்க இலக்கம் குறிப்பிட்டு, இப்படி அந்த சங்கேத பாஷையைக் கண்டு பிடித்தவர்கள் இராசனின் சகோதரர்கள்தான் (பக் 185)

‘1986– கார்த்திகையில் நடைபெற்ற மகளின் திருமணத்தின்போது இராணுவக் கோட்டைச் சிறையிலிருந்த மகன் சத்தியராசன் ரகசியமாக அனுப்பிய திருமண வாழ்த்துச் செய்தியினைத் திரு மார்க்கண்டு அவர்கள் படித்தார்’ (பக்–186)

அவ்வாழ்த்தின் ஒரு பகுதியை வ. சு. பதிவிட்டுள்ளார். ‘பாட்டாளி பாராள வேண்டுமென்ற தந்தை– அவர் பாதைதனைத் தொடர்ந்து செல்லும் அன்னை–அடக்குமுறைதனை உடைத்தெறிவோம் என்ற அண்ணன்– அநியாயம் கண்டு குமுறும் தம்பி– அன்பிற்கோர் மாமா, மாமி – ஆசைக்கோர் அங்கிள் அன்ரி– அறிவு சொல்லும் தோழர்– ஆதரிக்கும் சுற்றம்– இவர்கட்கு அருமை பெருமையாய் பிறந்தாய், அன்புடன் பாசத்துடன் வளர்ந்தாய்; கருணை, இரக்கம் உன் பழக்கம். கலக்கம், தயக்கம் இல்லை அது உன் வழக்கம். சமூக மாற்றம் வேண்டி நிற்கும் ஒருவன் வாழ்வுதனில், உந்தன் துணைவன் வாழ்க்கைதனில், அவன்பணி தொடர வேண்டும். அவர்களுள் நாமறிந்த இருவர் மாக்ஸ், ஜென்னி (அப்பா, அம்மா) அவர்கள் போல் நீயும் வாழ்வில் வெற்றி கொள்ள வாழ்த்துகிறேன். (பக்.186)

விடுதலைத் தேசியத்தில் மூழ்கிய சத்தியராசன் மாக்சிய வாழ்வையே நேசித்தார் என்பதற்கு இவ்வாழ்த்துச் செய்தி சான்று பகர்கிறது.

இராசன் பூசா முகாமுக்கு மாற்றப்பட்ட சமயத்தில் தோழர் கதிரவேலு, ஏ.ஜே. கனகரத்தினா ஆகியோரிடம் வேதனைகளைச் சொல்லி வ. சு. அழுதிருக்கிறார். (பக்.193)

தோழர் கதிரவேலு சர்வதேச மன்னிப்புச் சபைக்கு முறைப்பாடு செய்யும் முயற்சிகளை மேற்கொண்டார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க போராட்டக் காலத்தில் கே. ஏ. சு. வின் ஏற்பாட்டில் பின்னாளில் மேல்நீதிமன்ற நீதிபதியாய் பணிபுரிந்த ரி. டபிள்யூ, வனம் இராஜரட்ணத்தின் மகன் சட்டத்தரணி ரி. சி. இராஜரட்ணம் கட்டணமெதுவுமின்றி இராசனுக்காக நீதிமன்றில் வாதாடினார். ஏ. ஜே. கனகரட்ணா ‘சற்றடே றிவியூ’ பத்திரிகையில் விடயதானங்களையும் பிற விடயங்களையும் அவருக்கு அனுப்பி ஆதரவு செய்தார். (பக் 193)

அடுத்த இதழிலும் நூல்நயம் தொடரும்

வேதாளமும் முருங்கையும்

நாவல்

தொடர்

-6-

அசன்

விக்கிரமாதித்தனுக்கு பொழுது போகாவிட்டால் சங்கானைக்கு போவோம் என்று வேதாளம் தேவாரம் பாடும். எழுபதுகளில் பண்டத்தரிப்பில் இல்லாத ஒரு ஈர்ப்பு சங்கானைக்கு இருந்தது உண்மைதான். சூழலுக்கும் மக்களுக்கும் பங்கம் இல்லாமல் மெதுவாக தன்பாட்டில் வளர்ந்து வந்த நகரம். அடக்கமான ஆனால் பழம் பெருமை கொண்ட சந்தை. முன்னாலே பஸ்தரிப்பு நிலையம். இருநூறு மீற்றர் சித்தங்கேணி பக்கமாக போக வயல் காணி வீதியை முட்டி சுகமான காற்றை முகத்தில் வாரி இறைக்கும். இன்னொரு இருநூறு மீற்றர் போக டச்சு கோட்டையின் கூரை இல்லாத உயர்ந்த கறுத்த சுண்ணாம்பு கற்சுவர்கள் வரலாற்றை சொல்லிக்கொண்டிருக்கும். அதற்கு முன்னால் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று அந்த பிராந்தியத்துக்கே படம் காடும் சினிமா தியேட்டர். இந்த தியேட்டரில் வந்த எந்தப் படத்தையாவது விக்ரமாத்தித்தான் உட்பட மன்றத்து இளைஞர்கள் பார்க்காமல் விட்டிருப்பார்களா என்பது சந்தேகமே. நாடு முழுக்க ஓடிக்களைத்த படங்கள்தான் இங்கு வரும். அநேகமான படங்கள் மழையில் எடுத்ததுபோல் தெரிந்தாலும் அதை பார்த்து எது மழை எது கீறல் விழுந்த ரீல் என்று பகுத்துணர மக்கள் பக்குவப்படிருந்தார்கள்.

தியேட்டருக்கு அருகில் நவீனமான சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கம் தன் மேன்மையை கம்பீரமாக பறை அடிக்கும். சிறிமா அரசின் வெளிநாட்டு பொருட்களின் இறக்குமதி தடை சங்கானை பலநோக்கு சங்கத்தை சுய உற்பத்தியில் நாட்டின் முன்னணிக்கு உயர்த்தியிருந்தது. அந்த காலத்தில் நாடு முழுவதற்கும் ஆண்களின் கால்சட்டை துணிக்கு சங்கானையையும் பண்டத்தரிப்பையும் அரசு நம்பி இருந்தது. ஒன்று கருப்பு மற்றது பழுப்பு. இரண்டே நிறம்தான் அதுவும் கூப்பனில். வருடத்துக்கு இரண்டுமுறை மட்டுமே வாங்கலாம். டச்சு கோட்டையை அண்டி செல்லும் குறுக்கு தெருவால் ஒரு நூறு மீற்றர் போனால் அந்த வரலாற்று சிறப்புமிக்க மின்தறி ஆலை வரும். இந்த கூட்டுறவு சங்கத்தின் அபரிமித வளர்சிக்கு மூல காரணமாயிருந்த பொது முகாமையாளர் தொண்டர் என அழைக்கப்பட்ட வி கந்தசாமி எங்கள் ஊரவரும் மன்றத்தின் போசகரும் என்பதில் மன்றத்தார் பெருமை கொண்டார்கள். இந்த மின்தறிக்கு போகும் பாதையில்தான் இன்னொரு சிறப்புமிக்க திறந்தவெளி அரங்கும் அதை ஒட்டிய வாசிகசாலையும் உள்ளது. இந்த வாசிகசாலைதான் விக்கிரமாதித்தனுக்கு வேறொரு உலகை காட்டி அவன் போக்கை மாற்றியது என்றும் சொல்லலாம். அந்த காலத்தில் சங்கானையில் உதவி அரசாங்க அதிபராயிருந்த சோ. அருணாசலத்தின் முயற்சியின் திருவினை அது. திறந்தவெளி அரங்கை நிர்மாணித்து அதில் வருடம் தோறும் சித்திரா பவுர்ணமியில் நாடகவிழா நடக்க ஒழுங்கு செய்திருந்தார். கலைகள் விளையும் நிலமான சங்கானை பெருவாரியான நாடக குழுக்களையும் விளைவித்திருந்தது.

1975 சித்ரா பவுர்ணமிக்கு கலையடி மறுமலர்ச்சி மன்றம் ஒரு நாடகம் தர வேண்டுமென்று அருணாசலம் கேட்டுக்கொண்டார். அல்லது கட்டளை இட்டார் என்றும் சொல்லலாம். நாடகமே வாழ்வென கொண்ட சங்கானை பெரும் கலைஞர்களோடு பள்ளி சிறுவர்கள் மோதுவதா என திகைத்தாலும் அத்தி பூத்தாற்போல் கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை இழக்க மன்றத்தார் விரும்பவில்லை. மன்றத்தின் ஒவ்வொரு ஆண்டு விழாவிற்கும் வருகை தரும் உதவி அரசாங்க அதிபர் மன்றம் பற்றி நல்ல அபிப்பிராயத்தை கொண்டிருந்தார் என்பது தெரிந்தது. கால அவகாசம் சிறிது. ஏற்கனவே அரங்கேறிய நாடகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே ஒரு சனிக்கிழமை காலை புதிய நாடகம் ஒன்றை உருவாக்க காலையடிப் பள்ளியில் இளைஞர் பட்டாளம் கூடியது. குறுக்கும் நெடுக்குமாக கருத்துக்கள் விழுந்து மோதி ஒருவாறு நாடகம் உருக்கொள்ள மதியம் கடந்து மாலையாகியது. சனி ஞாயிறில் சாப்பாடிற்காக மட்டுமே வீட்டிற்கு போகும் வழக்கமுள்ள மன்றத்தாரை இன்று சாப்பாடிற்கும் காணவில்லையே என்று தாய்மார்கள் தேடுவார்களோ என்ற பயத்தில் மாலையோடு இடை நிறுத்தி பின்

மீண்டும் மன்றத்தில் சந்தித்து நாடகம் செப்பனிடப்பட்டு நடிகர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மாவோவின் சிந்தனையால் கவரப்பட்டு நாடகம் 'காகிதப் புலிகள்' என நாமம் பெற்றது. அந்த வருட சித்திரை விடுமுறையை நாடக ஒத்திகைகள் முற்றாக ஆக்கிரமித்திருந்தன.

இந்த இடத்திலை மாவோ எப்படி மன்றத்துக்குள் நுழைந்தார் என்றது ஆராயப்பட வேண்டியதுதான். அதை பின்னல் பார்க்கலாம். அந்தக் காலத்தில் நாடகப் பிரதிகள் அரசால் அங்கீகரிக்கப்படவேண்டும். பிரதியை பார்த்த அருணாசலம் ஒரு கவிதையை வெட்டிவிட்டு மிகுதியை அனுமதித்தார். அது பாரதியின் கவிதை வரிகள். 'கஞ்சி குடிப்பதற்கிலார், அதன் காரணங்கள் இவை எனும் அறிவுமிலார், பஞ்சமோ பஞ்சமென்றே தினம் பரிதவித்தே உயிர் துடித்தே துஞ்சி மடிக்கின்றாரே, இவர் துயர் துடைக்கவோர் வழி இல்லையே' . அந்த வரிகள் அரச விரோதமாக இருப்பதாக அருணாசலம் கருதியிருக்கலாம். ஆனால் அதை வெட்டியதால் அதன் அர்த்தம் மேலும் ஆழமாகி அது இல்லாமல் நாடகம் போடுவதில் அர்த்தம் இல்லை என மன்றத்தரை நினைக்க வைத்தது. என்ன வந்தாலும் அதை விட்டு விடுவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

சித்ரா பவுர்ணமி வந்தது. பல்வேறு நாடகக் குழுக்களின் ஆக்கங்களை ஒரே மேடையில் காணக் கிடப்பது அரிதானபடியால் மக்கள் வேலிகளை தாண்டி வீதிகளிலும் நிறைந்து நின்றார்கள். வழமையான சினிமாப்பாணி சமுக,வரலாற்று நாடகங்கள் மேடையேறி போட்டியிட்டன. அதற்கடுத்து காகிதப்புலிகள் மேடையேறியது. இசையும் தாளலயமும் சமகால அரசியலும் சங்கானை மக்களுக்கு புதிய அனுபவமாயிருந்தது. வெளியே நின்று பார்த்துக்கொண்டிருந்த அருணாசலம் மெதுவாக மேடையை நோக்கி வந்தார். அதை கவனித்த மன்றத்தார் வெட்டிய வரிகளை சேர்த்ததற்கு வாங்கிக் கட்ட தயாராகினர். இடையிலே நிப்பாட்டாமல் விடடால் போதும் என பயத்தோடு நடித்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவரோ மேடையின் பின்புறமாக உள்ளே வந்து பாடகர்களோடு நின்று நாடகத்தை முடியும்வரை பார்த்தார். முடிந்த பின் கட்டித்தழுவி மகிழ்ந்தார். சங்கானை வட்டாரத்திலுள்ள எல்லா ஜம்பவான்களையும் மண் கவ்வ வைத்து வெற்றிக்களிப்போடு மன்றத்தார் கீழிறங்கி மக்களோடு ஐக்கியமாகினர்.

எட்டு வீட்டு சாப்பாட்டில் கோழிக்கறி போல அடுத்த சில வருடங்களில் குடாநாட்டில் நடந்த கலைவிழாக்களில் காகிதப் புலிகள் விசேட சங்கதியாகியது. நாடக முடிவில் கொடுக்கப்படும் விருந்திலும் கோழிக்கறி பிரதானமானது. அதுவே நாடகம் போட்டதற்கான சன்மானமாக மன்றத்தார் பெருவிருப்போடு ஏற்றுக்கொண்டனர். விரைவில் காகிதப்புலிகள் அம்பது மேடைகளை தாண்டிவிட்டது. கோழிக்கறியால் கவரப்பட்ட அங்கத்தவர்கள் எல்லாம் அடுத்த மேடையில் தாங்களும் ஏற வேண்டுமென்று அடம் பிடித்தனர். நாடக மாந்தர்களை மாற்றுவது பிரச்சினையாக இருக்கவில்லை. மன்ற அங்கத்தவர்கள் ஏன் ஊரவர் எல்லோருக்குமே நாடகம் முழுமையாக மனப்பாடமாகிவிட்டது. நெல்லியடி போன்ற கிராமங்களில் அதிக தடவை மேடை ஏற்றப்பட்டதால் அந்த ஊர் சிறுவர்கள் கூட நாடக வரிகளை நாடக மாந்தர்களுடன் சேர்ந்து பாடத்துவங்கினர். எனவே கொஞ்சம் பிசகு பண்ணியவர்கள், ஒத்திகைக்கு வரத்தவறியவர்கள் உடனடியாக காத்திருப்பவர்களால் மாற்றீடு செய்யப்பட்டனர்.

யாழ் பல்கலைகழகத்தின் நாடக துறை துவக்க விழாவிற்கு காகிதப்புலிகள் விசேடமாக மேடையேற்றப்பட்டதாலும், நடிகர் ஒனியம் வெளியிட்ட 'நாடகம்நான்கு' என்ற நூலின் முன்னுரையில் பேராசிரியர் கைலாசபதி யாழ்ப்பாணத்தில் நவீன நாடகத்தின் வருகை காலையடியாரின் காகிதபுலிகளுடனும் நெல்லியடி அம்பலத்தாடிகளின் படைப்புகளுடனும் துவங்குவதாகக் குறிப்பிட்டதாலும் 'காகிதப்புலிகள்' பாமரர்களை தாண்டி படித்தவர்களிடமும் போய்ச் சேர்ந்தது.

அவ்வேளையிலே சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் நூற்றாண்டு விழா வந்தது. மன்றத்தில் அரைவாசி உறுப்பினர்கள் மட்டுமன்றி அவர்களுடைய பெற்றோர்களும் கற்ற பள்ளி அது. மூன்று நாள் நடந்த நூற்றாண்டு விழாவில் ஒரு நாடகப் போட்டி. அதில் நிச்சயமாக காகிதப்புலிகள் இடம்பெறவேண்டுமென உப அதிபராயிருந்த சர்மா மாஸ்டர் கேட்டுக்கொண்டார்.

அப்போது இராசசுந்தரம் விக்டோரியாக் கல்லூரியின் அதிபராகவிருந்தார். அதே வேளையில் அவர் சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கும் பிரபலமான மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு தலைவராக இருந்தார். அவருடைய வீட்டில் ஆடுகள் குளறிக் கேட்டால் அன்றிரவு யாரோ அமைச்சர் வருகிறார் என்று அயலவர்கள் அர்த்தப்படுத்திக் கொள்வர். இராசசுந்தரம் வீட்டு ஆடுகளுக்கு எமன் போல அமைச்சர்கள் அடிக்கடி வந்துபோவார்கள்.

அவருடைய அரசியலுக்கும் மன்றத்தின் அரசியலுக்கும் முரண்பாடு உள்ளதால் அரச விரோத கருத்துகளை தவிக்குமாறு சர்மா மாஸ்டர் தயவாகக் கேட்டுகொண்டார். அப்படி நீக்கினால் நாடகமே வேண்டாம் என மன்றத்தார் மறுத்தனர். இறுதியில் புதிதாக ஏதும் புகுத்தாமல் மேடையேற்ற இணக்கம்

ஏற்பட்டது. ஆனாலும் இராசசுந்தரத்துக்கு பாடம் கற்பிக்க புதிய வசனங்கள் இணைக்கப்பட்டு முக்கியமான வரிகளுக்கு அழுத்தம் அதிகரிக்கப்பட்டது.

விக்டோரியாக் கல்லூரி உதைபந்தாட்ட திடல் மக்களால் நிறைந்திருந்தது. கதிரைகள் போடப் பட்ட பகுதியில் இராசசுந்தரம் எல்லோருக்கும் தெரியக்கூடியதாக அல்லக்கைகள் புடை சூழ கம்பீரமாக வீற்றிருந்தார். தமிழ் திரையில் கதாநாயகனுக்கு சலாம் போடும் நகைசுவை நடிகர்களைப் போல் உள்ளூர் பிரமுகர்கள் அடிக்கடி வந்து அவருக்கு சலாம் போட்டனர். அவருடைய செல்வாக்கை நன்கு புரிந்துகொண்ட சில மன்றத்து நடிகர்கள் அவர் தங்களை பார்த்து அடையாளப் படுத்திவிடக்கூடாது என்பதில் கவனமாகவிருந்தனர். நாளைக்கு வேலை வாய்ப்புக்கு அவரின் வீட்டு வாசல் கதவை தட்டவேண்டிய நிலை வரலாம். அதனால் சில நடிகர்கள் அளவுக்கதிகமாகவே முகப்பூச்சை அப்பி முகத்தை மறைக்க முனைந்தனர்.

நாடகம் மேடை ஏறியது. இராசசுந்தரத்தின் இருப்பு நடிகர்களின் உணர்வை உசுப்பிவிட அது ரசிகர்களின் உணர்வையும் எகிற வைத்தது. 'ஆற்றல் மிகு கரங்களிலே ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத்துக்கான வழி. மாற்று வழி ஏதுமில்லை' என்ற கவிஞர் கணேசவேலின் வீரமான கவிதை வரிகளுடன் நாடகம் முடிந்தது. இராசசுந்தரத்துக்கு பாடம் படிப்பித்த நிறைவோடு அவரை விட்டு விலகி அடுத்த பக்கமாக சில நடிகர்கள் நடந்து வந்தனர். அவர்களை கண்ட இராசசுந்தரம் தனக்கு ஏற்கனவே தெரிந்த விக்கிரமாதித்தனை பெயர் சொல்லி அழைத்தார். சிங்கத்தின் குகைக்குள் சென்ற முயல் போல பதுங்கி பதுங்கி விக்ரமாதித்தன் அவருக்கு கிட்டே சென்றான். "சேர் நான் அதிலே நடிக்கேல்லை. சும்மா பாக்க வந்தனான்" என்ற வசனத்தை மனதுள் ஒத்திகை பார்த்தான். வாய்த்தர்க்கம் முத்தி அவரின் அல்லக்கைகள் வன்முறையில் ஈடுபடலாம் என்ற எச்சரிக்கை உணர்வோடு மற்ற நடிகர்கள் விக்கிரமாதித்தனை சுற்றி படை வியூகம் அமைத்தனர். கிட்ட நெருங்கியதும் சிரித்தபடி முஸ்டியை உயர்த்தி காட்டி 'எங்கடை நாடகத்தை ஒருத்தராலையும் வெல்ல முடியாது. வெற்றி எங்களுக்குத்தான்' என வெகு உற்சாகமாக சொன்னார். அல்லக்கைகள் ஆமோதித்தன. வார்த்தைகளை தொலைத்த மன்றத்தாருக்கு இவர் காகிதப்புலிகளைத்தான் எங்கடை நாடகம் என்று சொல்கிறார் என்று புரியவே நீண்ட நேரம் எடுத்தது. யாருக்கு எதிராக நாடகம் போடுவதாக நினைத்தார்களோ அவரே தங்களில் ஒருவர் போல பேசியதை மன்றத்தாரால் நம்ப முடியவில்லை.

இதே இராசசுந்தரம் பின் நாட்களில் வகை தொகையாக இராணுவம் இளைஞர்களை கைதுசெய்தபோது அரசுடன் கொண்ட உறவை பயன்படுத்தி மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் தலைவர் என்ற அடிப்படையில் அவர்களை வெளியில் எடுக்க உதவினார். இயக்கங்களை சேர்ந்தவர்கள் கூட அவரின் உதவியை நாடிய சம்பவங்களும் உண்டு. பின்னர் இராணுவத்துடன் உள்ள உறவு காரணமாக ஒரு இயக்கத்தினரால் கடத்தப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். அந்த செய்தி அவருக்கு எதிராக நாடகம் போடுவதாக நினைத்த அதே மன்றத்தாருக்கும் குறிப்பாக அவரிடம் கற்ற விக்ரமத்தித்தனுக்கும் மிகுந்த கவலையை தந்தது. பல தவறுகள் நடக்க அவர் காரணமானாலும் மறக்கமுடியாத ஒரு கனவான் அவர் என்பதை மறுக்கமுடியாது

தொடரும்

குல சாமியடா நீ...



சிவா முருகுப்பிள்ளை

துப்பாக்கி எடுக்கவில்லை
துடுப்புடன் போனாய்
வெ(கொ)ல்லப் போகவில்லை
மீட்டிடப் போனாய்

தரையில் போகவில்லை
கரைசேர்க்க போனாய்
வெஞ்சினத்துடன் போவில்லை
வெள்ளத்திற்குள் போனாய்

மகனே எங்கே புதைந்தாய்...?
சமுத்திரம்தான் விழுங்கியதோ....?

துப்பாக்கியுடன் போய் இருந்தால்....?
மரணப் பெட்டியிற்குள் வருவாய் என்று
மனதை ஆற்றுப்படுத்தி இருப்பேன்

நீ துடுப்புடன்தான் போனாய்
துப்பாக்கியை தூர எறிந்துவிட்டு

காப்பாற்றி கரையேற்றி
கடமை முடிய வருவாய்...
காத்திருந்தேன்
பாற் சோறு உனக்கு ஊட்ட

நீ கரையேறாது...?
மக்களை கரையேற்றி
நீரில் கரைந்தது ஏனோ..?
சேற்றில் புதைந்தது தானோ...?

கரைக்கப்பட்டவன் நீ
துரத்தப்பட்டவன் அல்ல
விதைக்கப்படவன் நீ
புதைக்கப்பட்டவன் அல்ல.

உன் அருகில்
தமிழ் சகோதரனும்
புதைக்கப்பட்டிருப்பான்...?
அவன் கரம் கொடுப்பான் உனக்கு

அதனால்
எனக்கு மட்டும் அல்ல
எங்களுக்கு மட்டும் அல்ல
எல்லோருக்கும்
குல சாமி ஆகிவிட்டாய்

இங்கு புத்தனும்... முருகனும்....
அல்லாவும்... யேசுவும்....
உன்னை விஞ்சும்
சாமி ஆகிவிடுவார்களோ... ?

நீதான் ஈழத்து குல சாமியாடா!

மழை புயல் அனர்த்தங்களில் தம்முயிரை அர்பணித்த வீரர்களுக்கு சமர்பணம்.

(மீட்புப் பணியில் ஈடுபட்ட கடற்படை வீரர்கள் சிலர் மரணம் – செய்தி)
அதற்கு தாயின் புலம்பலாக மனதில் உதித்த வரிகள் இவை) –முகநூலிலிருந்து

பிள்ளை எங்கை!

செண்பகன்

மழை பெய்யுது
இடி இடிக்குது
மின்னல் தெறிக்குது
புயல் அடிக்குது
குளிர் விறைக்குது
கூதல் விழுங்குது!

மண் இடியிது மலை புரளுது
விண் இடியிது அலை எழும்புது
நிலத்திலை தாவுது மரத்திலை மனிசர்
மாடி மறையுது மலை விழுங்குது
ஓடிய ஆறு தாறுமாறாய் எழும்புது
கார்கள் பஸ்கள் வெள்ளத்தில் மூழ்குது
பென்சில் மிஞ்ச பிள்ளை எங்கை!
பிள்ளை எங்கை! என்ரை ஐயோ!

அப்பா அம்மா மாமா மாமி
அக்கா தங்கை அண்ணன் தம்பி
அயலவர் நண்பர் அனைவரும் ஒன்றாய்
பயந்து செத்த மண் மூச்சு விடுகிது

ஆத்திலை மிதந்த மனிசர் தலைகள்
உருளுது பிரளுது அள்ளுண்டு போகுது!

பஞ்ச பூதங்கள் படையணி திரளுது
மிஞ்சி இருந்த மனிசர் எழுந்து
அஞ்சிச் சாகாது ஒன்றாயத் திரண்டு;

கஞ்சி குடித்துக் காலம் களித்து
நெஞ்சு நிமிர்த்தி நெடுமூச்செறிந்து
நெருப்பென்ன நீரென்ன நிலமென்ன
காற்றென்ன அண்ட வெளியென்ன
பிரபஞ்சப் பேரண்டப் பேரன்பு பெறுவோம்
பிறகென்ன பிறகென்ன ஒன்றாய்த் திரள்வோம்.

துக்கம் விரட்டித் தூக்கம் கலைத்து
மக்கள் திரண்டு மாற்றம் விளைத்து
மகிழ்வொடு எழுவோம்
மகிழ்வொடு எழுவோம்
எல்லோரும் நிமிர்ந்து
எல்லோரும் உயர்ந்து.

என் உண்மைக் காதல்

செல்லத்துரை ஜெயராசா

"அண்ணன் எண்ட வாயாலே அத்தான் எண்டு சொல்லட்டோ. புன்ன மரமே என்னை ஒரு முழம் கொண்டு எழுப்பு" என்று சொல்ல மரம் ஒவ்வொரு முழமாக வளர்ந்து எட்டாத தூரத்துக்குச் சென்றது. அண்ணன் என்று பழகிய ஒருவன் திருமணம் செய்யுமாறு கேட்கிறான். அவளின் பெற்றோரும் அவன் வேண்டுதலை ஏற்று அவளை வற்புறுத்துகின்றனர். விருப்பமில்லாத அவள் மரத்தில் ஏறிக் கொள்கிறாள். இறங்குமாறு வற்புறுத்தும் ஒவ்வொரு வேளையும் அவள் புன்னை மரத்தை வேண்ட அது முழம்முழமாக வளர்கிறது. இது என் சிறுவயதில் பாட்டி சொல்லக் கேட்ட கதை.

'அத்தான் என அழைப்பாள் என்று ஆசையை வளர்த்த என்னை அண்ணா என்று அழைத்தாளே. திருமண அழைப்புத் தந்தாளே. திருமண அழைப்புத் தந்தாளே. என்ன செய்வேன். விசமே கடலே நதியே தீயே கிணறே எனை ஏற்றுக் கொள்கிறாயோ" திருமண அழைப்பை பார்த்ததும் என் தலை சுற்றுகிறது!

அவள் அந்தக் கடிதத்தைத் தந்தபோது என் னுள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது. தன் தொழிற்சாலை வாசலில் வைத்து அதைத் தந்தாள். அதைத் திறந்து பார்க்க மனம் துடித்தது. மெதுவாகத் திறந்து பார்த்தேன். மஞ்சள் தாள். மங்கலமாகப் பார்த்தது. வீதியில் வைத்துப் பார்ப்பது அழகல்ல. வேலைத்தலத்துக்குச் சென்று பார்ப்போம். வேலைத்தலத்துக்குள் புகுந்த நான் வரவைப்

பதிந்துவிட்டு வருகிறேன். நண்பன் ஒருவன் "என்ன மச்சான் முகத்திலை சந்தோசம் கூத்தாடுது" என்கிறான்.

இங்கே வைத்துப் பார்த்தால் இவங்களும் தலையை ஓட்டுவான்கள் என்றெண்ணி மறை விடத்துக்குச் செல்கின்றேன். உள்ளே இருந்த அந்த மங்கல ஓலையை எடுத்து விரிக்கின்றேன். முத்தான எழுத்துக்கள். முத்தான செய்தியல்லவா!

'பாசம் நிறைந்த பிறேம் அண்ணாவுக்கு'

முதல் வரியே பாரிய சம்மட்டியாய் மார்பிலே அடித்தது. திருமண அழைப்பு அது. மூச்சுவிட முடியவில்லை. மூச்சுத் திணறியது. அதிர்ந்துவிட்டேன். தலை சுற்றுவது போல இருந்தது. சுதாகரித்துக் கொண்டு மீண்டும் பார்க்கின்றேன்.

திருமண நாள் இடம் மணமகன் விபரம் இருந்தது.

என் பாசத்துக்குரிய சிலருக்கு என் சொந்தக் கையெழுத்திலே அழைப்பை வரைந்திருக்கிறேன். கட்டாயம் கட்டாயம் கட்டாயம் உங்களை எதிர்பார்க்கின்றேன். அன்புத் தங்கை கல்யாணி. இரவல் கையாலா எழுதுவார்கள். எரிச்சலாகவும் இருந்தது. சிலரில் ஒருவனாகி விட்ட எனக்கு கட்டாய அழைப்பாம்.

சீரணிக்க முடியவில்லை. தலை மாத்திரமல்ல. உடல் முழுக்க வலித்தது. இண்டைக்கு வேலை செய்ய இயலாது. லீவு எடுக்கவேணும். பொறுப்பாளரைக் கெஞ்சி லீவு எடுத்துக் கொண்டு வருகிறேன். நண்பன் ஒருவன் வருகிறான். அவன் கேட்க முதலே "தலைவலி மச்சான்" என்று சிணுங்கிவிட்டு வெளியே விரைகிறேன்.

"சந்தோஸத்திலும் தலைவலி வருமா" என்று அவன் யோசித்திருக்கலாம். என்னுடைய அறைக்கு வந்த நான் கதவைத் திறந்து உள்ளே சென்று கதவைச் சாத்திவிட்டு கட்டிலில் விழுகிறேன். அடக்கி வைத்திருந்த கண்ணீர் உடைப்பெடுத்து தலையணையை நனைக்கிறது. ஓவென்று கதறி அழ முடியவில்லை!

காதகி, பாதகி. மோசக்காரி. அவளே இவளே என்று என் மனம் திட்டுகிறது.

அவளின் அழகை அணுவணுவாய் ரசித்த மனம்– பூவாய் அலையாய் நதியாய் நிலவாய் எல்லாமாக ரசித்த என் மனம் புழுவாய் புழுவிலும் கீழாய் பார்க்கிறது.

'டொக். டொக் டொக்...' கதவு தட்டப்படுகிறது. முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டு எழும்புகிறேன். எதிரில் சுவரில் மாட்டியிருந்த கண்ணாடி என் முகத்தைக் காட்டுகிறது. முகம் சிவந்துபோய் காய்ச்சல் வந்தவன் போல. மீண்டும் முகத்தைத் துடைத்துவிட்டு கதவைத் திறக்கின்றேன். வீட்டுக்கார அம்மா ரீக் கப்புடன் நிற்கின்றார். ரீ ரைம் வீட்டிலே நான் நின்றால் எனக்கும் தருவார்.

"என்ன தம்பி முகம் சில்லிட்டுப்போய் இருக்கு. நேரத்தோட வந்துவிட்டாய்."

ரீயை வாங்கிய நான் "சரியான தலைவலியா இருக்கு" என்றேன்.

"தம்பி, இப்ப வாற தலைவலி பொல்லாதது... பனடோல் போட்டனீங்களோ. விக்ஸ் இருந்தா பூசுங்கோ... இருக்கா தரவா."

"இருக்கு இருக்கு."

சரியென்று தலையாட்டிவிட்டுச் செல்கின்றார்.

நான் மெதுவாக கதவைச் சாத்திவிட்டு ரீக் கப்பை மேசையில் வைக்கின்றேன்.

மீண்டும் கட்டிலில் விழுகின்றேன்.

எந்த அர்த்தத்தில் சொல்லிவிட்டுச் செல்கிறார். என் வாலிபப் பருவத்தையா அல்லது தற்போது நிலவும் டெங்குத்தாக்கத்தின் அறிகுறியான தலை வலியையா. இப்ப வாற தலைவலி என்பதன் பொருள் என்ன?

அவள் தந்த நோய்க்கு அவளே மருந்தானால் மாத்திரமே மாற்றலாம். அவள்தான் இல்லையென்று ஆகிவிட்டதே. இப்படியே வெம்புவதா வெதும்புவதா.

எழுந்து மேசை லாச்சியைத் திறந்து பனடோல் காட்டில் இருந்து ஒரு துண்டை முறித்தெடுத்து உறையை உடைத்து இரண்டு பனடோலை தொண்டையில் போட்டு விழுங்குகிறேன். ரீயை எடுத்து நான் கட்டிலில் இருந்து குடிக்கிறேன். குடித்த பின் வெறும் கப்பை திரும்பவும் மேசையில் வைத்துவிட்டு கட்டிலில் சாய்கிறேன்.

அவளை நான் கண்டது முதல் தலைவலி வந்த இன்றுவரை மனதில் துண்டு துண்டுக் காட்சிகளாக விரிகின்றன!

நான் தங்கி இருக்கும் வீட்டின் வலப்புறம் சிறிது தூரத்தில் ஒரு வீதி சந்திக்கும். அதன் இடப்பக்கம் திரும்பினால் ஒரு தேனீர்க்கடை. சிறிய கடைதான். ஆட்கள் நாலுபேருக்கு மேல் உள்ளே இருக்க முடியாது. அவசரம் என்றால் வெளியிலும் நின்று சாப்பிடுவர். அங்கு சிற்றுண்டிகள், ரீ , பிளேன் ரீ, வேறு குளிர்பானங்கள் இருக்கும். பாசல் சாப்பாடும் இருக்கும். பாசலை வாங்கிச் செல்லலாம். பக்கத்தில் இருக்கும் ரியூட்டரிக்கு வரும் பிள்ளைகளும் அங்கு வந்து சிற்றுண்டிகள், பானங்கள் வாங்குவர். வேலைக்கு நேரம் போய்விட்டால் அங்குவந்து ஏதாவது சிற்றுண்டியும் ரீயும் குடிப்பது என் வழக்கம்.

அந்த வீதியால் சுமார் ஒரு கிலோ மீற்றர் சென்றால் பிரதான வீதி வரும். இந்தக் குறுக்கு வீதியில் பிரதான வீதிக்கு அண்மித்ததாக பல தொழில் நிலையங்கள் இருக்கின்றன. ஒரு தொழில்பேட்டை போல.

இந்தச் சிறிய கடையில் றோல்ஸ் சாப்பிட்டுவிட்டு ரீ குடித்துக் கொண்டு நிற்கின்றேன்.

மஞ்சள் நிற சுடிதார் அணிந்த பெண்ணொருத்தி அழகு நடைபயின்று வருகிறாள். கடை இருக்கும்

பக்கத்தால் வந்த அவள் கிட்ட வந்ததும் குடையின் மறைப்போடு திடீரென மறுபுறம் வெட்டித் திரும்பிச் சென்றாள். அந்தத் திருப்பம் என் மனதையும் வெட்டித் திருகி எடுத்துச் சென்றது. அவள் நான் நிற்கும் இடத்தைக் கடந்து செல்கின்றாள். காந்தமாய் என்னை இழுக்கின்றாள்.

காசையும் கிளாசையும் கொடுத்துவிட்டு அவள் பின்னே தொடர்கின்றேன். நான் செல்லவேண்டியதும் அதே வீதிதானே.

அவள் நடக்கும் நடை அழகு. அசையும் இடை அழகு. அவளின் நீண்ட பின்னல் இடப்பக்கமும் வலப்பக்கமும் நடையின் அளவுக்கேற்ற மாதிரி அங்கும் இங்கும் தாவுகிறது. அது இயல்பாகவே அசைகிறதா அவளாக ஆட்டிச் செல்கிறாளா!

ஊசியின் வழியில் செல்லும் நூல் போல அவள் பின்னே செல்கின்றேன். அவள் ஒரு தொழிற்சாலை வளாகத்தினுள் நுழைகிறாள். என் வழியில் நான் செல்கிறேன்.

அதுவரை ஒரு வாகனம்கூட விலத்திச் சென்றதாகவோ ஆட்கள் தன்னும் விலத்திச் சென்றதாகவோ இல்லை. விலத்தவில்லையோ நான் கவனிக்கவில்லையோ. என் கவனம் எல்லாம் அவளின் மேலேதான்.

அடுத்த நாளும் அவள் வருகிறாள். விலத்துகிறாள். செல்கிறாள். நான் தொடர்கின்றேன். அவள் விரைவாக நடக்கின்றாள். நானும் விரைகிறேன். அவள் இன்னும் விரைவாக நடக்கின்றாள்: பேயைக் கடதுபோல. நான் வேகத்தைக் குறைக்கின்றேன். அவள் பயப்படுகிறாள் என்று எண்ணி. அவள் தன் இடத்திற்கு திரும்புகிறாள். நான் என் இடத்திற்குப் போகின்றேன்.

அடுத்த நாள் லீவு நாள். வேலைக்குச் செல்லவிலை. அவள் நினைவு அசைபோடுகின்றது. லீவு நாள் அகன்றது. திங்கட்கிழமை வீட்டுக்கு மறுபுறம் இருக்கும் கடைக்குச் சென்று காலைச் சாப்பாட்டை முடித்துவிட்டு அவள் வரும் நேரம் வரைக்கும் தாமதித்து வீட்டுக் கேற்றுக்கு முன் நிற்கின்றேன். அவள் சந்தியைக் கடப்பது தெரிகிறது. நடக்க ஆரம்பிக்கிறேன். இப்படியே பல நாட்கள் செல்கின்றன. சில நாட்களில் பின்னால் செல்கின்றேன். சில நாட்கள் ஏதோ அவளைக் கவனிக்காதவன்போல விலத்திக் கொண்டும் செல்கின்றேன். இப்போது நான் வருவது கண்டு தொடர்வதாக பயந்து விரைவது இல்லை. இயல்பாகச் செல்கின்றாள். என்னைக் கண்டு பயப்படவில்லை என உறுதி செய்துகொண்டேன்.

சிலநாட்கள் பின்னே செல்வதும் சிலவேளை அருகருகாச் சென்று கடைகண்ணால் பார்த்துச் செல்வதும் விலத்திச் செல்வதுமாக நாட்கள் நகர்கின்றன. இவற்றை அவளும் அவதானித்திருக்கக் கூடும்.

ஒருநாள் அவள் அருகே செல்லும் போது "ஹலோ" என்றேன். குடையை மறுபுறம் சாய்த்து 'ஹலோ' என்றாள். அப்போதுதான் அவள் முகத்தைத் தெளிவாகப் பார்த்தேன். அந்தக் கணப்பொழுதே கமரா கிளிக் செய்தது போல என் மனதில் பதிந்துவிட்டாள். "எந்தக் கம்பனியில் வேலை செய்யிறியள்" என்றேன்.

"ஐசே உமக்கேன் அந்த விபரம். நான் எங்கேயும் வேலை செய்வன்" என்று சொல்லவில்லை. "தரங்கா காமென்ஸ்" என்றாள். என்னைக் கடிக்கமாட்டாள். குதறமாட்டாள் என நிச்சயித்துவிட்டேன். அதற்கிடையில் அவள் இடம் வந்துவிட்டது. பதிந்த அவளின் படத்தை உருப்போட்டுக்கொண்டு செல்கின்றேன். எல்லா நடிகைகளும் என்முன்னே வரிசை கட்டி நிற்கின்றனர். அவள்போல நெற்றி இவள்போல புருவங்கள். அடுத்தவள் போல கண்கள்.

ஒருத்தி போல கன்னங்கள். இன்னொருத்தி போல மூக்கு. வேறொருத்தி போல உதடு. இவள்போல அவள் போல என நடிகைகளின் கலவை முகமாக என்முன்னே தோன்றினாள். வேலைத் தலம் வந்துவிட்டது. அன்று வேலையில் கவனம் செல்லவில்லை.

அன்று இரவு நித்திரையும் வரவில்லை. புரண்டு புரண்டு படுக்கின்றேன். கனவிலும் அவள். நினைவிலும் அவள். அடுத்த நாள் லீவுநாள். படுக்கையை விட்டு எழ மனமில்லை. நெற்றியிலே பொட்டு வைத்தால் யார் போல் இருப்பாள்? கூந்தல் முடி சுருளாக கன்னத்தில் புரண்டால் யார்போல இருப்பாள். கிளியோ பெற்றாவை எலிசபெத் டெய்ரனிலும் பாரதியை எஸ் வி. சுப்பையாவிலும் கண்டு களித்தவர்களல்லவா நாங்கள். என் எண்ணம் காவியமாய்த் தொடர்ந்தது. இவளின் அங்கங்களை கொப்பி அடித்து இந்த நடிகைகள் வைத்திருக்கிறார்களா. திருடிகள்!

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு எழுந்தேன். பத்துமணி என மணிக்கூடு காட்டியது. கதவைத் திறந்தேன். வீட்டுக்கார அம்மா.

"என்ன சுகமில்லையா?"

"இல்லையம்மா. இண்டைக்கு லீவுநாள்தானே. அதுதான் சும்மா."

அம்மா தலையாட்டி ஆமோதித்துவிட்டுச் செல்கிறாள்.

என் சினிமா ரீலை அம்மாவுக்கு ஓட்டியா காட்டமுடியும்.

பார்ப்பதும் சிரிப்பதுமாய் சில நாட்கள் கழிந்தன. ஓரிரு வசனங்களுடன் வளர்ந்தது. குடும்ப விபரங்களை அறியும் அளவுக்குப் பேசிக்கொண்டோம். அவளுடைய தந்தை ஓய்வு பெற அரச ஊழியர். தாய் இருக்கிறார். தமையன்மார் இருவர். இருவரும் மத்திய கிழக்கு நாடொன்றில மின்னிணைப்பு மற்றும் நீர்க்குழாய் பொருத்தும் வேலையில், தம்பி ஒருவர். வேலை

இல்லை. வேலை தேடுகிறார். அவனும் மத்திய கிழக்கிற்குப் போகலாம்.

சிறிய வீடொன்று உண்டு. அவள் அந்த காமென்சில் உடுப்புகள் பொதியிடும் வேலை செய்கிறாள். அது அவளுடைய விபரம்.

ஒருநாள் அவள் சொன்னாள் "இப்ப நான் பயமில்லாமல் வருகிறேன்."

"எப்படி?"

"இல்லை முந்தி சில போய்ஸின்ரை பேச்சும் சைகைகளும் தொல்லை குடுத்துது. இப்ப இல்லை. பிறேம் நீங்க சேர்ந்து வரத் தொடங்கினாப் பிறகு."

அந்தச் சொற்கள் என்னை ஒரு ஹீரோ ஆக்கிவிட்டது.

அவளை ரவுடிகளிடம் இருந்து காப்பாற்றுவது போலவும் கனவுகள் வரத்தொடங்கின. விஜய் அஜித் ரேஞ்சில் நான். நான் அவ்வளவு பலசாலி அல்ல என்பது தெரியும். என்றாலும் கன்னியரின் கடைக்கண் பார்வை பட்டால் காளையர்கள் மலை பெயர்க்கும் பலம் பெறுவர் அல்லவா!

என் காதலை எப்படியாயினும் அவளிடம் தெரியப்படுத்திவிட வேண்டும் என்று என் மனம் ஏவியது. அவள் மறுத்துவிட்டால் அவமானமல்லவா. மறுத்தால் என்ன உலகம் அழிந்தாவிடப்போகிறது என்று ஒரு மனம் சொல்லியது. ஒன்றில் சுல்தான் அல்லது பக்கிரி. அவள் சம்மதித்தால் மகிழ்ச்சி. மறுத்தால் கவலை. ஒரு வேளை மனம் ஊக்கம் பெறும். மறுவேளை சலனப்படும்.

என் உடை நடை பாவனையில் என்னை அறியாமலே மாற்றம் வந்துவிட்டது. பிறேமிலை புதுக்களை தெரியுது. ஏதேனும் விசேசமோ என்று சக தொழிலாளிகள். நெருங்கிய நண்பன் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லை. எல்லாரிடமும் சகசமாகப் பழகுவேன். பகைமை இல்லை. உயிர் நண்பன் ஒருவன் இருந்தான். ரமேஷ் என்று பெயர். போமனுடன் கொழுவுப்பட்டு வேலையை விட்டுவிட்டான். வேறிடத்துக்குப் போய் விட்டான். எனக்கு வேறிடம் போக விருப்பமில்லை. ஏனென்றால் என் வழித்துணையை இல்லை வாழ்க்கைத் துணையை விட விருப்பமில்லை. காதல் பெரிதா நட்புப் பெரிதா!

எங்கென்றாலும் நான் தனியத்தான் போய் வருகிறேன். ஒருநாள் எந்த குறியிடமும் இல்லாமல் வெளிக்கிட்டு விட்டேன். பஜார் பக்கம் நடக்கிறேன். எதிர்பாராதவிதமாக எதிர்ப்பட்டாள். மகிழ்ச்சி. அவள் இன்னொருத்தியுடன் வருகிறாள். "ஹலோ எங்கே?" கையில் இருந்த "பாக்"கை காட்டினாள். ஏதோ டெக்ஸ்ரைலுக்கு போய் வருகிறாள்.

"இவவுக்கு பேத்டே. என்னுடைய பிரெண்ட். இதிலை ஏதாவது ரிங்ஸ் எடுப்பம் எண்டு வாறம். பிறேம் நீங்களும் வாருங்களேன்" என்றாள். அழைப்புக்குக் காத்திருந்தவன் போல அவர்களுடன் செல்கின்றேன். அவளும் நானும் எதிர்எதிராக அமர்ந்து கொண்டோம்" சினேகிதி அவள் பக்கத்தில். பரிமாறும் பையன் வந்தான்.

"மூன்று பலூடா."

"சோட்டீஸ் ஏதாவது?"

வேண்டாமென்று கையசைத்து தலையாட்டி மறுத்தாள். அவள் பேச்சு, அசைவு எல்லாம் நாட்டிய பாவம் போல இருந்தது.

பையன் உடனே கொண்டுவந்து வைத்தான்.

"எடுங்க" என்றாள்.

அவள் உறிஞ்சுவதும் விழுங்குவதும் அழகாக இருந்தது. அவள் குடித்து முடிக்கும் தறுவாய் வந்துவிட்டது.

"அண்ணா குடிங்க" என்றாள் சினேகிதி.

ஒருவிதமாக என்னைப் பார்த்துக் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டாள். நான் குடிக்காமல் அவளைப் பார்த்துக்கொண்டிருந்ததை நினைக்க வெட்கமாக இருந்தது.

நான் வேகமாக உறிஞ்சித் தள்ளினேன்.

பையன் பில்லை தட்டில் வைத்து மேசையில் வைத்தான். அவள் 'பேர்சை' எடுத்துத் திறந்தாள். நிறுத்துமாறு சைகை காட்டி நான் எனது பேர்சை எடுத்தேன்.

"பிறேம் நான்தான் உங்களை அழைத்தேன். நான்தான் பே பண்ண வேண்டும். நீங்கள் அழைக்கிற சந்தர்ப்பத்தில் நீங்கள் தாராளமாக பே பண்ணலாம்" என்று சிரித்தாள்.

அவள் சிரிப்பு, கண்ணசைவு, குளிவிழும் கன்னம் அப்பாடா என்ன அழகு. கூல்பாரை விட்டு வெளியே வந்தோம். அவர்கள் கையசைத்துச் சென்றனர்.

நான் அழைத்தால் வருவாளா. ஒரு நாளைக்கு கூப்பிட வேணும். ஒரு நாளைக்கென்ன சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அழைக்க வேணும்.

அவள் பருகியதை நான் ஆசையோடு பார்த்ததை சினேகிதி கூறிச் சிரித்திருப்பாளோ?

இன்னொருநாள் கோவிலுக்குப் போனபோது கண்டேன். ஒரு சைவப்பழமாக தாய் தங்கையோடு வந்திருந்தாள். நான் கண்டபோது என்னைக் காணாமல் வேறுபக்கம் பெற்றோரைக் கூட்டிச் செல்கிறாள். சந்தித்திருந்தால் என்னை அறிமுகப்படுத்துவாள் என்ற நப்பாசை. ஆனால் அவளோ வேறொருபுறம் கூட்டிச் செல்கிறாளே. கண்டாலும் காணாதது போல் நடித்தல் காதலர் குணமல்லவா. பின்னர் அவளைக் கண்டபோது கேட்டேன். காணவில்லை என்றாள். அது பொய்.

அன்றொருநாள் வேலைக்குப்போய்க்கொண் டிருந்தபோது மழை தூறத்தொடங்கியது. விரைந்து நடக்கின்றேன். ஏனோ அவள் திரும்பிப் பார்த்தாள். நான் வருவதைக் கண்டுவிட்டு நின்றாள். அருகே சென்றதும் குடைக்குள்ளே வாங்க பிறேம்" என்றாள். சிறிய குடை. குடைக்குள் இருவரும். குடை போதாது. கைகள் உரசின. எனக்குள் பெரிய மாற்றம். மின்சாரத் தாக்குதல். அவளின் இடம் வந்துவிட்டது.

"பிறேம் என்னைக் கேற்றில் விடுங்கள். நான் நனையாமல் போகலாம். நீங்கள் குடையைக் கொண்டு போங்கோ."

குடைப்பிடியில் இருந்து தன்பிடியை விட்டாள். இன்னும் கொஞ்சம் பயணம் நீண்டிருக்கக் கூடாதா. குடை என்னிடம். அவள் என்னோடு வருவது போன்ற உணர்வு. என்னை எங்கோ கொண்டு செல்கிறது. ஒரு கடற்கரை. அவளுடன் கைகோர்த்து மணலில் கால் புதைத்து நடக்கின்றேன். கடலலைகள் கால்களைத் தழுவிச் செல்கின்றன. பயணம் தொடர்கின்றது. பயணத்திடையே இரண்டு பிள்ளைகள் இடையே வந்துவிட்டார்கள். நால்வரும் நடக்கின்றோம். சங்கிலிப் பிணைப்பாக. எனது கை குட்டி மகளோடு மகளின் மற்றக்கை செல்ல மகளோடு. மகளின் கை ஆசை மனைவியோடு. என்ன அழகிய பயணம். வாழ்க்கை.

மழைவிட்டுவிட்டது. நான் குடையை விடவில்லை. நான் இப்போது எங்கே நிற்கின்றேன். தெரியவில்லை. சுயநிலைக்கு வருகின்றேன். எனது வேலைத் தலத்தைத் தாண்டி நீண்டதூரம் வந்துவிட்டேன். என்ன பைத்தியம். ஆனந்தக் கனவுடன் திரும்புகிறேன்.

என் நினைவுகள் அவளைச் சுற்றிச் சுற்றியே வருகின்றன. எப்படி எல்லாம் காதலை வளர்த்துக் கொண்டேன். இப்போது காய்ந்து கருகிவிட்டது.

மோசக்காரி. ஏமாற்றுக்காரி. எனக்கு திருமண அழைப்பு அனுப்புகிறாள்.

அவளுக்கு நான் என் காதலை வெளிப்படை யாகச் சொல்லி இருந்தால் என்னை ஏற்றுக்கொண்டிருப் பாளோ. நான் கேட்காதது தவறா என்றது ஒரு மனம். நடத்தையால் காதலராக நடித்துவிட்டு நேரடியாகவே சொல்லவில்லையே என்று ஏமாற்றித் தவிக்க விடுவது உனக்கென்ன தெரியாதோ என அடித்தது.

"நீங்கள் அழைக்கும்போது பில்லை நீங்கள் பே பண்ணலாம்" என்று சொன்னாளே. நீ அவளைக் கூட்டிச் சென்றாயா? சினிமாவுக்கு, பீச்சுக்கு, பாக்கிற்கு. ஒரு றெஸ்ரோரன்சுக்கு கூட்டிச்சென்று ஒன்றாக இருந்து சாப்பிட்டியா? செயலாலும் இல்லை. சொல்லாலும் இல்லை. மனசுக்குள் நினைத்துவிட்டு அவள் மீது ஏன் குற்றம் சொல்கிறாய். கோழை நீ. நல்ல காலம் அவள் ஏமாறவில்லை" என்றது இன்னொரு மனம்.

இல்லை இல்லை அவள் ஏமாற்றுக்காரிதான். என்னை அவள் ஏமாற்றிவிட்டாள்.

எவ்வளவுதான் கவனமெடுத்து வைத்தியம் செய்தும் ஆலோசனையைப் பின்பற்றாது டாக்டர்களை நோயாளிகள் ஏமாற்றுகிறார்களே. எவ்வளவுதான் கற்பித்தும் பிள்ளைகள் படிக்காது பரீட்சை எழுதி பெயில் விட்டுவிட்டு ஆசிரியர்களை ஏமாற்றுகிறார்களே. எவ்வளவுதான் நாட்டுநிலைமையை இடித்துச்சொல்லியும் அதை விளங்கிக் கொள்ளாது மக்களை அரசியல்வாதிகள் ஏமாற்றுகிறார்களே. அவள்மீது நான் எவ்வளவு அன்பு வைத்திருந்தும் என்னை ஏமாற்றி விட்டாள். அவளின் அழைப்பை ஏற்பதில்லை. அவள் கண்ணில் முழிப்பதில்லை. தீப்பெட்டியை எடுக்கிறேன். குச்சியைத் தட்டுகிறேன். அவளின் அழைப்பை தீக்குச்சிக்குப் பலிகொடுக்கிறேன். நன்றாக எரிந்து சாம்பலாகிறது. என் மனதில் நிம்மதி.

போதை இல்லாப் பூமி

இலட்சுமி புத்திரன்

பக்கத்து றோட்டுக் கடையிலே
பலூன் வாங்கப் போகையில்
பாதையோரம் வண்டி ஒன்று
வேகமாக வந்தது.

ஓட்டுனரின் உடலிலே
போதை ஏறி இருந்ததால்
ஓடிவந்த வண்டியும்
பாதை மாறிப் போனது.

தட்டுத் தடுமாறியே
வீதிவிட்டு விலகியே
மரத்தின் மீது மோதியே
மதிலை உடைத்து நின்றது.

வீட்டுக்காரர் தலையிலே
கையை வைத்துக் கத்தியே
ஓடிவந்து பார்க்கையில்
ஒருவர் மயங்கிக் கிடந்தாரே!

அயலவர்கள் கூடியே
அவரை வெளியில் தூக்கியே
அம்புலன்சில் ஏற்றியே
ஆசுபத்திரிக்கு அனுப்பினர்.

மரணம் எமக்கு தந்திடும்
மதுவை நாங்கள் மறந்திட
போதையில்லாப் பூமி ஒன்று
படைத்திடுவோம் வாருங்கள்.

சிறுவர் நாடகம்

அச்சம் இல்லை

திவ்வியராஜன்

(மேடைக்குறிப்புக்கள் :

ஆரம்பத்தில் மேடை ஓரளவு இருட்டாக இருக்கிறது. பின்னர் சிறிது சிறிதாக ஒளியை கொண்டு வரலாம். ஆரம்பத்தில் சிறுவர்கள் மேடையின் இடது பக்கத்தில் நிற்கிறார்கள். பிள்ளைகளின் தொகைக்கு ஏற்பவும் நெறியாளரின் தீர்மானத்துக்கு ஏற்பவும் வசனங்களை பிரித்துக் கொடுக்கலாம். பயம் பற்றிய வார்த்தைகள் நடிப்போடு செய்ய வேண்டும்.

நாடகத்தின் இறுதிப்பகுதியில் பாரதியின் அச்சம் இல்லை பாட்டை ({எனது பேசாப்பொருள் –பாரதி பாடல் இசைத்தட்டில் இரண்டு வகையான அச்சம் இல்லை பாடல்கள் உள்ளன.)ஒலிக்க செய்து அல்லது பாட வைத்து சிறுவர்கள் நடனம் ஆடலாம். திரையை மூட வேண்டியதில்லை, ஓரங்க நாடகமாகவே செய்யலாம்.)

(பயமூட்டும் பலவகையான சத்தங்கள்.)

பயமாய் இருக்கு
பயமாய் இருக்கு
பயமாய் இருக்கு

பேய் வருகுது
பிசாசு வருகுது
பூதம் வருகுது

பேய் எங்கை ?
பிசாசு எங்கை ?
பூதம் எங்கை ?

பேய், பிசாசு, பூதம் எல்லாம் பொய்.
அப்பிடி ஒண்டும் இல்லை.

யானை வருகுது .
எனக்கு யானைக்கு பயம்.
பூனை வருகுது.

எனக்கு பூனைக்கு பயம்.
பாம்புக்கு பயம்.
புழுவுக்கு பயம்.
வவ்வாலுக்கு பயம்.
எனக்கு உதுகள் ஒன்றுக்கும் பயம் இல்லை .

(ஒலிக்குறிப்பு: துவக்கு சூடுகள் ஹெலி , விமான சத்தங்கள் ,மக்களின் அவலக்குரல்கள். பிள்ளைகளின் மனநிலையை பாதிக்கும் வயசாக இருந்தால் இந்த ஒலிக்குறிப்புக்களை தவிர்ப்பது நல்லது.)

எங்களுக்கு சண்டைக்குத்தான் பயம்.
ஏன் சண்டை பிடிக்க வேணும்?
ஏன் ஆட்களை கொலை செய்ய வேணும் ?
எல்லாரும் சமாதானமாக இருக்கலாந்தானே...
நாங்கள் பயப்பிடக்கூடாது.

பாதகம் செய்பவரை கண்டால்

பயம் கொள்ளல் ஆகாது பாப்பா

மோதி மிதித்துவிடு பாப்பா

அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

–என்று பாரதித் தாத்தா எங்களுக்கு சொல்லித் தந்திருக்கிறார்.

நாங்கள் அநியாயத்துக்கு பயப்பிடக்கூடாது.

எங்களுக்கு பயம் இல்ல.

நாங்கள் பயப்பிட மாட்டோம்.

சண்டை இல்லாமல் எல்லாரும்

சமாதானமாய் இருக்க வேணும்.

எல்லாரும் அன்பாக இருக்க வேணும்.

றொக்கற்றில் ஏறி நாங்கள் நிலவுக்கு போவம்
நீங்களும் வாறீங்களோ...

அச்சம் இல்லை ...

அச்சம் இல்லை...

அச்சம் இல்லை

அச்சம் இல்லை பாடலுக்கு பிள்ளைகள் சேர்ந்து நடனம் ஆடுகிறார்கள்.

நிறைவு.

போதை விசரி

குழந்தை இரா. இராஜேந்திரன்

நஞ்சு படர்ந்த கண்கள்
சூரனது மடிந்த தலை
முற்றிய பூசணி போன்ற தனங்கள்
ஒருகால் குன்றிலும்
மறுகால் குழியிலும் வைப்பாள்.

டேய்! பொடி குமரா?
உன்னையும் மாலாவையும்
கண்டேன் பறாளாய் வெளியில்
ஆ... ஆ... சரி சரி நடக்கட்டும்
அரங்கேற்றுவாய் இளமை திருமணம்.

ஐஸ், குடு, மாவாவை
வருவாள் சுமந்து மடியிலே
வழங்குவாள் ஆடவர் தையலர்க்கு
"மலர்கிறது புதிய சுரண்டல் தத்துவம்"

"உறைகிறது" – உதிரம்
"கருகுகிறது" – இதயம்
"சுருங்குகிறது" – ஈரல்
"தள்ளாடுகிறது" – பாதங்கள்
"இருட்டுகிறது" – விழிகள்
இறுதியில் மரணமே!

வெட்டப்படுகிறது தகர வேலிகள்
ஒருவர் மடியில் ஒருவராகா கைபேசியோடு
இரவு பத்துமணி தாண்டி இளைஞர்
வீதிகளில் எந்நேரமும் குழுக்களாக
குழப்புதல் தகாத வார்த்தை பேசி கூட்டங்களை
ஆதிக்கம் கிராம மட்ட அமைப்புக்களில்.

கட்டுவாள் பெரிய திரை
காட்டுவாள் சினிமாப் படங்கள்
ஒலியெழுப்பி பூவர், பொக்ஸ்சால
தானும் ஆடுவாள் ஆண்களோடு!

விழுத்துகிறான் தள்ளித் தாயை
வெட்டுகிறான் வாளால் தந்தையை
வன்புணர்வு கொளகிறான் அரிவை ஊமையை
களவெடுக்கிறான் தனி மூதாட்டி உடமைகளை.

"சீரழிகிறது" – கல்வி
"பாதிக்கிறது" – நோயாளர் துயில்
"பறிக்கப்படுகிறது" உழைப்பாளி ஓய்வு
"டித்வா" கொடிய புயல் அனர்த்தம்
அழிந்தன நூற்றுக்கணக்காய் மனித உயிர்
சொத்துக்கள் இங்கே!

ஈருருளி, உந்துருளி, மகிழுந்து
நகை நட்டுக்கள் பிள்ளைகளிற்கு
மாடிகளாயின வீடுகள்
"விரும்பத்தக்கது உழைப்பால் உயர்வு"
அருவருக்கத்தக்கது போதை வாணிபம்.

இழிவாகவோ இழிவுபடுத்தவோ
நினைக்கவில்லை எள்ளளவும் பெண்களை.
ஒழியுங்கள் போதையை!
நீதிக்காக என்குரலும்!

காதலில்லாக் கலியாணம்

இதயராசன்

காதலில்லாக் கலியாணம் ஒழிந்திடக்
காரியம் செய்குவோம் – எங்கள்
கலாசாரம் இல்லாத் திருமணம்
செல்லாது என்போம்!

காதலும் காமமும்
நாணயத்தின் பக்கங்கள்;
காதலில்லாக் காமமும்
காமமில்லாக் காதலும்
சுருதி பிசகிய ஒலிகளின்
ஓலங்கள் என்போம்!

இருமணம் இணையாத
திருமண உறவுகள்
வன் கொடுமையின்
உச்சம் என்போம்!

குடும்ப வணிகத்தை,
சொர்க்கத்தில் நிச்சயிக்கும்
திருமணமாய்ப் புனைந்திருக்கும்
பொய்யுரையைப் பொசுக்கிடுவோம்!

மேம்பட்ட இன விருத்திக்கான
விலங்குப் பண்ணைகளாய்
குடும்பங்கள் திகழ்வதை
மறுதலித்துப் போர் தொடுப்போம்!

காதலில்லாக் கலியாணம் ஒழிந்திடக்
காரியம் செய்குவோம் – எங்கள்
கலாசாரம் இல்லாத் திருமணம்
செல்லாது என்போம்.

14.12.2025 இல் 'கலைமுகம்' அமுத இதழ் உரையாடல் அரங்கின் சில பதிவுகள்

21.12.2025இல் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் எழுத்தாளர் கோகிலா மகேந்திரனின் பவளவிழாப் பதிவுகள்

16.12.2025 புதுக்குடியிருப்பில் நடைபெற்ற வடக்கு மாகாண பண்பாட்டு விழாப் பதிவுகள்

ஈழத் தமிழ் எழுத்தாளர்
செங்கையாழியான் நினைவு

நாவல், சிறுகதை, புவியியல்,
வரலாற்று ஆய்வுகள், இதழியல்,
தொகுப்பு பதிப்பு பலதுறைப் பங்காளர்

ஜனவரி 25,1941-பெப்ரவரி 28.2016

இலங்கை மலையக எழுத்தாளர்
மல்லிகை சி.குமார் நினைவு

எழுத்தாளர், கவிஞர்,
ஓவியர். தொழிலாளர்
அடக்குமுறைக்கெதிராக பல
ஆக்கங்களைப் படைத்தவர்.

ஜனவரி 04 ,1944-ஜனவரி 27,2020

06.12.2025 அன்று மக்கள் கலை இலக்கியப் பேரவை மல்லாகத்தில் நடாத்திய பேராசிரியர் க. கைலாசபதியின் 43வது ஆண்டு நினைவு நிகழ்வு - மல்லாகம், யாழ்ப்பாணம் பதிவுகள்



ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர்
சுபைர் இளங்கீரன் நினைவு

நாவல், சிறுகதை, வானொலி
நாடகம், இலக்கியக் கட்டுரை,
இதழியல், பலதுறைப் பங்காளர்

ஜனவரி 4, 1927-செப்டம்பர் 12. 1997

ஈழத் தமிழ் எழுத்தாளர்
செம்பியன்செல்வன் நினைவு

நாவல், சிறுகதை, உருவகம்,
குறுங்கதை, நாடகம், திரைப்படம்,
கட்டுரை, இதழியல், பலதுறைப்
பங்காளர்

ஜனவரி 1, 1944-மே 21. 2005